www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற


# தமிழோசை

THAMIZHOSAI

உள்ளே....



* மன்றத்தில் ஒலித்தவை
* நம் காலத்து அற்புதம்
* திராவிட மாயை
* மீண்டும் நேரு பரமபரை
* தமிழகத்தில் நாடகவிழா
* வியாழ மாற்றம்
* சொற்சதுரங்கம்
* சிறுகதை
* டயானா கேற்



ஓசை : 1
ஒலி : 6 ஆங்கிரஸ ஞு ஆவணி மீ 26ந் திகதி (11/25-9-1992)


253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611

# கொழும்பு அகதி முகாம்கள் மூடப்படும் 20 ஆயிரம் பேர் திருப்பி அனுப்பப்படுவர்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து கொழும்பில் அகதிகளாகத் தங்கியிருக்கும் 20 ஆயிரம் பேரையும் அப்பிரதேசங்களுக்கு திருப்பி அனுப்பிவிட்டு, இம்மாத முடிவுக்குள் அகதி முகாம்களை மூடிவிட இலங்கை அரசு தீர்மானித்திருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே தொடரும் மோதல்களில் பாதிப்புற்று கொழும்புக்கு இடம்பெயர்ந்த இவர்கள், கொழும்பில் நான்கு முகாம்களில் தங்கியிருக்கிறார்கள். வெள்ளவத்தை பிள்ளையார் கோவில், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபம், முகத்துவாரம் பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் இம்முகாம்கள் இப்போது அமைந்துள்ளன. இரண்டு ஆண்டுகளாக இயங்கிவரும் இம்முகாம்களை சமூக சேவைத் திணைக்களம் நிர்வகித்து வருகிறது.

யாழ்ப்பாணத்தைத் தவிர ஏனைய பிரதேசங்கள் யாவும் தற்போது இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதால் அப்பிரதேசங்களில் இவர்களைக் குடியமர்த்திவிட்டு முகாம்களை மூடிவிடப்போவதாக அரசு தெரிவிக்கிறது.

ஒவ்வொருவரும் தத்தமது சொந்த பிரதேசங்களில் குடியமர்த்தப் படுபடுவரென்றும் இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத யாழ்ப்பாணப் பிரதேசத்தவருக்கு மாத்திரம் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டிலிருந்தும் அகதிகள் தாண்டிக்குளம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் தஞ்சமடைந்திருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் சுய விருப்பமின்றி பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதாக தமிழக பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு பண்ருட்டி ராமச்சந்திரன் தாக்கல் செய்தமனுவை அடுத்து சென்னை உயர் நீதிமன்றம் இத் தடையை ரத்து செய்து அகதிகளை திருப்பி அனுப்ப அனுமதியளித்துள்ளது.

இவ்வாண்டு ஆகஸ்ட் 31ஆம் தேதி 132 பேரடங்கிய தமிழர் குடும்பங்கள் ஏயர் இந்தியா விமான மூலம் திருமலை சீனன்குடா தளத்திற்கு அனுப்பப்பட்டனர். வட பகுதியைச் சேர்ந்தவர்களான இவர்கள் அனைவரும், புகையிரத மூலம் வவுனியா அனுப்பப்பட்டு தாண்டிக்குளம் அகதிமுகாமில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



கடந்த மாதம் 29ஆம் தேதி லண்டனில் அரங்கேறிய பீற்றர் லொக்கெற். பிரபல மிருதங்கமேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியின் சிஷ்யர். அற்புதமாக வாசிக்கிறார். அதுமாத்திரமல்ல ஜதிகோவை களை நறுக்குத் தெறித்தாற்போல் உச்சரிக்கிறார். நாட்டியத்துக்கு நட்டுவாங்கம் செய்யப்போகிறார்.

# குண்டு வெடிப்பில் 37 பேர் பலி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மூதூருக்கும் சேருவலைக்குமிடையே படகுப் பாதையொன்று நேற்று வியாழக் கிழமை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதில் 25 இராணுவத்தினரும் பொதுமக்களில் 12 பேரும் கொல்லப் பட்டதாக இராணுவம் அறிவித்தது. 21 சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

மூதூருக்கும் சேருவலைக்குமிடையேயுள்ள அயிலைக்குளம் படகுப்பாதையில் இராணுவ 'டிரக்' ஒன்றுக்கு வைக்கப்பட்ட குண்டு வெடித்ததிலேயே இது நிகழ்ந்ததாக சொல்லப்படுகிறது. குண்டு வெடித்ததில் இராணுவ ட்ரக் தகர்ந்தது. பயணஞ்செய்தவர்களில் மூவர் மாத்திரமே உயிர் தப்பியதாகவும் அதில் இருவர் இராணுவத்தினர் எனவும் தெரிவிக்கப்பட்டது. மீட்கப் பட்ட சடலங்களில் 19 இராணுவத்தினருடையது.

இதே வேளை நேற்று முன் தினம் புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட மணலாறு (வெலிஓயா) பகுதியில், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைப் படையணி ஒன்று நிலக்கண்ணி வெடியில் சிக்கி, குறைந்தது 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டுள்ளனர். வழமையான ரோந்துப் பாதையில் மேற்படி இராணுவத்திரைத் தாங்கிய ட்ரக் வண்டி செல்கையில், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில், இவ் இராணுவத்தினர் பலி கொள்ளப் பட்டனர்.

அன்று மாலை விடுதலைப் புலிகள் நடமாட்டம் அவதானிக்கப்பட்ட இப் பகுதியை அண்மித்த காட்டுப்

16ம் பக்கம் பார்க்க

# ஹங்கேரியில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலை

(நமது நிருபர்)

ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டில் 3 மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 51 இலங்கைத் தமிழர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஹங்கேரியில் அரசியல் புகலிடம் தேடி வந்த இவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டதோடு இம்சைக்குள்ளாக்கப்பட்டதாகவும் உரிய வசதிகள் அளிக்கப்படவில்லை என்றும் முறையிட்ட இவர்கள், ஹங்கேரிய அரசு தம்மை அகதிகளாக அல்லது அரசியல் தஞ்சம் கோருபவர்களாக நடத்த வேண்டும் என்றும் வற்புறுத்தி இம்மாதம் 7ந் தேதி முதல் சாகும்வரை உண்ணா விரதமிருக்கப் போவதாக அறிவித்தார்கள்.

தங்களுடைய முடிவை அவர்கள் ஐ.நா.சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர்கள் செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட்ட பல்வேறு நிறுவனங்களுக்கும் பல்வேறு பத்திரிகை, தொலைக் காட்சி நிறுவனங்களுக்கும் அறிவித்திருந்தார்கள். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகளில் 8ந்தேதி இவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக புடாபெஸ்ட் ஐ.நா.உயர் ஸ்தானிகர் லண்டன் தமிழ் தகவல் நடுவத்துக்கு அறிவித்துள்ளார். குறுகிய கால வதிவு அநுமதி இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஹங்கேரியின் செஞ்சிலுவைச் சங்க முகாமில் இவர்களுக்கு எவ்வித நடமாட்ட தடையுமின்றி தங்குமிட வசதிகள் அளிக்கப் படுமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இவர்கள் தொடர்பான விசாரணைகளை ஐ.நா.உயர் ஸ்தானிகர் ஆரம்பித்துள்ளார். இவ்விசாரணைகள் இம்மாத இறுதிவரை நடைபெறும். அகதிகளாக அங்கீகரிக்கப்படுவர்களுக்கு ஐ.நா. தீர்மானத்தின்படி ஹங்கேரியில் அகதிகள் அந்தஸ்து வழங்கப்படும். மற்றையோர் மீதான நடவடிக் கைபற்றி ஹங்கேரி அதிகாரிகள் முடிவு செய்வார்கள்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் 13பேர் பெண்கள்.

லண்டனிலிருந்து வெளியாகும் அனைத்துலக தமிழர் பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாத வித்தியாலயவைச் சேர்ந்த சங்கீத வித்வான் திருமதி கலைவாணி இந்திரகுமாரின் மாணவியான செல்வி துவாரகா வேற்பிள்ளையின் வயலின் அரங்கேற்றம் இம்மாதம் 6ஆம் தேதி றைஸ்லிப் வின்ஸ்டன் சேர்ச்சில் மண்டபத்தில் நடை பெற்றது. திரு முத்து சிவராசா மிருதங்கம், திரு பாஸ்கரன் ஸ்ரீகரம் கடம், திரு கந்தையா சிதம்பரநாதன் மோர்சிங் வாசித்தார்கள். துவாரகா கிங்ஸ்பரி யைச் சேர்ந்த டாக்டர் எம்.வேற்பிள்ளை, டாக்டர் (திருமதி) வேற்பிள்ளை தம்பதியரின் புதல்வி யாவார்.

For All Your Legal Needs
SRI KANTH & CO
SOLICITORS
N.Balakrishnan L.L.B
S.Srikanthalingam B.A
Assistant
Mrs Kamalika Ratnayake
SRI KANTH & CO
1st Floor
604 High Road
Wembley
Middx HA0 2AF
TEL:081 795 0648
FAX:081 795 0649
MOBILE: 0831 195979

FOR SALE
News Agent with 3 Bed Rooms & Basement
Turnover £3000 per WeeK
Bills £1200 per Week
Agents for London Transport
Good Location
&
Mini Shopping Centre in well populated area 10Mts Walk from Eastham Tube station
FOR QUICK SALE
£ 129,000
or
Lease Available
Ideal Investment for hard Working Couple
Tel:
081- 471 2348

## சன்றைஸ் வானொலி

### தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சிகள்

*(மத்திய அலை 212 மீற்றர் 1413 கிலோஹேர்ட்ஸ்; லெஸ்டரில் 1260 கிலோஹேர்ட்ஸ்)*


**14.09.92**

பி.ப 10.02– செய்திகள்
10.07– இசையும் இலக்கியமும்
10.20– வாழ்த்துவோம்
10.30– 'தனிமையில் இனிமை' சிறப்புப் பேட்டி
திருமதி சரஸ்வதி பாக்கியராசா
11.00– ஒலிபரப்பு முடிவு.

**21.09.92**

பி.ப. 10.02– செய்திகள்
10.07– பக்திப் பாடல்கள்
10.20– வாழ்த்துவோம்
10.30– பாட்டும் போட்டியும்
11.00– ஒலிபரப்பு முடிவு

## என்.எஸ்.கே 70 வயது



(நமது நிருபர்)

'தமிழ் டைம்ஸ்' சஞ்சிகையின் பொறுப்பாளரான திரு என்.எஸ். கந்தையா இம்மாதம் 7ஆம் தேதி 70 வயதை அடைந்திருக்கிறார்.

'தமிழ் டைம்ஸ்'டன் 'ஸ்கொட்' நிறுவனம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்று லண்டனில் தமிழர்களின் பொது வைபவங்கள் பலவற்றோடும், நடவடிக்கைகளோடும் தம்மை இணைத்து சளைக்காது உழைத்து வருபவர் திரு கந்தையா.

யாழ்ப்பாணத்தில் கந்தரோடையைச் சேர்ந்த இவர், ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் ஆசிரியராகவிருந்தார். பின்னர் தேசிய வங்கியில் பணியாற்றியவர், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிரதேச முகாமையாளரானார். 1975இல் குடும்பத்தினருடன் லண்டன் வந்த இவர் முதலில் லண்டன் போக்குவரத்து அமைப்பிலும் பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினார். 1987இல் ஓய்வு பெற்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சின்னத்தம்பி

*முன்னாள் ருட்டிங் சிவ்-ராஜ் என்ரபிறைஸ் ஸ்தாபகர் திரு சிவசுப்பிரமணியத்தின் (சிவா) தாயார் பூநகரி திருமதி செல்லம்மா சின்னத்தம்பி 09.09.92இல் காலமானார். இறுதிக்கிரியைகள் 12.09.92 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு Streatham Vale Crematorium இல் நடைபெறும்.*

தகவல்: சி.சிவசுப்பிரமணியம்
24 THE GROVE, COULSDON,SURREY
Tele: 081-645 0324

## தமிழோசை

### சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.

(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ______________________
Address: ______________________
______________________
______________________
______________________
Postcode: ______________________

| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO
THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM

# இசைத்தேர்வு முடிவுகள்

(நமது நிருபர்)

*லண்டன் நுண்கலை நிறுவனம் (Acadamy Of Fine Arts) இவ்வாண்டு யூலை 25, 26ந் தேதிகளில் நடாத்திய கர்நாடக இசை பொதுதேர்வின் முடிவுகள் இங்கு தரப்படுகின்றன. வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம் ஆகியவற்றில் வெவ்வேறு பிரிவுகளில் இத்தேர்வுகள் நடைபெற்றன.*

## ஜூலை 1992

### வீணை

தரம் 1
மதுரா பத்மநாதன் D
பற்றீசியா ரஜனி பிலோமின் P
பிரியங்தி செல்லத்துரை M
ஹரி சிவநேசன் D
கௌதமி சிறிரங்கநாதன் P
அகிலன் விவேகானந்தராஜா P
காயத்திரி வீரவாகு M

தரம் 2
லக்ஷிகா இந்திரமோகன் M
லக்ஷ்மி திருயோகசத்தி ஜயபால சிங்கம் D
நிமலன் இளங்கோவன் M
ஷர்மினி ராஜகோபால் M
மேனகா ராஜரத்தினம் D
சைனிகா சிவதாசன் D
துஷனி ஸ்கந்தசண்முகராசன் M
குமுதன் சிறிஸ்கந்தராசா D
ஷரோன் அனுஷா தனஞ்சயராஜ சிங்கம் D
நிலானி தெய்வேந்திரம் M
வதனி விஜயரத்னா M
மீரா விவேகானந்தா M

தரம் 3
சங்கீதா ஆனந்தகுமாரசாமி M
பிருந்தா சந்திரபாலன் M
பிராமி ஜெகதீஸ்வரம்பிள்ளை D
தேனுகாஜெகதீஸ்வரம்பிள்ளை M
சஞ்ஞினி கனகரத்தினம் M
கல்பனா கணேசன் D
தனுஷா லோகேந்திரன் M
நிர்திரா மகேந்திரரவிராஜ் M
வத்சலா மோகன் D
துளசி மோகனதாஸ் M
கல்யாணி நந்தன் M
சோபனா பூபாலசுந்தரம் M
ஷர்மீலி சர்வானந்தன் D
நிமலன் சிவகுமாரன் D
ரமணன் சிவகுமாரன் D
கஜந்தி சிறிகாந்தா M
வாசுகி சிறிஸ்கந்தராஜா M
மீரா தயாளன் M
றோகன் அகிலன் யோகநாதன் M

தரம் 4
கார்த்திகா சிவநாதன் M
தாரகா சிவநாதன் M

### வாய்ப்பாட்டு

தரம் 1
சுபாங்கி பாலசுப்பிரமணியம் M
வகுல மாலிகா நாராயணன் D
அந்தனி பிலோமின் M
பற்றீஷியா ரஜனி பிலோமின் M
ஹரி சிவனேசன் D

தரம் 2
லக்ஷிகா இந்திரமோகன் M
ஷர்மிளா ஜெகநாதன் D
லக்ஷ்மி திருயோகசத்தி ஜெயபால சிங்கம் M
சங்கரி மனோரஞ்சன் P
சோபனா பூபாலசுந்தரம் M
ஹம்ஷினி ரகுநாதன் D
ஷர்மினி ரகுநாதன் D
தேஷானி சண்முகலிங்கம் M
மீரா சிவனேசன் D
முரளி சிறிபாலஸ்கந்தா M
சரோன் அனுஷா தனஞ்சயராஜ சிங்கம் D
ஷெரேன் தனஞ்சயராஜசிங்கம் D
நிலானி தெய்வேந்திரம் M
ஜூலியானா பஷமாலா வசந்த குமார் M
நிரஞ்ஜலா லூர்து வசந்தகுமார் M
மீரா விவேகானந்தா P

தரம் 3
பிருந்தா சந்திரபாலன் D
பைரவி கணேஸ்வரன் D
பிராமி ஜெகதீஸ்வரம்பிள்ளை M
தேனுகா ஜெகதீஸ்வரம்பிள்ளை M
நிர்திகா மகேந்திரரவிராஜ் M
ராதிகா மகேந்திரரவிராஜ் M
தனுஷா மகேஸ்வரன் D
வாசுகி சிறிஸ்கந்தராஜா M

தரம் 4
சஞ்சினி கனகரத்தினம் M
அனிதா சண்முகதாசன் M
தாரகா சிவநாதன் M
கார்திகா சிவநாதன் D

தரம் 5
சுஜயா சந்திரன் D

### வயலின்

தரம் 1
லவண்யா புருஷோத்தமன் D
ராமிலா ரபீந்திரா M
ஷரேன் தனஞ்சயராஜசிங்கம் M

தரம் 2
மாதங்கி பாலசுப்பிரமணியம் D
தர்ஷினி லோகநாதன் M
கௌரி மகேந்திரன் M

தரம் 4
பைரவி கணேஸ்வரன் D

### புல்லாங்குழல்

தரம் 2
அமலன் கனகரத்தினம் M

### மிருதங்கம்

தரம் 1
இளங்கோ கணேசமூர்த்தி P
அந்தனி பிலோமின் M
சிவந்தன் ராஜேந்திரன் P
சிவரூபன் ராஜேந்திரன் M
மயூரன் செல்வேந்திரன் P
சத்தியன் செல்வேந்திரன் P
நரேஷ் வன்னியசிங்கம் M

தரம்2
பற்றிக் துஷன் ஜோசப் (செய்முறை) M
கவின் சச்சிதானந்தன் (செய்முறை) M

D: 75க்கு மேற்பட்ட புள்ளிகள்
M: 60–74 புள்ளிகள்
P: 50–59 புள்ளிகள்

# உரைகல்

'தமிழோசை' மிக அற்புதமாக அமைந்திருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. செய்திகளைத் தருகின்ற விதம், அச்சு நேர்த்தி ஆகியவை மிக நன்றாக அமைந்திருக்கின்றன. விமல் சொக்கநாதனின் கட்டுரைகள் பொது அறிவுக் களஞ்சியமாகவே திகழ்கின்றன.

ராணி மைந்தன்
சென்னை

பத்திரிகை நன்றாக இருக்கிறது. விமல் சொக்கநாதனின் உலக விவகாரம், சோ.சிவபாதசுந்தரத்தின் பழைய நினைவுகள், சாலியின் அரசியல் கட்டுரை என்னை வெகுவாகக் கவர்ந்தவை. பெருமகிழ்ச்சி. எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

எஸ்.எம்.கோபாலரத்தினம்
'ஈழநாடு' முன்னாள் உதவி ஆசிரியர்
திருச்செந்தூர்
இந்தியா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சரம்

### 29.8.92

இலங்கையின் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தெற்கில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக பணிபுரியும் ஆசிரியர்கள் உடனடியாக தத்தமது பாடசாலைகளுக்கு கடமைக்கு திரும்ப வேண்டும் என்றும் அல்லது பதவியில் இருந்து நீக்கப்படுவர் என்றும் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பணிப்புரை வழங்கியமை குறித்து பலத்த சர்ச்சை கிளம்பியுள்ளது.

சுமூக நிலை, பாதுகாப்பு தொடர்ந்தும் அப்பகுதிகளில் கேள்விக்குறியாக இருக்கும்போது இவ்வுத்தரவு மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டும் உள்ளது.

*****

திருகோணமலை தம்பலகாமம் தெற்கில் 5 கிராமங்கள் தீப்பற்றி எரிந்து சாம்பராகியுள்ளன. மனித நடமாட்டங்கள் வறட்சியினால் பாதிப்புற்றிருந்த நிலையில் தீ, அதிவேக கதியில் கிராமங்கள் சுடுகாடாக்கியுள்ளன. 'தீ' பற்றியதற்கான காரணம் எவற்கும் தெரியவில்லை.

*****

ஆனையிறவில் பெரிய பச்சிலைப் பள்ளிக் கிராமத்தில் இராணுவம் காவல் அரண்கள் விடுதலைப்புலிகளினால்தாக்கப்பட்டு 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

*****

ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலர், பத்மநாபா கொலை வழக்கில், குற்றம் சாட்டப்பட்டு, தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் தி.மு.க.அமைச்சர் சுப்புலஷ்மி அவரது கணவன் ஜெகதீசன், வை.கோபாலசாமியின் சகோதரர் ரவிச்சந்திரன் ஆகியோரை நிபந்தனையுடன் பிணையில் செல்ல சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

*****

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி கொழும்பு தெகிவளையில் காரில் செல்லும்போது அரசு ஆதரவாளர்கள் என நம்பப்படுவோரால் தாக்கப்பட்டுள்ளார். அவரது மூன்று மெய்பாதுகாவலர்களும் வெட்டி காயப்படுத்தப்பட்டனர்.

### 30.8.92

யாழ்ப்பாணத்தில் இருவருடங்களாக கைதிகளாகவுள்ள 41பொலீசாரையும் இராணுவ வீரரையும், அவர்களது பெற்றோர் உறவினர்கள் வந்து பொறுப்பேற்றபின், விடுதலை செய்வதாக விடுதலைப்புலிகள் கூறியதைக் குறிப்பிட்டு, இக் கைதிகள் உறவினர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக ஆவன செய்ய மனிதவள பாதுகாப்பு இயக்கத் தலைவர் வண.அஸ்லஜி தேரோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியை நாடியுள்ளார்.

### 31.8.92

மட்டக்களப்பு, அம்பாறை எல்லைப்புறக் காடுகளில் படைகள் பாரிய தேடுதல் ஒன்றை ஆரம்பித்தனர். இதனை யண்டிய தமிழ்க் கிராமங்கள்மீதும் தொடர்ந்து தேடுதலில் பல இளைஞர்கள் சந்தேகத்தில் முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.இதன் தொடர்ச்சியாக அண்மையில் உள்ள கடற்பிரதேசத்தில் இருந்து பீரங்கி தாக்குதல்களும் நடாத்தப்பட்டுள்ளன.

*****

திருமலை நகர தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டு 11 பயணிகள் கொல்லப்படடுள்ளனர். ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

### 31.8.92

ஊர்காவற்துறை கண்ணி வெடியில் கொல்லப்பட்ட றியர் அட்மிரல் மோஹான் ஜயமஹாவின் வெற்றிடத்திற்கு புதிய வடபிராந்திய கடற்படைத் தளபதியாக கப்டன் தனபிரிய குமரசிறி நியமிக்கப்பட்டுள்ளார்

*****

திருமலை முத்துநகர் அகதி முகாமில் முஸ்லீம் மக்கள் தங்கியிருந்த 36 குடிசைகள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன. தற்செயல் விபத்து என கூறப்பட்டுள்ளது.

### 1.9.92

மட்டக்களப்பு கல்முனையை அடுத்துள்ள சாய்ந்தமருது சந்தையில், சைக்கிள் பெட்டி ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்து 34 பேர் கொல்லப்பட்டு 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பெரும்பான்மை முஸ்லீம் மக்கள் பாதிக்கப்பட்ட இப்படுகொலையின் எதிரொலியாக, அக் கிராமத்தைச் சூழ தமிழர்கள் பலர் தாக்கியும் வெட்டப்பட்டும் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டும் அனர்த்தனங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. இதனை அடக்க படைகள் உசார் படுத்தப்பட்டதுடன் அப்பகுதி தமிழ்க் கிராமங்களில் தமிழர்கள் அனாவசியமாக நடமாட வேண்டாமெனவும் அறிவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

### 2.9.92

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இருப்பிடங்களை விட்டுஅகதிகளாக வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு இதுவரை அரசினால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவுப் பொருட்கள் 50 சத வீதத்தால் குறைக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே அரசின் நிவாரணத்தில் மாதத்தில் அரைப் பகுதி நாட்களுக்கே போதுமானதாக இருந்து வந்த உணவு இப்படி இன்னமும் அரைவாசியாக குறைக்கப் படும்போது சுமார் இரண்டு இலட்சம் தமிழ்பேசும் குடும்பங்கள் பட்டினி அபாயத்தை எதிர்நோக்க நேரிடும் என தமிழர் அமைப்புகள், தொண்டர் ஸ்தாபனங்கள் அரசைக் கண்டித்துள்ளன.

### 3.9.92

குடாநாட்டை வெளிமாவட்டத்துடன் இணைக்கும் ஒரே ஒரு பொதுமக்கள் போக்கு வரத்து பாதையான கிளிநொச்சி- கிளாலி கடல் ஏரிப்பாதை முடப் படுவதாக படைகள் அறிவித்துள்ளன.

பயணம் செய்ய உபயோகிக்கு மாறு படைகள் வலியுறுத்தும் ஆனையிறவுப்பாதை தொடர்ந்தும் விடுதலைப் புலிகளால் தடைசெய்யப்பட்டே உள்ளது.

### 4.9.92

வடபகுதிக்கு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கும் பொருட்களை வவுனியா தாண்டிக்குளமூடாக இரவு வேளைகளில் கடத்திச் சென்று தரகர்களுக்கு விற்று வந்த இரு பொலீசாரும், இராணுவ வீரரும், கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளனர்.

### 6.9.92

யாழ் ஊர்காவற்றுறையில் இயங்கி வரும் பொலீஸ் நிலையத்தின் துணை நிலையமாக நயினா தீவில், புதியபொலீஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக இளவாலையில் பொலீஸ் நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

*****

தமிழ்- முஸ்லீம் கட்சிகளிடையே நடைபெறும் பேச்சுக்களில், ரெலோ இயக்கம் இனி பங்கு பற்றாதுஎன அதன் அரசியல் ஆலோசகர் திரு ஸ்ரீ காந்தா அறிவித்துள்ளார்.

தீர்வு இணக்கம் காணப்படாமல் இழுபட்டு வரும் போக்குகள் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்பதே நோக்கமெனறும் இதில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் அண்மைய கால போக்குகள் திருப்தி தருவதாக இல்லையென்றும் கூறிய அவர், தமிழர்களின் 4 அம்ச திட்டத்தின் வெற்றிக்கு ரெலோ தொடர்ந்து பங்களிப்பு செய்யும் என்றும் கூறியுள்ளார்.

அம்பாறை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து மட்டக்களப்பு, காரைதீவு அகதி முகாமில் தங்கி இருந்த 16 பேர் வெளியில் சென்றபோது இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டனர். இதுவரை இவர்களது விபரம் யாருக்கும் அறிவிக்கப்படவில்லை.

### 07.09.92

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான ஏழு தமிழ்க்கட்சிகளின் அவசர சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசின் இழுத்தடிக்கும் போக்குகளைக் கண்டித்து ரெலோ இயக்கம் வெளியேறியது தொடர்பாக இதர கட்சிகள் ஆராய்ந்தன.

தீர்வுத்திட்ட ஆலோசனைகளை 11 ம் திகதி பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பதிலளித்துள்ளது.

### 08.09.92

வட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் திரு.பொன் ராம் ராஜகாரியர் இரண்டரை வருட கால தலைமறைவிற்குப் பின்னர், திருமலை நகர் சென்று, முன்னைய மாகாணசபை அலுவலகத்தில் தனது பதவியை பொறுப்பேற்றுள்ளார்.திடீரென இடம் பெற்ற இப் பதவிப் பொறுப்பேற்பு தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாதென,இவரை முன்னர் பதவியில் அமர்த்திய ஈபிஆர்எல்எப் அமைப்பு கூறியுள்ளது.

*****

திருகோணமலையில் இராணுவம் பலி.

திருமலை சூரங்குப்பாலம் அருகே பாலம்போட்டாறில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதுங்கித் தாக்குதலில், 8 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டு ஐவர் காயமடைந்துள்ளனர்.கண்ணிவெடியை வெடிக்க வைத்து, மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவம் மீளத்தாக்கியதாகத் தெரியவரவில்லை.பின்னர் அப் பகுதியைச் சூழ்ந்த மேலதிக படையினர், அப் பகுதியில் தேடுதல் நடாத்தி, அங்கிருந்த 7 பொது மக்களை விசாரணைக்காக முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

### 9.9.92

மணலாற்றில் 14 படைகள் பலி.

முல்லைத்தீவு மாவட்ட மணலாறு (வெலிஓயா) பகுதியில், ரோங்குப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைப் படையணி ஒன்று நிலக்கண்ணி வெடியில் சிக்கி, குறைந்தது 14 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். வழமையான ரோங்குப் பாதையில் மேற்படி இராணுவத்தி ரைத் தாங்கிய ட்ரக் வண்டி செல்கையில், விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில், இவ் இராணுவத்தினர் பலி கொள்ளப்பட்டனர்.

அன்று மாலை விடுதலைப் புலிகள் நடமாட்டம் அவதானிக்கப்பட்ட இப் பகுதியை அண்மித்த காட்டுப் பகுதிகள் மீது, விமானங்கள் குண்டுகள் வீசித்தாக்கியுள்ளன.சேதவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுவதாகவும்,பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விபரங்கள் வெளியிடப்படாதென்றும், பிரதமர் டி.பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

### 10.09.92.

யாழ்ப்பாண குடாநாட்டில் தற்பொழுது, 188 அகதி முகாம்களில் 17 ஆயிரத்தி 367 குடும்பங்கள் தஞ்சம்புகுந்துள்ள அதே வேளை, 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் முகாம்களிற்கு வெளியே அகதிகளாக வாழவைக்கப்பட்டுள்ளனர்.பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர், இவ் அகதிகளின் தொகை 2 இலட்சத்து 43 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் உள்ள சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் அகதிகளாக உள்ள நிலையில்,மேலுமொரு இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் முழு குடாநாடுமே அகதிகள் முகாமாகிவிடுமென யாழ் பிரஜைகள் குழு மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜரில் தெரிவித்துள்ளன. இன்நிலையில் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் அரசு' இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமென்றும். அப்படியானால்' அதனை பரிசீலனை செய்ய விடுதலைப் புலிகளை தாம் வற்புறுத்த முடியுமென்றும் இவ் அமைப்புகள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

## சதிகாரர் யார்?

இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெறவிருந்த கால கட்டத்தில் வி.பி.சிங், கருணாநிதி, புலிகள் தலைவர் ஆகியோரின் எதிரியாக ராஜிவ் காந்தி இருந்தார் என்றும், இதனால் அரசியல் சூழ்நிலையை மையமாக வைத்து, புலனாய்வு செய்தால், படுகொலைச் சதிகாரர் யார்? அவர்களுக்கு சாதகமான சூழ்நிலை யாரால் ஏற்பட்டது? என்ற உண்மைகள் தெரியவரும் என தமிழக காங்கிரஸ் தலைவர் திரு வாழைப்பாடி ராமமூர்த்தி 'ஜெயின்' கமிஷனிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

## ஜனாதிபதி வெற்றி

இலங்கை நீதி நிர்வாக சரித்திரத்தில் மிகவும் நீண்டதான 527 நாட்கள் விசாரணை செய்யப்பட்ட 1988ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுமீதான வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

1988, டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத அளவுக்கு வன்முறை பயமுறுத்தல் இருந்தது என்ற காரணத்தினால், இத் தேர்தலை செல்லுபடியற்றதாக்குமாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, கொழும்பு உயர் நீதி மன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

'89 யூன் 19ம் தேதி முதல், '92 யூன் 30ம் தேதிவரை நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையில் 977 இருதரப்பு சாட்சிகளின், 27 ஆயிரம் பக்கங்கள் கொண்ட சாட்சியங்கள் பதிவாகின.

88 பக்கங்களில் எழுதப்பட்ட பிரதம நீதியரசர். ஜி.பி.எஸ்.டி சில்வாவின் தீர்ப்பில், திருமதி பண்டாரநாயக்காவின் குற்றச்சாட்டை சட்டத்தரணிகள் நிரூபிக்க வழக்கை தவறிவிட்டனர் என்றும் எனவே, 9 இலட்சத்து 8 ஆயிரம் ரூபா செலவுத் தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## மக்களுக்கு அழைப்பு

"யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர இலங்கை பங்தோபஸ்து படைகள் தயாராகின்றன. இது அவர்கள் மண்ணைக் கைப்பற்றவே உதவும். ஆனால் விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்தவோ, இலக்குகளைக் கட்டுப்படுத்தவோ முடியாது"

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் பேச்சாளர் திரு யோகி விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு முழுவதையும் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதன் மூலம், விடுதலைப்புலிகளை அழிக்கஇந்தியப்படை முயற்சி செய்தது. ஆனால் அந்த இலக்கை அடைய அவர்கள் தவறிவிட்டனர் எனவும் கூறிய திரு யோகி பங்தோபஸ்துப் படைகளுக்கு எதிராகப் போரிட, பொது மக்களை இணையுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சிவசங்கரியின் புதிய முயற்சி

பிரபல எழுத்தாளர் சிவசங்கரியின் இலக்கியச் சேவை இந்த ஆண்டு வெள்ளிவிழா காண்கிறது. இதையொட்டி சென்னையில் பாராட்டு, விழா ஒன்று நடைபெற்றது. 'இலக்கியத்தின் மூலம் இந்தியாவை இணைக்கும்' புதிய திட்டமொன்றின் தொடக்கமாகவும் அந்தப் பாராட்டு விழா அமைந்தது. இத்திட்டம் பற்றி சிவசங்கரி விளக்கினார். "இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும்- அனைத்து மொழியிலும் உள்ள- இலக்கங்கள் பற்றியும், இலக்கியப் படைப்பாளிகள் பற்றியும் விரிவானதொரு ஆராய்ச்சியை மேற்கொண்டு ஒரு மொழியின் இலக்கிய வளத்தையும், இலக்கிய கர்த்தாவையும் இன்னொரு மொழியினர் புரிந்து கொள்ளச் செய்வதே இப்பணி. இனி மூன்றாண்டுக் காலத்திற்கு இப்பணியில் நான் தீவிரமாக ஈடுபடவிருக்கிறேன். ஒவ்வொரு மொழியின் சிறந்த படைப்பாளிகளை நான் நேரில் சந்திப்பேன். உரையாடுவேன். அம்மொழியின் இலக்கிய வளர்ச்சி எந்த வகையில் அமைந்துள்ளது என்பதை விரிவாகப் புரிந்து கொண்டு, இத்திட்டத்தின் விளைவாக அவற்றைத் தொகுத்து புத்தகமாகக் கொண்டு வருவேன். அனைவரும் புரிந்து கொள்ள வசதியாக அந்த நூலை ஆங்கிலத்தில் எழுதவிருக்கிறேன்" என்று விளக்கினார் சிவசங்கரி. 'இந்தியாவை இந்தியாவுக்கும் இந்தியனை இந்தியனுக்கும் அறிமுகப்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

விழாவில் பிரபல எழுத்தாளர்கள் குஷ்வந்த் சிங், அசோக் மகாதேவன், எம்.பி.வாசுதேவன் நாயர், குசுமா தேமானி ஆகியோர் கலந்து கொண்டு சிவசங்கரியைப் பாராட்டினார்கள். இந்திய வங்கியின் தலைவர் எம்.கோபாலகிருஷ்ணன் தலைமை ஏற்றார். இம்முயற்சிக்கு உதவும் வகையில் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையை அவர் சிவசங்கரியிடம் வாங்கினார். ஜி.கே.முப்பனார் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த விழாவை நடத்தியது. பிரபல எழுத்தாளர் மாலன் வரவேற்புரை விழாக்குழு நிகழ்த்தினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத்தில் நவீன நாடக விழிப்புணர்வு

தமிழ் அரங்கத்திற்கென ஒரு தனி அடையாளம் வேண்டுமா? வேண்டுமானால், தமிழ்க் கிராமியக் கலை வடிவங்கள் தான் தமிழனின் கலைத்துறை அடையாளமா? தமிழின் மரபுக்கலைகளை, நவீன நாடகத்தில் கையாள்வதில் உள்ள பிரச்னைகள் என்ன? மரபுக்கலை வடிவத்தில் சமகாலப் பிரச்னைகளை வெளிப்படுத்தமுடியுமா? தமிழுக்கென ஒரு தனித்தேசிய நாடக வடிவம் எப்படி இருக்க வேண்டும்? இவை அண்மையில் தமிழகத்தில் நிகழ்ந்த நாடகவிழாவிலும் கருத்தரங்குகளிலும் எழுப்பப்பட்ட சில கேள்விகள்.



அலைமோதும் நேரம்!
தமிழ் நாட்டின் 'யவனிகா' குழுவினருடன் மரீனா கடற்கரையில் பாதல் சர்க்கார்

ஏழு நாட்கள் தொடர்ந்து, பல்வேறு நாடக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், நெறியாளர்கள் பங்குகொண்டு, மொத்தம் பதினாறு நாடகங்களையும்,ஆறு கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கிறார்கள். நாடகஎழுத்தாளர் கோமல் சுவாமிநாதன் ஒரு வர்த்தக நிறுவனத்தின் உதவியோடு இதனை ஒழுங்கு செய்திருந்தார். கடந்த பதினைந்து வருடங்களாக தமிழகத்தில் பரவி வரும் நவீன நாடகப் பிரக்ஞையின் ஓர் இயல்பான வளர்ச்சிக்கட்டமாகவே இந்த நிகழ்ச்சியைக் கருத வேண்டும். தீவிர நவீன நாடகம் பற்றி தற்போது பரவலாக பேசப்படுகின்றதை அவதானிக்க முடிகிறது. நானறிந்த சில தகவல்களை பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.



## புதிய தேடல்

தமிழில் சிறுகதை, நாவல், கவிதை வளர்ச்சியுற்ற அளவுக்கு நாடகத்துறை வளர்ச்சியடையவில்லை என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒரு கசப்பான உண்மை. புதிய அர்த்தத் தளங்களோடு நவீன நாடகம், தமிழுக்கு தேவை என்று தமிழுக்கென ஒரு தனியான நாடக வடிவத்தின் தேடலிலும் பலர் ஈடுபடுவது மகிழ்ச்சிக்குரியது. சபா நாடகங்களில் காணப்பட்ட சிந்தனை மறுப்பினாலும் வெற்றுத்தன்மையினாலும் சலிப்புற்றவர்கள் பலரும் இந்த நவீன நாடகத்திற்குரிய தேடலை ஆரம்பித்திருக்கிறார்கள். சபா நாடகங்கள் மூலம் தெரியவந்த கோமல் சுவாமிநாதன் போன்றோர் தமது முந்திய குறைகளை உணர்ந்து இப்படியான முயற்சிகளில் ஈடுபடுவது நல்ல அறிகுறி. பொதுவான இந்திய நாடக வரலாற்றின் பின்னணியில் இந்த விழிப்புணர்வினை நோக்குவது நல்லது.

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் நவீன நாடகத்துறையில் தீவிரமாக இயங்கியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கலாச்சார முன்னணியான 'இந்திய மக்கள் அரங்கக் கழகம்' என்றும் சுதந்திரத்திற்கு பின்னர் இந்தியர் தங்களை தங்கள் கலைகளை அடையாளம் கண்டு கொள்ளத் தொடங்குவதற்கும் இதுவே வழிவகுத்தது என்றும் சொல்கிறார் பிரபல இந்திய நாடகர் சத்தியதேவ்துபே. அவர் மேலும் ஐம்பதுகளில் நாடகத்துறையில் முதன்மையாகவும் பெரும் வளர்ச்சிக்கும் காலாயிருந்தவர் சோம்பு மித்ரா என்றும், அவர் தாகூரினதும் இப்சனினதும் நாடகங்களை நாடு முழுவதும் நிகழ்த்தியமைதான் நவீன அரங்கத்தின் வளர்ச்சிக்கு வழிகோலின என்றும், அறுபதுகளில் அவருடைய நாடகங்களின் நேரடி அருட்டுணர்விலேயே நவீன இந்திய நாடக அரங்கம் உருவானது என்றும் கூறுகிறார். இதனைத் தொடர்ந்து அறுபதுகளில் தேசிய நாடகப்பள்ளி, இப்ராகீம் அல்காசி தலைமையில் இயங்கத் தொடங்கிய பின்னர் தான் ஒரு புதிய விழிப்பையும், உத்வேகத்தையும் நவீன நாடக அரங்குக்கு கொடுத்தது. அப்போதுதான் நவீன நாடகத்துறையில் தற்போது பிரபலமாக விளங்கும், கிரிஷ் கர்னாட் போன்றோர் தோன்றினர். தமிழ்நாட்டவரான பேராசிரியர் சே.ராமானுஜம், அல்காசியின் மாணவரே.

## அகடமி நிபந்தனை

தமிழ்நாட்டிலிருந்த சினிமா மோகமும், சபா நாடகச் சூழலும் ஆரம்பத்தில் சே.ராமானுஜத்தினால் எதனையும் சாதிக்க பெரும் தடையாக இருந்திருக்கின்றன.

1976இல் காந்திக் கிராமத்தில் ஒருவாரம் நிகழ்ந்த நாடகப்பட்டறையும், 'வீதி' அமைப்பினால், புகழ்பெற்ற வங்க நாடகர் பாதல் சர்க்காரின், பத்து நாள் பட்டறையும், தேசிய நாடகப் பள்ளியும், காந்திக்கிராம பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்திய 70 நாள் பட்டறையும் தமிழகத்தில் நவீன நாடகத்திற்கான ஒரு விழிப்புணர்வை உண்டாக்கின. இதனைத் தொடர்ந்து, சென்னையில் பரீக்ஷா, வீதி, மதுரையில் நிஜ நாடக இயக்கம் போன்றன நவீன நாடக மேடையேற்றங்களை நிகழ்த்தின. இந்திரா பார்த்தசாரதி, ந.முத்துசாமி ஆகியோரின் நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. கூத்துப் பட்டறை கூத்துக் கலைஞர்களை சென்னைக்கு அழைத்து வந்து கூத்தை 'அறிமுகம்' செய்தது.

எண்பதுகளில், இந்திய அரசாங்கத்தின் ஆதரவில், சங்கீத நாடக அக்கடமி, இளம் நாடக இயக்குநர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் நாடகம் தயாரிப்பதற்கு பணம் கொடுத்தது. இந்தத் திட்டத்தில் 'துக்கிர அவலம், நந்தன் கதை,கட்டியங்காரன், நற்றுணையப்பன், முற்றுகை, சாபவிமோசனம், கொங்கைத்தீ, நாயைப்பிடி கொடுத்தோம், கருஞ்சுழி ஆகிய நாடகங்கள் மேடையேறின. தேசிய இனங்கள், தங்கள் அரங்க அடையாளத்தை கண்டறியும் முயற்சியாக, கிராமியக் கலைகளை கையாள வேண்டும் என்பது சங்கீத நாடக அக்கடமியின் நிபந்தனையாகவும் இருந்தது. இதனால் இத்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட பெரும்பாலான நாடகங்கள் எல்லா மொழியிலும், புராணக் கதைகளுக்கு மறுவிளக்கம் தரும் படைப்புகளாகவே இருந்தன. கிராமியக் கலை வடிவங்கள் பக்தியை அடிப்படையாகவும், புராணக் கதைகளை சொல்பவையாகவும் இருந்தபடியால், கிராமியக் கலைவடிவத் தினூடாக உருவாகும் நவீன நாடகத்தில், சமகால மனிதர்களும், அவர்களின் அன்றாடப் பிரச்னைகளும் இடம் பெறவில்லை. தமிழ் மரபுவழி தெருக்கூத்து, பாகவத மேளா ஆகிய பாரம்பரிய கலைகளின் கோட்டுருக்களின் வழி உருவாகும் அரங்கம் நம்முடைய தேவையைப்பூர்த்தி செய்வதாகவும், நவீன சிந்தனையை திரிபின்றி வெளிப்படுத்தக்கூடிய தாகவும் உள்ளதா என்று தற்போது நாடக ஆர்வலர்கள் பலரும் உரத்துச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.


## முதல் தமிழ் நாடகம்

தற்போது, தமிழகத்தில் பல இடங்களில் தீவிர நவீன நாடக மேடையேற்றங்கள், கருத்தரங்குகள், பட்டறைகள் பரவலாக நடைபெறுகின்றன. டில்லியிலும் நவீன நாடக மேடையேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. சே.ராமானுஜம் இயக்கிய, 'வெறியாட்டம்' தான் இது நாள்வரை கலைப்பாங்கான முறையில் மேடையேறிய முதல் தமிழ் நாடகம் என்று சொல்ல வேண்டும் என்கிறார் பிரபல தமிழ்நாட்டு விமர்சகர் வெங்கட்சுவாமிநாதன். ஒரு நீண்ட ஒப்பாரிப்பாடலாவே உருவாக்கம் தரப்பட்ட இந்த நாடகம் கிரேக்க நாடகாசிரியர் ஸோபோக்னிஸின் 'ட்ரோஜன் பெண்கள்' என்ற நாடகத்தின் தழுவல் ஆகும். மு.ராமசாமியின் 'துக்கிர அவலம்' நாடகத்தையும், பெண்ணேஸ்வரனின் பல தயாரிப்புகளையும் வெங்கட்சாமிநாதன் விதந்துரைக்கிறார். துக்கிர அவலத்தில் தெருக்கூத்து தேவராட்டம் ஆகியனவும், பெண்ணேஸ்வரனின் நாடகங்களில் கிராமிய பறை, கொட்டு ஆகியனவும் பயன்படுத்தப்படுகின்றன.

அண்மையில் நிகழ்ந்த நாடக விழாவில் முதன்மையான நாடகங்களாக மிருகம், சதிபர்வம், ஸ்பாட்டகஸ் ஆகிய நாடகங்களை எழுத்தாளர் ஜெயந்தன் குறிப்பிடுகிறார். அ.ராமசாமியின் 'சதிபர்வம்' பாண்டிச்சேரி நாடகப் பள்ளி மாணவர் கோத்தாராம் இயக்கத்தில் இடம்பெற்றது. பாரதப்போரின் பின்னணியில் இருதரப்பிலும் நடந்த வஞ்சகங்களையும், அத்துமீறல்களையும் கொண்டு புனையப்பட்டது. 'ஸ்பாட்டகஸ்' பிரபல வங்க நாடகர் பாதல் சர்க்காரின் புகழ்பெற்ற நாடகமாகும். மு.ராமசாமி மதுரை நிஜநாடக இயக்கத்திற்காக இதனை நெறிப்படுத்தியிருந்தார். 'மிருகம்' ஒரு மரத்தடியில் நிகழும் ஒரு குறுநாடகம். இவைதவிர தமிழகத்தில், பாதல் சர்க்காரின் நாடகங்கள் சிலவும், விஜய் தண்டுல்கரின் 'அமைதி வழக்கு நடக்கிறது', இந்திரா பார்த்தசாரதியின் 'கால யந்திரங்கள்', சுரேந்திர வர்மாவின் 'சூரியனின் கடைசிக்கிரகணத்திலிருந்து சூரியனின் முதல் கிரகணம் வரை' ஆகிய நாடகங்களும் மேடையேற்றப்பட்டுள்ளன. கருத்தரங்குகள் பலவும் நடைபெறுகின்றன. 'ஆடுகளம்' நாடகக்குழுவின் கருத்தரங்கில் வீ.அரசுவின் தலைமையில் பேராசிரியர் சே.ராமானுஜம், ந.முத்துசாமி, கோமல் சுவாமிநாதன், ஞாநி மற்றும் பிரளயன் பங்குபற்றி தமிழில் நவீன நாடகம் பற்றி ஆக்கபூர்வமான கருத்துகளை வெளியிட்டுள்ளனர். தமிழில் நாடகத்திற்கென தனியாக ரெங்கராஜன் என்பவரால் 'வெளி' எனும் சிற்றேடும் வெளிவருகிறது.

மொத்தத்தில் தமிழகத்தில் தற்போது உருவாகிவரும் விழிப்புணர்வு நல்ல ஒரு ஆரோக்கியமான நவீன தமிழ் நாடக வளர்ச்சிக்கு ஏதுவாக அமையும் என நம்பலாம்.

க.பாலேந்திரா



லண்டனில் சிறிது காலம் தங்கி பண்ணிசைக் கச்சேரிகளை நிகழ்த்திய திருப்பானந்தாள் காசிமட ஓதுவார் கலைமாமணி கோ.முத்து கந்தசாமி தேசிகருக்கு பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் லண்டன் ஸ்ரீ முருகன் கோவிலில் பாராட்டு விழாவொன்றை நடாத்தியது. கோவில் குருக்கள் சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் ஓதுவாருக்கு பொன்னாடை போர்த்தி தலைப் பாகை சூட்டினார்



திருமதி மாதினி சிறிக்கந்தராசாவின் பண்ணிசைப் பாமாலை ஒலிநாடா முதற்பிரதியை நாகநாதசிவம் குருக்களிடமிருந்து விம்பிள்டன் விநாயகராலய இணைப்பாளர் திரு ஏ.ரி.எஸ்.இரத்தினசிங்கம் பெற்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக அரங்கில்

# இவ்வார அரசியல் கள கண்ணோட்டம்

- விமல் சொக்கநாதன் -

## கருவேப்பிலை போலும் அமைச்சர்கள்

சிறுபான்மை இனத்தவர் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படும்போது குறிப்பிட்ட அந்த சிறுபான்மை யினருக்கு ஆட்சியில் பிரதிநிதித் துவம் வழங்குவதாக மக்கள் கருத வேண்டும் என்று ஆட்சியினர் நினைக்கிறார்கள். தமது அரசு "தேசிய அரசு" என்று மக்களால் பாராட்டப்பட வேண்டும் என்று



லீ குவான் யூ

நம்புகிறார்கள். மக்கள் என்ன ஏமா ளிகளா? இலங்கை அரசு இதற்கு ஒரு உதாரணம்.

சுதந்திரமடைந்தபின் உருவாக்கப் பட்ட அமைச்சரவைகளில்அமைச்சர் பதவிகளை "அலங்கரித்த" தமிழர் கள் பலர். வெளி உலகத்திற்கு ஒரு கண்துடைப்பாக, சமையலுக்கு மணமூட்டும் கருவேப்பிலைகளாக தமிழ் அமைச்சர்கள் பலர் இருந் தார்கள். இன்றும் இருக்கிறார்கள். இவர்களுக்கு அதிகாரம் இருக்கி றதா? செல்வாக்கு எவ்வளவு இருக்கிறது என்பதுதான் கேள்வி.

சிங்கப்பூர் நாடு இதற்கு நேர் எதிர்மாறு. ஆசியாக்கண்டத்தின் ஒரு மூலையில் பலஹீனமான ஒரு சிறுநாடாக இருந்த சிங்கப்பூர் இன்று பொருளாதார பலம் மிக்க நாடாக திகழ்வதற்கு உழைத்தவர்கள் சீனர்கள்- மலாயர்- தமிழர்கள்.

இந்த மூன்று மொழிகளுடன் ஆங்கி லமும் அரசமொழியான சிங்கப்பூர் அமைச்சரவையில் ஆரம்பகாலம் தொட்டு தமிழ் அமைச்சர்கள் பலர் சிறப்பாக செயலாற்றி வந்திருக் கிறார்கள். இந்த அமைச்சர்கள் வெறும் 'கருவேப்பிலை' அமைச் சர்கள் அல்ல, கருமமே கண்ணாகக் கொண்ட- அதிகாரமும் செல்வாக் கும் மிக்க தமிழ் அமைச்சர்கள்.

இவர்களில் ஒருவர் அமைச்சர் எஸ்.தனபாலன் அவர்கள். சிங்கப் பூரின் வெளியுறவு அமைச்சராகவும் தேசிய அபிவிருத்தித்துறை அமைச் சராகவும் இருந்த திரு தனபாலன் அவர்கள் கடந்த வாரம் பதவி யிலிருந்து ஓய்வு பெற்றார். அமைச் சர் பதவியிலிருந்து விலக, முதலில் அவருக்கு மறுப்பு தெரிவித்த சிங் கப்பூர் பிரதமர், திரு தனபாலனின் வற்புறுத்தலின் பேரில் ஈற்றில் அனுமதி வழங்கினார். "...1984 தேர்தலில் நாட்டினை வழிநடத்த வேண்டும் என்று என்னைத் தலைவ ராகதெரிவு செய்தவர்களில் நீங்க ளும் ஒருவர். எமது அரசுக்கும் எமது நாட்டுக்கும் நீங்கள் ஆற்றிய பணி அளப்பரியது!" - என்று மன தார திரு தனபாலனை பாராட்டி வழி அனுப்பினார் பிரதமர் கோ.

**********************

## தாய்லாந்தின் மாமன்னர்

'சியாம்' என்று அந்நாட்களில் விபரிக்கப்பட்டது இந்நாள் தாய் லந்து! சியாமில் முடியாட்சி முற்றாக ஒழிக்கப்பட்டு 60 வருடங்களாகிவிட் டன. ஆனாலும் 'மன்னர்' என்ற சொல்லுக்கு தாய்லாந்தில் தனி மரியாதை. 'மன்னர் வந்து கொண் டிருக்கிறார்'- என்று யாராவது சொல்லிவிட்டால் போதும். உடனே தெருவில் கூட்டம் கூடி விடும். மன்னர் என்ற சொல்லுக்கு அப்படி ஒரு மந்திரசக்தியைப் பயன்படுத்திய மன்னர் பெருமான் மக்களுக்கும் ராணுவத்துக்கும் இடை யிலான பூசலை எப்படித் தீர்த்து வைத்தார்; பதவிகளை எப்படி மாற்றி அமைத்தார்? என்பதை இரண்டு பட்சத்திற்கு முன் இதே பகுதியில் நான் எழுதியதை நீங்கள் படித்திருக்கலாம்.



மன்னர் பூமிபொல் முன் புதிய பிரதமர் ஆனங் பன்யரச்சுன்.

அந்த மன்னரின் சகதர்மினி- மகாராணியாருக்கு இப்போது 60 வயது. மகாராணி சிரிக்கிற் அவர்கள் பாரீசிலும் இலண்டனிலும் கல்வி கற்றவர்.

மன்னர் பூமிபொல சுவிற்ச லாந்தில் பொறியியல் படித்தவர். பாரீஸ் மாநகரில் 21 வயதான (முடிக்குரிய இளவரசர் பதினேழு வயதான அழகி) சிரிக் கிற்றை சந்தித்தார்.

அப்புறம் என்ன? தாய் காதல் ஜோடிகள் தாய்லாந்து நோக்கி பறந்து வந்தன. இந்தக் காதல்



மன்னர் பூமிபொலும் மகாராணி சிரிகிற்றும்

தேவதைகளின் உருவங்கள் ஒருவர் மனதில் ஒருவர்- பரஸ்பரம் பதிந்த தும் மட்டுமல்ல, தாய்லாந்தின் பல லட்சக்கணக்கான குடிமக்கள் மனதிலும் அழியாத ஓவியங்களாக விட்டன.

இப்போது 44 வருடங்கள் கழித் தும் கூட தாய்லாந்து மக்கள் இத் தம்பதிகளை தமது இதயக் கோயி லில் வைத்து பூஜித்து வருகிறார்கள். ஆகஸ்ட் 12ம் தேதி மகாராணியின் 60ஆவது பிறந்தநாளுக்காக இவ்வரு டம் முழுவதுமே கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

## தாய்லாந்தின் 'இராமர்'

மன்னர் பூமிபொலுக்கு ஆட்சி அதிகாரம் இல்லாவிட்டாலும் பாரம் பரிய பூர்வமான பட்டம் ஒன்று இருக்கிறது. சக்கிரி சாம்ராஜ்யத்தின் மன்னர் 9வது- இராமபிரான் என்று விபரிக்கப்படுகிறார். (தாய்லாந்துக் கும் ராமாயணத்துக்கும் உள்ள தொடர்பு பலர் அறிந்தது) வெறும் ஆடம்பர ஆடை அணிகளுடன் நின்றுவிடாமல் பல மைல்கள் தாய்லாந்தில் பயணம் செய்து வறியமக்களுக்கு மருத்துவ வசதி, கல்வி மற்றும் நீர்ப்பாசன வசதிகளை ஏற்பாடு செய்கிறார். யாரும் என்னை அணுகலாம் என்று அடிக் கடி அவர் கூறுவதால் பலர் அவரி டம் பணம் கேட்கிறார்கள். சிலர் பரீட்சையில் சித்தி அடைய விரும்பு கிறார்கள்.

இவை தவிர ஊழல் மிக்க ராணுவ அரசியல்வாதிகளினால் மக்கள் துன்புறுத்தப்படும் போது தமது சித்ரலதா அரண்மனைக் கதவுகளை திறந்து விட்டவர் மன்னர் பூமிபொல் (9வது ஸ்ரீராமர்) ஒரு லட்சம் பொதுமக்கள் மன்னரின் புகைப்படத்துடன் வீதிவழியே ஓடியபோது "ஏதோ ஏ.கே.47 யந்திர துப்பாக்கிகளை"க் கண்டுவிட்டது போல பயந்த ராணுவ ஆட்சியாளர் தாய்லாந்தை விட்டு தப்பி ஓடிய கதை 1973ல் தாய்லாந்தில் நடந்தது.

இவ்வாண்டு மே மாதம் ஏற்பட்ட கலவரங்களின் போதும் மன்னர் மீண்டும் தலையிட்டார். அதிகாரம் ஏதுமே இல்லாத ஒரு மன்னர் ஒரு ஜனநாயக ஆட்சியில் எப்படித் தலையிட முடியும் என்பது ஜனநாயகத்தின் மேற்குலக காவலர் களுக்கு- பிதாக்களுக்கு விளங்காத ஒரு சங்கதி!

## 'டயானா கேட்'

ஒரு தேவலோகத் திருமணத்தின் இறுதி முடிவுதானா?லண்டன் சென் போல்ஸ் தேவாலயம்! வெண்புரவி களால் இழுத்து வரப்பட்ட ஓர் அரச பவனி வண்டி ஒன்றிலிருந்து ஒரு காரிகை இறங்குகிறாள். சரிகை வேலைப்பாடுகள் அமைந்த, கண் ணைப்பறிக்கும் அந்த ஆடை அணிந்து இறங்கிய அந்த அழகி விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்த தேவதையோ? இல்லை. அது இளவரசி டயானா!....

1981ம் ஆண்டில் சார்ள்ஸ் டயானா திருமணம் பற்றி நான் வழங்கிய வானொலி நேர்முக வர்ணனையின் ஒரு பகுதி இது. அந்தத் தேவதை இன்று ஏமாற்றத்தின் விளிம்பில் நிற்பது எதனால்? அந்த தேவலோகத் திருமணத்தின் எதிர்காலம் பற்றி மட்டுமல்ல, பிரிட்டிஷ் முடியாட்சி யின் எதிர்காலம் பற்றிக்கூட இன்று சந்தேகங்கள் எழுந்திருப்பது எத னால்?

அன்று மோர்ட்டன் எழுதிய நூலா? டயானாவின் தனிப்பட்ட



கைத்தலம்பற்றி நடக்கும் டயானா. ஆனால் கை நழுவிவிடுமா......?

தொலைபேசி உரையாடல்களை ஒற்றர்கள் ஒற்றுக் கேட்டதாலா? கள்ளம் கபடமற்ற ஒரு பெண்ணாக தோழிகளுடன் சிறிய வீடு ஒன்றில் தங்கியிருந்த ஒரு யுவதியை ஒரு நாட்டின் இளவரசியாக வின்சர் சாம்ராஜ்யத்தின் வழித்தோன்றல் களை உருவாக்கும் ஒரு மகாராணி யாக மாற்றி அமைப்பதில்- 'மினுக்கி எடுப்பதில்' அரண்மனை அதிகாரி கள் தோல்வி கண்டதாலா?

விடை தெரியாத வினாக்கள் இவை. 'நான் இளவரசி;எது சரி, எது பிழை என்பது எனக்குத் தெரியும். உங்கள் ஆலோசனை எனக்குத் தேவையில்லை என்று அரண்மனை அதிகாரிகள் மீது கத்தி குளறி, கெட்ட வார்த்தை களால் திட்டித் தீர்த்திருக்கிறார் டயானா! அரண்மனை ஆலோசகர் களை இப்படி திட்டி வெளியேற்றிய டயானா, தமக்கு ஆலோசனை தேவைப்படும்போது அவற்றை பெற நாடியது தமது துணி தைப்பவர் களை- தமது முடி திருத்துவோரை- ஆருடம் சொல்பவர்களை! இவர்கள் மூலமாகவே 'பல ரகசியங்கள் பரகசியங்களாக்கப்பட்டன!

## பாவம் மகாராணி

பாவம் எங்கள் மகாராணியார்! இப்படி நடக்கக்கூடும் என்று அவர் நடவடிக்கை எடுத்தும் கூட அவரால் இதனைத் தடுக்க முடியவில்லை. 1981ல் திருமணம் முடிந்த கையோடு முக்கிய பிரிட்டிஷ் பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரையும் அரண்மனைக்கு அழைத்தார். "புதிய இளவரசி பற்றி பக்குவமாக எழுதுங்கள். அளவுகடந்து எழுதி தாக்கங்களை உண்டு பண்ணாதீர் கள். நாங்கள் இந்தச் சூழலிலே பிறந்து வளர்ந்துவிட்டோம். இள வரசி டயானா அப்படியானவர் அல்லர்!" என்று பத்திரிகையாளர் களை எச்சரித்தார் பிரிட்டிஷ் பேரரசியார். ஆனால் என்ன பயன்?

இளவரசி டயானா தனது மெய்காப்பாளர்களை "கழற்றி இறக் கிவிட்டு" பின் தனிமையில் தனது ஆண் நண்பர்களை சந்திக்க சென் றார் என்று ஒரு செய்தி.

இளவரசியையும் ஒரு ராணுவ அதிகாரி ஹிவிட் என்பவரையும் தொடர்புபடுத்தி ஒரு பத்திரிகை கடந்தவாரம் எழுதியதால் அந்த பத்திரிகை மீது ராணுவ அதிகாரி வழக்கு! இந்த மான நஷ்ட வழக்கில் இளவரசி டயானாகூட சாட்சியம் வழங்க அழைக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## மாஸ்ரிச் உடன்படிக்கை

12 ஐரோப்பிய குடும்பநாடுகளுக்

17ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூட்டுக் களவாணிகள்

அதிகாரிகள்- அரசியல்வாதிகள்; இவர்களில் யார் யாரைக் கெடுத்தார்கள் என்ற கேள்வி கோழியிலிருந்து முட்டையா, முட்டையிலிருந்து கோழியா என்பது போன்றது. நிர்வாகம் என்ற வகையில் இந்த இரு தரப்பினர் உறவு எப்படியோ, ஊழல் விவகாரங்களில் இருவருமே கூட்டுக் களவாணிகள். தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள்- ஒன்றன் மீது ஒன்று சேற்றை அள்ளி வீசிய பொழுதெல்லாம் அரசியல்வாதிகள் இன்னாள்- முன்னாள் ஆட்சியாளர்கள் மீதெல்லாம் ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதிகார வர்க்கத்தின் ஊழல் பெருச்சாளிகள் அரசியல்வாதிகளின் முதுகுப்பின்னால் ஒளிந்து கொண்டன. ஆனால் நரசிம்மராவ் பிரதமரானதும் அரசியலை விடப் பொருளாதாரம் செய்திகளில், நடைமுறையில் கூடுதல் முக்கியத்துவம் பெற்றுவிட்ட காரணத்தினால் பங்குச்சந்தை ஊழல் வெடித்தது; அத்துடன் வங்கி அதிகாரிகள் சிலர் செய்த ஊழல், வங்கி அதிகாரிகள் அரசு அதிகாரிகளுக்கு எப்படியெல்லாம் உதவினார்கள் என்ற செய்திகளும் வெளிவந்தன.

ஹர்ஷத் மேத்தாவின் உச்சபட்ச ஊழல் நடவடிக்கைகளுக்கு இன்னமும் ஒரு வயதுகூட ஆகவில்லை. ஆனால் அதை ஆராயத் தொடங்கினால் கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல சில பெருந்தலைகள் உருள ஆரம்பித்தன. அவர்களில் பலர் அதிகாரிகளே; ஆட்சியாளர்கள் அதிகாரிகளின் ஊழல் உறவு- கூட்டுறவு- இல்லாமல் இருந்தால் எல்லா அதிகாரிகளுமே மாட்டிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளுக்கு எது எதில் எவ்வளவு பணம் கறக்கலாம் என்று சொல்லிக் கொடுத்து, அதில் வாங்க வேண்டியதை வாங்கிக் கொடுத்து, அரசியல்வாதிகளுக்குத் தெரிந்தும் தெரியாமலும் பணம் வாங்கிக் கொழுத்த அதிகாரிகள் மாட்டிக்கொள்ளும் பொழுது தனியாக மாட்டிக் கொள்வதில்லை. கூட்டாளி அரசியல்வாதிகளையும் சேர்ந்தே பிடித்து இழுக்கிறார்கள்.

இன்று அந்த நிலை தெளிவாகி இருக்கிறது- ஒரு காலத்தில் பொதுத் துறையின் தனிப் பெருந்தலைவராக இருந்த வி.கிருஷ்ணமூர்த்தி கைது செய்யப்பட்டதன் மூலம். எந்தெந்த அரசியல்வாதிகளுக்கு இவர் அந்தக் காலத்தில் எவ்வளவு "வாங்கிக்" கொடுத்தார் என்பது இப்போது அலசப்பட்டு வருகிறது. ஆனால் கிருஷ்ணமூர்த்தியின் அதிர்ஷ்டம் அந்தப் பட்டியலில் இடம் பெற்ற இந்திராகாந்தி, சஞ்சய்காந்தி, ராஜீவ் காந்தி இன்று இல்லை. ஆனாலும் கிருஷ்ணமூர்த்தி தப்பித்துவிடமுடியாது.

மனிதருக்கு இதுவரை இரண்டு முகங்கள் இருந்து வந்தன. பொதுத் துறை அதிகாரி என்ற முறையில் அதிகார வட்டாரங்களில், பத்திரிகைகளில், குறிப்பாக இந்தியாவின் வணிகப் பத்திரிகைகளில் சிறந்த நிர்வாகி என்று அறிமுகம். மேலிட அரசியல் தலைவர்களுக்கும் வேண்டியவர்- சில நிழலான காரியங்களைச் செய்து கட்சிக்குத் தேர்தல் நிதி, தனிப்பட்ட ஆட்சியாளர்களுக்கு அவரது சுற்றத்தாருக்கு பண உதவி, மற்றும் வேறுசில அசையாச் சொத்து உதவிகள். அதே காரணத்தினால் எந்த அரசு வந்தாலும் இவர் தாக்குப் பிடிக்க முடிந்தது. நரசிம்மராவுக்கும் இவர் நெருக்கம் என்றே பேசப்பட்டு வந்தது. ஆயினும் நரசிம்மராவ் வெகு நாட்கள் மடியில் பூனையைக் கட்டிக்கொண்டு பயணப்பட விரும்பவில்லை. பூடம் தெரியாமல் சாமியாடி 'சோலங்கி' என்ற ஒரு பூனைக்குட்டி மடியிலிருந்து தூக்கி எறியப்பட்டு; நானே ஓடிப்போய் விடுகிறேன் என்றது சிதம்பரம் என்ற இன்னொரு பூனைக் குட்டி; நான் என்ன செய்தேன்; மடியிலேயே இருக்கிறேனே என்று கேள்வி கேட்டும் கழற்றி விடப்பட்ட பூனைக்குட்டியே முன்னாள் அதிகாரி வி.கிருஷ்ணமூர்த்தி.

ஆனால் கிருஷ்ணமூர்த்தி வெறுமனே கீழே இறங்கிவிடவில்லை. தான் செத்ததும் அல்லாமல் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானாம் என்பது போல சி.பி.ஐ. அதிகாரி கே.மாதவன் முன் கூட்டியே விருப்ப ஓய்வில் செல்லும் அளவுக்கு இவர் திரை மறைவு வேலைகளில் அரசின் உயர் பதவிப் பிரமுகர்களின் உதவியை நாடி இருக்கிறார். அவர்கள் தலையிட்ட காரணத்தினாலேயே கிருஷ்ணமூர்த்தி சம்பந்தப்பட்ட பங்குச் சந்தை ஊழலை விசாரித்து வந்த சி.பி.ஐ. உயர் அதிகாரி கே.மாதவன் தனது பணி அரசியல், அதிகார வர்க்க செல்வாக்கினால் முடக்கப்படுவதாக உணர்ந்து பதவியைத் துறக்க முன்வந்தார்.

அரசு பதவியின் அதிகார செல்வாக்கின் மூலம், ஓய்வு பெற்ற பிறகும் ஏதாவது ஒரு கௌரவமான பதவியில் இருந்தபடியே தன் மகன்கள் பெயரில் நிதி நிறுவனம் அமைத்து அதற்கு பங்குச்சந்தை ஊழல் கருவி ஹர்ஷத் மேத்தா, அயல்நாட்டு வங்கி அதிகாரிகள் மூலம் கடன்பெற்றது; முன்னாள் கனரா வங்கித் தலைவர் பி.ரத்னாகர் அமைத்த ஃபேர் குரோத் நிறுவனத்தில் பங்குகள் வாங்கியது என்று அடுக்கடுக்காக அவர் மீது குற்றச்சாட்டுகள். கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்ட அவர் இப்பொழுது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்; இதய நோயாம்!


அதிகாரிகள் என்றால் உள்நாட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் பொழுதும் அரசியல்வாதிகள் என்றால் அயல்நாடுகளில் 'பைபாஸ் சர்ஜரி' செய்து கொள்ளும்பொழுது மட்டுமே எம்மவருக்கு இதயம் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதுவரை அந்த இடத்தில் கஜானா பெட்டிகள் மட்டுமே இருக்கின்றன. இப்படி இருக்க வேண்டிய இடங்களில் அவை அவை இல்லாத காரணத்தினாலேயே இந்தியாவும் இன்று உலகில் பெறவேண்டிய இடத்தைப் பெற முடியவில்லை.

**சென்னைக் கடிதம்**

-நமது நிருபர்

## யார் இந்த கிருஷ்ணமூர்த்தி?

அப்படி ஒரு கேள்வி கேட்கும் துணிவு இதுவரை எவருக்கும் இருந்ததில்லை. சமீபகாலம் வரை பொதுத் துறையின் முடிசூடா மன்னர்; டெல்லி அதிகார வர்க்கத்தின் முதல் மரியாதையைப் பெற்றவர். அவரைப்பற்றி ....



தஞ்சை மாவட்டக்காரர்; இன்டர் மீடியட் வரைதான் படித்தார்; பிறகு அரசின் பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருதுகளைப் பெற்றார்; ஒரு பல்கலைக் கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் கூடக் கொடுத்தது.


1945ல் அப்போதைய சென்னை மின்வாரியத்தில் பயிற்சிப் பொறியாளராகச் சேர்ந்தார். 1954ல் டில்லியில் மத்திய திட்டக் குழுவில் ஆய்வு அதிகாரியானார். அங்கே தான் அதிகாரம் பணம் பண்ணும் வழி என்பதைக் கசடறக் கற்றுத் தேர்ந்தார்.

1960ல் திருச்சியில் உள்ள பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தில் ஒரு அதிகாரியாகச் சேர்ந்து ஐந்து வருடங்களில் தலைமை அதிகாரி ஆனார்.

இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, வி.பி.சிங், மீண்டும் நரசிம்மராவ் ஆட்சி என்று எல்லாக் காலங்களிலும் மாருதி கார் நிறுவனத் தலைவர், எஃகு ஆணையத் தலைவர், தொழில் துறைச் செயலர், திட்டக்குழு உறுப்பினர் என்று மாறிமாறி பதவி சுகம் அனுபவித்து லட்சங்களில் கோடிகளில் பணத்தைப் புரட்டி இருக்கிறார். ஃபேர் குரோத் (FAIR GROWTH) நிறுவன ஊழல் அலசப் பட்டதும் இவரது UNFAIR GROWTH அம்சங்கள் அம்பலத்திற்கு வந்து விட்டன. கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கிறார் முன்னாள் இரும்பு எஃகு ஆணையத் தலைவர்!

# மீண்டும் நேரு பரம்பரை

## சோனியா நூல் சொல்லும் கட்டியம்



பிரியங்கா

1947இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து பெரும்பாலும் இடைவிடாது தொடர்ந்த நேரு- காந்தி பரம்பரை ஆட்சி 15 மாதங்களுக்கு முன்னர் ராஜீவ் காந்தி அவருக்கு மாலை அணிந்த பெண் ஒருவரால் கொல்லப்பட்டதிலிருந்து சற்று மங்க ஆரம்பித்தது. ஆனால் அது மீண்டும் துலக்கமுறும் எதிர்பார்ப்புகளை ராஜீவின் மனைவி சோனியா எழுதி, அண்மையில் வெளிவந்த நூல் ஏற்படுத்தியுள்ளது.

பொதுத் தேர்தல் பிரச்சாரத்தில் தமது கணவர் கொல்லப்பட்டதையடுத்து கிடைக்கக்கூடியதாகவிருந்த பிரதமர் பதவிக்கான வாய்ப்பை முற்று முழுதாக மறுத்த சோனியா, பொதுத் தொடர்புகள் எல்லாவற்றையும் துறந்து பலத்தகாவல்களுடனான அவர்களது காலனித்துவ காலத்து பங்களாவினுள்ளேயே தங்கியிருந்தார். ஒரு சில குடும்ப வைபவங்களிலேயே கலந்து கொண்டார். சோனியா சம்மதம் தெரிவித்திருந்தால் காந்தி ஆதரவாளர்கள் நரசிம்மராவை விடுத்து அவரது பக்கமே நின்றிருப்பார்கள். அந்த மாளிகை தொடர்ந்தும் இந்தியாவின் அதிகார மையமாக இருந்திருக்கும்.

அரசியல் வாதிகளையும் வெளிநாட்டு பிரமுகர்களையும் அவர் சந்தித்தாலும் அரசியல் பிரவேசத்தில் அவருக்கு ஆர்வம் இல்லை என்பதை ஆதரவாளர்கள் பின்னர் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் 'ராஜிவ்' நூல் இதனைத் தகர்த்தெறிகிறது.

ராஜீவுடன் தனது அதிநெருக்கமான வேளைகளைப்பற்றி தயக்கமின்றி கூறுகிறார். இத்தாலியின் ருறின் அருகேயுள்ள சிற்றூரொன்றைச் சேர்ந்தவரான சோனியா மைனோ 1965இல் கேம்பிரிட்ஜில் கிரேக்க உணவகம் ஒன்றில் ராஜிவை எப்படி முதன் முதலில் சந்தித்தார் என்பதைச் சொல்கிறார். "எம் கண்கள் சந்தித்த அக்கணமே என் இதயம் துடிப்பதை உணர்ந்தேன்.



சோனியா

பரஸ்பரம் வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டோம். எனக்கு மாத்திரமன்றி அவருக்குங்கூட முதல் பார்வையிலேயே அரும்பிய காதலாக அது மலர்ந்தது."

காதல் தொடர்பான விவகாரங்கள் இந்தியர்களைப் பொறுத்த வரையில் பொதுவாக இரகசியமானவையாகவே கொள்ளப்படுகையில் கட்டித் தழுவும் புகைப்படங்களுடன் சோனியா இவற்றை வெளிப்படுத்துவது வியப்பையே ஊட்டுகிறது. எனினும், இந்திய அரசு தமது கணவருக்கு போதுமான பாதுகாப்பை அளிக்கத் தவறி விட்டது என்ற அவரது குற்றச்சாட்டு பலத்த சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. "ராஜீவுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் போதிய அக்கறை செலுத்தப்படவில்லை; தனியொரு பாதுகாப்பு உத்தியோகத்தருடனேயே அவர் சென்று வந்தார். தேர்தலை அண்மித்த காலத்தில் மட்டும் இருவர் உடன் சென்றார்கள். நானும் மகளும் (பிரியங்கா) அவர் திரும்பி வரும்வரை எப்போதும் சஞ்சலத்துடனேயே இருப்போம்" இவ்வாறு அவர் எழுதியிருக்கிறார்.

1984இல் ராஜீவின் தாயார் திருமதி இந்திரா காந்தி கொல்லப்பட்டதையடுத்து நியமிக்கப்பட்ட பயிற்சி பெற்ற விசேட பாதுகாப்புக்குழு அவருக்குப் பாதுகாப்பளித்திருக்கலாம். பல்வேறு பயங்கரவாத குழுக்களின் கொலைப்பட்டியலில் ராஜிவின் பெயர் இருப்பதைத் தெரிந்தும் கூட அரசு விசேட பாதுகாப்புப்படையின் பாதுகாப்பை ரத்துச் செய்து, இத்தகைய நிலைமைகளில் பயிற்சியற்ற ஒரு படையை பாதுகாப்புக்கு நியமித்தது.

சோனியாவின் இக்குற்றச்சாட்டுகள் அப்போது பிரதமராகவிருந்த சந்திரசேகரைத் தாக்கியிருக்கின்றன. 'ராஜிவுடன் கூடவே ஒன்பது பாதுகாப்பு உத்தியோகத்தர்வரை அந்தக் குண்டு வெடிப்பில் மரணமடைந்திருக்கிறார்கள். எனவே இரண்டுக்கு மேற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் அவருக்கு இருந்திருக்கிறார்கள். எப்படியெனினும் ஒரு பிரதமருக்குரிய அளவிலான பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டேயிருக்கிறது' என்று வாதிடுகிறார் சந்திரசேகர்.

சோனியாவின் நூல் அந்தப் பரம்பரையைச் சூழ்ந்த எண்ணங்களைத் தூண்டி, எதிர்பாராத



ராஜீவ்

அரசியல் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பதாக தெரிகிறது. இந்திரா காந்தியை புனிதப்படுத்தும் வகையிலும் இந்நூல் அமைகிறது. ராஜீவ் இன்னமும் மேலாக சுடர் விடுகிறார். சுதந்திரத்திலிருந்து இப்போது தான் முதன்முறையாக இந்த நேரு- காந்தி ஆட்சிப் பரம்பரையின் அங்கத்தவர் எவரும் அரசாங்கத்தில் இல்லை. உண்மையிலே அந்த பரம்பரை ஆட்சி முடிந்துவிட்டது என்று கருதினால்



இந்திரா

இப்போது இந்த தூண்டுதல்களுக்கு நியாயமில்லை.

ஆனால் அரசியல் வட்டாரங்களில் இப்போதெல்லாம் எழுப்பப்படும் கேள்வி, இந்த நூல் அந்தப் பரம்பரையின் மீள்வருகைக்கான கட்டியமா? அப்படியெனின் குடும்பத்தில் யார் வாரிசாக்கப்படுவார்? . சோனியா, பிரியங்கா இருவரிலொருவரையே எதிர்பார்க்கலாம். ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் பயிலும் புதல்வர் ராகுல் அரசியலில் நாட்டமற்றவரெனக் கூறப்படுகிறது. சோனியா அரசியல் அபிலாஷைகள் அற்றவரென்றும் பிரியங்காவே தமது பரம்பரைச் சொத்தைக் கோரலாமென்றும் காங்கிரஸ் கட்சி நம்புகிறது. 21 வயதுடைய பிரியங்கா இளம் இந்திராபோல தோற்றமளிக்கிறார். இன்னும் நான்கு ஆண்டுகளில் அடுத்த பொதுத் தேர்தல் வரும்நேரம் அவர் அரசியலுக்கேற்ற வயதை அடைந்துவிடுவார்.

பரம்பரை ஆட்சியின் ஆசை எப்போதுமே வலுவானதுதான். இந்திய தரத்திலும் 30 பவுண்கள் பேரதிருஷ்டமாக இருந்தபோதும் அந்த விலையிலான இந்நூல் அநேகமாக முற்றிலும் விற்பனையாகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழோசை

லண்டன் செப்டம்பர் 11, 1992


## அந்த மகானுக்கு வந்தனங்கள்

சில தினங்களுக்கு முன்னதாக லண்டனிலே ஒரு வெள்ளைக்கார இளைஞருக்கு மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றது. பிரபல மிருதங்க வித்வான் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியின் சிஷ்யர் அவர். இத்தகைய ஈடுபாடு- ஆவல்- அறிவு- அநுபவம் இந்திய கலைகள் தொடர்பில் மேலைநாடுகளிலே ஏற்படுவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவரை இன்று அவ்வளவாக நாம் கருத்தில் கொள்வதில்லை. கலாயோகி ஆனந்த குமாரசாமி என்ற ஈழம் ஈந்த அந்த பெருமகனின் தன்னைப் பிரபலப்படுத்த விரும்பாத கொள்கை இதற்குக் காரணமாகலாம்.

ராஜ ராம் மோகன் ராயிலிருந்து மகாத்மா காந்தி வரை பல சிந்தனையாளர்களுக்கு இந்திய தேசிய வாதத்துக்கான தளத்தை மதம் உருவாக்கியபோது, ஆனந்த குமாரசாமி கலைகளினூடாகவே புதிய இந்தியாவைப் பார்த்தார். மேலைத்தேய கலாசாரமும் கிரேக்க அழகு, ரசனைக் கொள்கையும் ஆதிக்கம் கொண்டிருந்த நேரத்தில் இந்திய கலைகள் உலகின் உன்னதமான கலைகளுக்கு ஈடுஇணையானவை என்பதை வெளிப்படுத்த வேண்டுமென்று அதற்கு சங்கல்பமிட்டவர் அவர்.

இலங்கையில் சிங்கள மக்களுக்குங்கூட அவர்களுடைய கலை கலாசாரத்தில் அப்போது ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியவர் இவரே. ஆனந்த குமாரசாமியின் தந்தையாரான சேர் முத்துக் குமாரசாமிதான் மகாவம்சத்தை பாளியிலிருந்து ஆங்கிலத்தில் முதன்முதலாக மொழி பெயர்த்தவர். லண்டனில் சட்டத்துறைக்கு அழைக்கப்பட்ட முதல் இந்துவான சேர் முத்துக்குமாரசாமி, விக்டோரியா மகாராணியிடமிருந்து முதலாவது ஆசிய தேசத்து 'சேர்' பட்டத்தையும் பெற்றவர். அரிச்சந்திரா நாடகத்தை தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அவர், அந்த நாடகத்தை விக்டோரியா மகாராணியின் முன் நடித்துக் காண்பித்தாரென்றும் மயான காண்டக்காட்சியில் அவர் அரிச்சந்திரனாக நடிக்கும்போது சந்திரமதியை விரட்டும் காட்சியில் உணர்ச்சிவசமுற்று அரங்கத்தில் ஏற்றப்பட்டிருந்த குத்து விளக்கைத் தூக்கினாரென்றும் சொல்வார்கள்.

இரண்டு வயதில் தந்தையார் காலமாகிவிட்டபோது ஆங்கிலேயரான தாயார் எலிஸபேத் கிளேயுடன் லண்டன் வந்த ஆனந்த, லண்டன் பல்கலைக்கழகத்தில் கனிப்பொருளியல் (Geology)துறையில் பட்டம்பெற்றபின் 25ஆவது வயதில் இலங்கைக்குத் திரும்பிச் சென்றபோதுதான் அவரது வாழ்வில் ஒரு திருப்பத்தை, இந்த இலங்கை- இந்திய கலாசார கலைப்பாரம்பரிய தொடர்புகள் ஏற்படுத்தின. அவரது பயணங்கள், ஆராய்ச்சிகள், படிப்புகள் மேலைக்கலாசாரத்தில் இலங்கையர் கொண்டிருந்த மோகத்தை உணர்த்தியபோது, சொந்தநாட்டு கலையின் காப்பாளராக அவர் பரிணமித்தார்.

இலங்கையராகவிருந்தாலும் இந்தியாமீது அவர் கொண்டிருந்த நேசம் தாகூர், காந்தி போன்றோருக்கு இணையானதாகவே இருந்தது. இருநாடுகளினதும் ஏகாதிபத்திய விடுதலைக்கும் அவர் உழைத்தார். இலங்கையில் Ceylon Social Reform Society என்று ஒன்றை ஆரம்பித்து 'Ceylon National Review' என்ற சஞ்சிகையையும் வெளியிட்டவர், 1910இல் Royal India Society in Londonஎன்ற அமைப்பை நிறுவி லண்டனில் இந்தியர்களை ஒன்றுபடுத்தினார். அவரது சுதந்திர வேட்கை அரசியல் ரீதியானதாக மாத்திரமன்றி கலாசார, ஆன்மீக ரீதியிலுமிருந்தது. ஆன்மீக ஒழுங்கிணைப்பற்ற- வெறுமனே அரசியல் ரீதியான ஒருங்கிணைப்பு இந்தியாவுக்கு பெரும் ஆபத்தாக அமையும் என்று ஆனந்த குமாரசாமி எச்சரித்தார். ஆனால், இரு நாடுகளிலுமே அரசாங்கங்களும் மக்களும் ஆதரவு அளிக்கவில்லை என்பதைக் கண்டதும் 1915இல் அவர் அமெரிக்காவுக்குச் சென்றார். பொஸ்ரன் தொல்பொருள் காட்சிச்சாலை அவரின் பெருமளவிலான கலைத்தேட்டங்களை வாங்கியதோடு, 1947 செப்டம்பர் 9ஆம் தேதி அவர் காலமான நாள்வரை அவரும் அங்கு பணிபுரிந்தார்.

அவரைப் பொறுத்தவரையில் அவரது வாழ்வோ, அவர் புரிந்த பணிகளோ முக்கியமானவைகள் அல்ல. "என்னுடைய சொந்த தத்துவம் என்று ஒன்றை ஒருபோதும் நான் உருவாக்கவில்லை. அல்லது, ஒரு புதிய சிந்தனை மதத்தை தோற்றுவிக்கவும் நான் விரும்பவில்லை. சிலவேளைகளில், நான் கற்றவைகளில் மேன்மையானது, எனக்காக என்று ஒன்றையும் எண்ணாமலிருப்பதே" என்று கூறிய அவர் தன்னுடைய சுயசரிதையை எழுத மறுத்தார். மற்றையவர்கள் எழுதுவதைத்கூட விரும்பவில்லை அவர். "இந்தியாவின் விளிப்புணர்வுக்கு மாத்திரமன்றி, புதிய உலக விளிப்புணர்வுக்கு பொறுப்பானவர்களிலும் ஆனந்த குமாரசாமிக்கு முதலிடம் உண்டு" என்று சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் ஒருமுறை கூறியிருந்தார்.

ஆக, ஆகஸ்ட் 22ஆம் தேதி இந்த மகானின் 115ஆவது பிறந்ததினம் வந்தது. நேற்று முன்தினம் அவரின் நினைவு நாள். இந்த நேரத்தில், வெளிநாடுகளில் அந்தக் கலையுணர்வை அநுபவிக்கையில் போற்றுதலோடு அவரை நினைவில் கொள்கிறோம்.

# திராவிட மாயை

அந்தக் காலத்தில் ஆரிய மாயை என்று பேசி வந்தார்கள்- பிராமணர்களை இழிவுபடுத்துவதற்காக. இன்னமும் அந்த ஆரிய மாயை தொடர்கிறதோ இல்லையோ திராவிட மாயை தொடர்கிறது. மாயை என்ற ஓரே காரணத்தினால் யதார்த்தத்தை விட்டு வெகுதூரம் விலகிச் சென்று விட்டது தமிழ்நாடு. இந்தியாவுடன் இன்று தமிழ் நாட்டுக்கு உள்ளது பூகோளத் தொடர்பு மட்டுமே; அரசியல் பிணைப்பும் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. எந்தப் பக்கம் செல்வது என்று தெரியாமல் தமிழ்நாடு தடுமாறுகிறது. இதற்கு முக்கிய காரணம் ஆட்சியாளர்கள்- அரசியல்வாதிகள்.

சுதந்திரம் பெற்ற புதிதில் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பேற்ற அந்த நாளைய காளை மாட்டுச் சின்ன காங்கிரஸ், சுதந்திரப் போராட்டத்திற்கு உதவியவர்களைக் கைதூக்கி விட நினைத்தது. கட்சியிலும் ஆட்சியிலும் காங்கிரஸ் அப்படிப்பட்ட பல தியாகிகளுக்குப் பதவிகளைக் கொடு



த்தது. அதில் தவறு ஏதுமில்லை. ஆனால் எம்.எல்.ஏ, எம்.பி. தேர்தல் வேட்பாளர்களாக, கூடிய மட்டும், பணக்காரர்கள், சமுதாயத்தில் மிகவும் கௌரவமானவர்களையே தேர்ந்தெடுத்தது. அவர்களில் பலர் கௌரவத்திற்காகவே அந்தப் பதவிகளை வகித்தவர்கள். ஒரு சிலர் அரசியல் தொடர்புகளை வைத்துக் கொண்டு தங்களது தொழில் வர்த்தக அமைப்புகளை வளர்த்துக் கொண்டார்கள். இன்றுள்ள நிலைமைகளைப் பார்க்கும் பொழுது அது ஒரு பெரிய தவறு அல்ல என்றே நினைக்கத் தோன்றுகிறது.

## கோபுரமேறிய குப்பைகள்

ஆனால் திராவிடக்கட்சிகள் தலை தூக்கிய பிறகு சாமானியர்களைக் கைதூக்கி விடுகிறேன் என்ற பெயரில் ஒன்றுமில்லாதவர்கள் கோபுரமேறிய குப்பைகளானார்கள்; உயரே இருந்தாலும் குப்பைகள் குப்பைகளே என்பதைத் தாளம் தப்பாமல் நிரூபித்தார்கள். இன்றும் அதையே செய்து வருகிறார்கள். இதன் உச்சகட்ட வெளிப்பாடுகளே

-ஆரத்தி எடுப்பது
-மலர்க்கிரீடங்கள்
-ரூபாய் நோட்டு மாலைகள்
-தங்க வாள்
-வெள்ளிச் செங்கோல்
-பூ விரிப்பு நடைபாதைகள்
-சால்வை அணிவிப்பு
-வெள்ளி சிம்மாசனம்

இன்னும் எத்தனை எத்தனையோ. மக்களாட்சி என்ற பெயர் இருந்த போதிலும் தங்கள் ஆடம்பரத்தினால் மன்னர் ஆட்சியையே தோற்கடிப்பவர்கள் இவர்கள். மன்னர் ஆட்சிக்கால வாள், செங்கோல், கேடயம், சிம்மாசனம் எல்லாம் ஏன் இவர்களுக்கு? தங்கள் மனப்பாங்கில் இவர்கள் ராஜாக்களாக, ராணிகளாகவே இருக்கிறார்கள். இந்தியாவில் மக்களாட்சி மலர்ந்து அரைநூற்றாண்டுகாலம் ஆகப்போகிறது; எனினும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத கூத்துக்கள் தமிழ்நாட்டில் மட்டுமே அரங்கேறுகின்றன.

தேர்தல் காலத்தில் இவர்கள் பேசும், எழுதும் தமிழிலும் மன்னராட்சி காலச் சொல்லாட்சியே காணப்படுகிறது. தேர்தலில் போட்டியிடுவது என்றால் அதை அப்படிச் சொல்வதில்லை- "களம் புகுவார்" என்பார்கள்; தேர்தல் அலுவலகத்திற்குப் 'பாசறை' என்று பெயர்; அந்தப் பெயர் வைத்து விட்ட காரணத்தினாலோ என்னவோ தேர்தல் காலத்தில் பல கட்சி அலுவலகங்கள் ஆயுதக் கிடங்குகளாகவே இருக்கும் அது மட்டுமல்ல; இன்னார் கூட்டத்தில் பேசுவார் என்பதை "முழங்குவார்", "முரசறைவார்" என்று பண்டைக் கால பாணியில்தான் சொல்வார்கள். பெட்ரோலில் ஓடும் கார்கள்,ஜீப்புகள்,வேன்கள், இவர்களுக்கு "ரதங்கள்". அரண்மனைகளில் அந்தக் காலத்தில் எல்லாக் குதிரைகளுக்கும் பெயர் வைத்தார்களோ இல்லையோ, இவர்கள் இந்த ரதங்களுக்குப் பெயர் வைக்கத் தவறுவதில்லை.

தேர்தலில் ஜெயித்துவிட்டால் 'வெற்றி பெற்றார்' என்று சொல்வதில்லை; "வாகை சூடினார்" என்பார்கள்; எதிர்க்கட்சி போட்டியிட்ட தொகுதியில் வெற்றிபெற்றால் "அந்தத் தொகுதியைக்" கைப்பற்றினார் என்பார்கள்- ஏதோ வேற்று நாட்டு மன்னனை வெற்றி கொண்டு விட்டது போல.

அந்த அளவுக்கு மன்னராட்சி கால எண்ணமே மேலோங்கி இருக்கிறது. தலைவர்களைப் பொறுத்த வரை இந்தப் போக்கு. தொண்டர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

## சுயமரியாதைக் காரர்கள்

ஒரு காலத்தில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களைத் தமிழகத்தில் 'சூனாமானா' என்று அழைப்பதுண்டு. அதாவது சுய மரியாதைக் காரர்கள். அந்தச் சுயமரியாதை இன்று தலைவர்களின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுகிறது. உடன் பிறப்புகள், ரத்தத்தின் ரத்தங்கள் என்று சொல் அலங்காரத்தினால் மட்டுமே பெருமைப்படுத்தப்படும் தொண்டர்கள் தலைவர்களுக்காக அலகுகுத்திக் கொள்கிறார்கள்; தீக்குளிக்கிறார்கள். வெயிலில் வாடி வதங்கி தங்கள் தலைவர்களை ஏர்கண்டிஷன் அறைகளில் மகிழ வைக்கிறார்கள். தனக்கு அடுத்த வேளைச் சோற்றுக்கு வழியில்லாத போதிலும் தலைவர்களை மலர்களால் அலங்கரித்து அவர்களுக்கு அறுசுவை விருந்து படைக்கிறார்கள். தம் பொண்டாட்டி பிள்ளை குட்டிகளை கவனிக்க முடியாவிட்டாலும் தலைவர்களின் சின்ன வீடுகளுக்குச் சாமரம் வீசுகிறார்கள். ஓலைக் குடிசையில் தான் வாழ்ந்த போதிலும் ஓங்கி உயர்ந்த மாடமாளிகைகளைத் தலைவர்கள் ஊழல் பணத்தில் வாங்குவதை இவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. இவர்களில் கெட்டிக்கார, உயர்மட்டத் தொண்டர்கள் ஊழல் பணபேரத்தில் சற்றே தரகு வேலை செய்து புறங்கைத் தேனை நக்குகிறார்கள்.

இந்தத் தலைவர்களுக்கோ தொண்டர்களுக்கோ பொருளாதாரம் பற்றி எதுவும் தெரியாது. பார்க்கப்போனால் புண்ணாக்கு- பருத்திக்கொட்டை பற்றிய அறிவு கூட பூஜ்யம். இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் கரைவேட்டி, கட்சிக் கொடி, கோஷம்போடுதல், கோஷ்டி பிரிதல், ஊர்வலம் செல்லுதல் போன்றவையே. மாநிலத்தின் உடனடித்தேவைகள், மத்திய மாநில உறவு, நாட்டு நலன்- ஒரு புடலங்காயும் இவர்களுக்குத் தெரியாது; தெரியவில்லையே என்ற வருத்தம் இல்லை; தெரிந்து கொள்ள வேண்டுமே என்ற ஆதங்கமும் இல்லை.

> சுயமரியாதை இன்று தலைவர்களின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுகிறது. உடன் பிறப்புகள், ரத்தத்தின் ரத்தங்கள் என்று சொல் அலங்காரத்தினால் மட்டுமே பெருமைப் படுத்தப்படும் தொண்டர்கள் தலைவர் களுக்காக அலகுகுத்திக் கொள்கிறார்கள்; தீக்குளிக்கிறார்கள். வெயிலில் வாடி வதங்கி தங்கள் தலைவர்களை ஏர்கண்டிஷன் அறைகளில் மகிழ வைக்கிறார்கள். தனக்கு அடுத்த வேளைச் சோற்றுக்கு வழியில்லாத போதிலும் தலைவர்களை மலர்களால் அலங்கரித்து அவர்களுக்கு அறுசுவை விருந்து படைக்கிறார்கள். தம் பொண்டாட்டி பிள்ளை குட்டிகளை கவனிக்க முடியாவிட்டாலும் தலைவர்களின் சின்ன வீடுகளுக்குச் சாமரம் வீசுகிறார்கள்.

இவர்களை இப்படியே வைத்துக் கொள்வதுதான் நல்லது என்று சில அரசியல் பெருந்தலைவர்களும் ஆட்சியாளர்களும் நினைக்கிறார்கள். அந்த மாதிரியே செயல்பட்டு வருகிறார்கள்; உழைக்கக் கூடியவர்களையும், தன்மானம் உள்ளவர்



களையும் ஓசியில் சோறுபோட்டு, இலவச வேட்டி, சேலை கொடுத்து சாப்பாடு என்பது கூப்பாடு போடுவதற்கே என்று இவர்களை உள்ளத்தாலும் உடலாலுமேமுடமாக்கி விட்டார்கள். தமிழ்நாட்டில் அண்டை மாவட்டம் பற்றிய சமூக, பொருளாதாரத் தகவல்கள் இவர்களுக்குச் சரிவரத் தெரியாது; அண்டை மாநிலங்கள் பற்றி இவர்கள் ஏன் கவலைப்படுகிறார்கள்?

## ஆரிய லேகியம்

ஆனால் திராவிடத் தலைவர்கள் எவ்வளவு தூரம் ஆரிய மாயை பற்றிப் புலம்பினாலும் தேர்தல் ஜுரம் வரும்பொழுதெல்லாம் அவர்களுக்கு "ஆரிய லேகியம்" தேவைப் படுகிறது. அப்பொழுது இனம்-மதம்-ஜாதி பாராமல் கூட்டணி வகுத்துக் கொள்வார்கள்; வென்றால்

## அகராதி

கூட்டணி தொடரும்; தோற்றால் துவளும். பிறகு மீண்டும் காலதேச வர்த்தமானத்தை ஒட்டி மலரும்; வளரும்.

இன்றைய நிலையில் திராவிடத்தின் பரிணாம வளர்ச்சி "திராவிடத்

8ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வியாழ மாற்றத்தில் உங்கள் பலன்

இறைவனால் படைக்கப்பட்ட இயக்கங்களில் பெரும்பங்கு கொண்டு ஜீவராசிகள் பூமியில் பிறக்கின்ற காலநேரங்களுக்குத்தக்க வாறு இன்ப துன்பங்களை வழங்கு கின்ற அதிகாரங்களை பெற்றவர்கள் 'கோள்கள்' எனப்படும் நவகிரகங் களாகும். சூரியனை நடுவாகக் கொண்ட இந்த கிரகங்கள் பூமியி னுடைய சுழற்சிக்குத் தகுந்தவாறு இயற்கையில் மாறுதல்களை உண் டாக்கி மனிதர்களுடைய வாழ்க்கை யிலும் நல்ல பலன்களையும் தீய பலன்களையும் மாறிமாறி அளிக் கின்றன. சூரியன், சந்திரன், செவ் வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்ற ஒன்பது கிரகங்களில் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவைகள் பாவ கிரகங்களாகவும் வியாழன், வெள்ளி, புதன் இவைகள் சுபகிரகங்களாகவும் சந்திரன் வளர்பிறையில் சுபராகவும், தேய்பிறையில் பாவராகவும் கருதப் படுகின்றன.

இந்த கிரகங்கள் மேஷம் முதலான 12 ராசிகளில் தங்களுடைய வேகத் திற்கு தக்கவாறு சுற்றி வருவதையே "கோசாரம்" என்று கூறுவர்.

இவற்றுள் தேவகுருவான வியாழன் என்றழைக்கப்படும் பிரு ஹஸ்பதியானவர் ஒவ்வொரு ராசி யிலும் சுமார் ஓராண்டு காலம் தங்கியிருந்து அடுத்த ராசிக்கு மாறுவர்.

சுப கிரகமான வியாழபகவான் ஒருவருடைய ராசிக்கு 2, 5, 7, 9, 11 ஆகிய இடங்களில் இருக்கும் போது நல்ல பலன்களை கொடுப்பா ரென்றும் 1, 3, 4, 6, 8, 10, 12 ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும் போது கஷ்டமான பலன்களை தரு வாரென்றும் ஜோதிட நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதிலும் ராசிக்கு 11ம் இடத்தில் இருக்கும்போது மிக நல்ல பலன் களை கொடுப்பாரென்றும் 8ம் இடத்தில் இருக்கும்போது கடின மான பலன்களை தருவாரென்றும் கூறப்படுகிறது. இதையே பழந்தமிழ் பாடலொன்றில்,

"ஜென்ம ராமர் வனத்திலே
சீதையை சிறை வைத்ததும்
தீதிலாதொரு மூன்றிலே துரியோ
தனன் படை மாண்டதும்
இன்மையெட்டினில் வாலி
பட்டமிழந்து போனதும்
ஈசனாரொரு பத்திலே தலை
யோட்டிலே இரந்துண்டதும்
தர்மபுத்திரர் நாலிலே வனவாச
மப்படி போனதும்
சத்திய மாமுனி யாறிலே யிரு
காலிலே தலைபூண்டதும்
வன்மையுற்றிட ராவணன் முடி
பன்னிரண்டில் வீழ்ந்ததும்
மன்னுமா குருசாரி மாமனை
வாழ்விலாதுறு மென்பவே." என்று விரிவாக சொல்லப்படுகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று வியாழ பகவான் சிம்மராசியிலிருந்து கன்னி ராசிக்கு பெயர்ச்சி அடைந்துள்ளார். புதனுடைய வீடான கன்னிராசியில் வியாழன் தங்கியிருக்கும் நாட்களில் உலகத்தில் கல்வித்துறை மேன்மை அடையும். கலைகள் சிறப்புறும். பெரியோர்கள் ஆலோசனையினால் நாட்டில் அமைதி நிலவும். தெய்வ வழிபாடு மேலோங்கும்.

## நட்சத்திரத்தின்படி ராசிகளுக்கான பலன்கள்

### மேஷம்

6ம் இடத்தில் குரு சஞ்சரிப்பதால் வியாதிகள் ஏற்படும். சிறு தொல் லைகள் உண்டாகும். பிறருடன் பேச்சுவார்த்தைகளில் எச்சரிக்கை யாக இருப்பது நல்லது. பொருள் கள் வாங்குவதில் கவனம் தேவை.


### ரிஷபம்

5ம் இடத்திற்கு வியாழன் வந்துள்ளதால் காரிய வெற்றி உண்டு. வம்ச விருத்தியும் ஏற்பட லாம். புதிய முயற்சிகள் கை கூடும். பெரியோர் ஆசி கிடைக்கும்.

### மிதுனம்

4ம் இடத்தில் குரு வந்துள்ளதால் பிரச்னைகள் தீரும்நேரம். சென்ற ஆண்டில் தடைப்பட்ட காரியங்கள் மீண்டும் நடைபெறும். எதிர்ப்புகள் இருந்தாலும் முடிவில் வெற்றி உண்டு. நம்பிக்கை இழக்க வேண் டாம். எதையும் தீர விசாரிப்பது நல்லது.

**சிவஸ்ரீ இராம நாகநாதசிவம் குருக்கள்**
இலண்டன் ஸ்ரீமுருகன் கோவில்
மனோர் பார்க்



### கடகம்

சென்ற ஆண்டில் வெகு சுலப மாக காரியங்களை நிறைவேற்றிய நீங்கள் இந்த ஆண்டு சோர்வு அடைவீர்கள். சிறிது களைப்பாறி மீண்டும் செயல்படுங்கள். உங்களால் பிறருக்கும் தொல்லை உண்டு. கவனமாக இருப்பது நல்லது.

### சிம்மம்

2ம் இடத்திற்கு சென்றுள்ள குருவினால் குடும்பத்தில் பழையபடி சந்தோஷம் பெருகும், தம்பதிகள் அந்யோன்யம் ஏற்படும். நல்ல செய்தி, அறிவிப்பு வரும். சுப காரியங்கள் நடைபெறும்.

### கன்னி

உங்கள் ராசிக்குத்தான் குரு வந்துள்ளார். மந்த நிலைமை உண்டு. அதிர்ஷ்டம் கண்ணுக்கு தெரியும். கைக்கு கிடைக்காது. ஏமாற்றம் வேண்டாம். அவசரமும் தேவையில்லை. எதிலும் நிதானிப் பது நல்லது.

### துலாம்

12ம் இடத்திற்கு வந்துள்ள குருவினால் அதிக செலவு உண்டு. சுப காரியங்களால் விரயம் ஏற்படும்., அலைச்சல் இருக்கலாம். உங்கள் உழைப்புக்கு பலன் கிடைக் காவிட்டாலும் சோர்ந்து விடாதீர் கள். பொறுமை தேவை.

### விருச்சிகம்

வெகு நாட்களுக்கு பிறகு நல்ல காலம் பிறந்துள்ளது. சந்தர்ப் பத்தை விடாது பயன்படுத்துங்கள். பயன் பெறுவீர்கள். தொழில் தொடங் குங்கள். மேன்மை கிடைக்கும். வசந்தமான காலம் இது. வெற்றி மேல் வெற்றி.

### தனு

10 இடத்திற்கு வந்து வியாழ பகவானால் பதவிக்கு கலக்கம் உண்டு. உத்யோகத்தில் கவனம் தேவை. மேலதிகாரிகளை கவனித்து வையுங்கள். பிரயாணத்தினால் அலுப்பு உண்டு. குடும்பத்தினர் களுடன் அனுசரித்துப் போவது நல்லது.

### மகரம்

சென்ற ஆண்டு 8ல் இருந்து உங்களை கஷ்டப்படுத்தியவர் 9ம் இடத்திற்கு இப்போது வந்து நல்லதை கொடுக்க இருக்கிறார். பெறுவது உங்கள் சாமர்த்தியம். நண்பர்களால் நிறைய உதவி உண்டு. கிடைக்காது என்ற நினைத்தது தானாகவே வந்து சேரும். வீட்டில் அமைதி உண்டு.

### கும்பம்

8ல் உள்ள குருவினால் பலவித தொல்லை உண்டு. விழிப்புடன் இருக்க வேண்டிய நேரம். சென்ற மாதமே கஷ்டம் தொடங்கி விட்டது. பொருள்களில் கவனம் தேவை. எதிலும் அனாவசியமாக மாட்டிக்கொள்ள வேண்டாம். இறை வழிபாடு துணை நிற்கும்.

### மீனம்

7ம் இடத்தில் வந்துள்ள வியாழ னால் சுபகாரியங்கள் கை கூடும் நேரம். இள வயதினருக்கு கொண் டாட்டமான காலம். பிரிந்த தம்பதிகள் ஒன்று கூடுவர். சுகமான பயணம் உண்டு. அனுபவிப்பீர் நன்மைகளை. வாழ்க. வளர்க.

வியாழ மாற்றத்தினால் தீய பயன்களை உடையவர்கள் பிரதி வியாழக்கிழமைகளில் நவக்ரஹங் களை வழிபட்டு குருபகவானுக்கு மஞ்சள் வஸ்திரம், மஞ்சள் புஷ்பம் சாத்தி அர்ச்சனை செய்து கடலை, சுண்டல் நிவேதனம் செய்து வழிபட் டால் துன்பம் நீங்கும். இன்பம் மலரும். தக்ஷிணாமூர்த்திக்கும் அர்ச்சனை செய்யலாம்.

## திராவிட......

7ம் பக்கத் தொடர்ச்சி

தாய்" என்று போற்றப்படும் பிராமணப் பெண்மணியாகிய ஜெய லலிதா முதல்வரானது, (அதே திராவிட இயக்கம் அவராலேயே அழிந்துவிடும் என்பதும் உண் மையே!) அவர் திராவிட இயக் கத்துடன் தொடர்பு கொண்டவர் இல்லை என்று எதிர்க்கட்சிகள் குறைசொன்னது, அவர் தங்களவர் என்று மறைவாக பிராமணர்கள் சொல்லிக் கொண்டது என்ற நிலை யெல்லாம் போக கருணாநிதியின் ஆட்சிக் கலைப்பை அன்று விமரி சனம் செய்த முக்கிய புள்ளிகளும், இன்று ஜெயலலிதாவின் ஆட்சி முடித்து வைக்கப்படவேண்டும் என்று பொது மேடைகளில் கூவுகிறவர் களில் சிலரும் பிராமணர்களே என்ற அளவுக்கு திராவிட உணர்வு இருக்கிறது. அசல் வாழ்க்கையில் நீர்த்துப்போன இந்த 'திராவிடம்' என்ற சொல்லை வங்காள விரி குடாவில் மூழ்கடித்து விட்டு, இந்திய தேசீயம் என்ற நீரோட்டத்தில் தமிழ் இன உணர்வு ஐக்கியப்படு வதே நாட்டுக்கு உகந்தது. திராவிட மாயை அகன்றால் தேசீயம் பிறக் கும்.

## வாலறுந்த பட்டங்கள்



பாடசாலை ஒன்றில் பகல் பொழுதில்
பருவ மங்கையர் நால்வரைச் (இலங்கையரல்லாத) சந்தித்தேன்.
பலதையும் பத்தையும் பற்றி உரையாடினோம்.
ஒழிவு மறைவு இன்றி, வெட்கம், நாணம் இன்றி
ஒவ்வொருத்தியும் தங்கள் தங்கள் எதிர்கால
நோக்கம் பற்றி கூறினர்.
முதலவள் கூறினாள் "எனக்குக் குழந்தைகள் வேண்டும்,
ஆனால் கணவன் வேண்டவே வேண்டாம்" அடுத்தவள்
பகர்ந்தாள், "கனடா என்பது பல நாட்டு மக்களும் வாழும்
பரந்த நாடு; பலருடன் கூடிப் பல சாதிக் குழந்தைகளைப்
பெறுவதே என் எதிர்கால நோக்கம்" என்றாள்.
மூன்றாமவள் கூறினாள் "எனக்குக் கணவனும் வேண்டாம்,
குழந்தைகளும் வேண்டாம். ஆனால் எனக்கு "செக்ஸ்" (Sex)
வேண்டும் என்றாள்.
நான்காமவள் என்ன வெடிகுண்டை என் தலையில்
போடப் போகிறாளோ எனப் பயந்தேன்.
பயந்தது பொய்க்கவில்லை. "இப்போது என்னுள் ஒரு
குழந்தை வளர்கிறது; அதனைக் கலைப்பதா? விடுவதா,
இதுவே எனது பிரச்சனை" என்றாள்.
அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அக்கினி சாட்சியாக
அவன் கட்டிய மாங்கல்யம் அவள் கழுத்தில் ஏறிய
பின்தான் எங்கள் பெண்கள் தாயாக முடியும்;
இதுவே எங்கள் நாட்டுப் பண்பாடு" என்றேன்.
"சிலி"(Silly) என்று சொல்லிச் சிரித்தனர்
நால்வரும்.
"இல்லறம் என்ற நல்லறத்தை இனிது நடத்தாமல்
ஈன்றெடுத்த குழந்தைகளுக்கு இந்நாட்டில்
இருக்கும் மதிப்பும் வசதிகளும் உங்களுக்குத் தெரியுமா?"
என்றாள் ஒருத்தி.சிங்கிள் பேரன்ராக(Single Parent)
இருந்து விட்டால் நோ புறப்ளம்(no problem)
என்றாள் இன்னொருத்தி. "ஒருவனுக்கு ஒருத்தி என்று
வாழும் உங்கள் சமூகத்திற்கு எங்கே விளங்கப்
போகிறது எங்கள் சுதந்திரப் போக்கு" என்றாள் மற்றொருத்தி.
"சிவ சிவ" என்று தலையில் அடித்துக் கொண்டேன்.
பெண்களா அல்லது பேய்களா இவை என்று பேதலித்தேன்.
வாலறுந்த இந்தப் பட்டங்கள் வாழ்க்கையென்னும்
வானத்தில் பறக்க மாட்டா, குத்துக்கரணம் தான்
போடப்போகின்றன.
எங்கள் குஞ்சுகளுக்கு, எங்கள் குலக் கொழுந்துகளுக்கு
எங்கள் பண்பாடுகள், எங்கள் பழக்க வழக்கங்கள்
என்னும் வால்களைக் கட்டி விடுவோம். எங்கள்
பட்டங்கள் வாழ்க்கை என்னும் வானத்தில்
உயர உயரப்பறக்கட்டும். பறப்பது மாத்திரமல்ல
எங்கள் பண்புகளைப் பறைசாற்றிக் கொண்டு,
"விண்" கூவிக் கொண்டு பறக்கட்டும்.

**கனகேஸ் நடராஜா**
(கனடா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழைய நினைவுகள்

சோ.சிவபாதசுந்தரம்

## ஈழகேசரி நாட்கள்

யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஈழகேசரி வார இதழுக்கு ஆசிரியராக நான் சேர்ந்தது ஒரு தனிக்கதை. ஏற்கெனவே பல்கலைக்கழகத்திலும் சட்டக் கல்லூரியிலும் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே ஆங்கிலத்திலும் தமிழிலும் கதைகளும் கட்டுரைகளும் எழுதிப் பழக்கமிருந்தது. ஈழகேசரி அதிபர் பொன்னையா கேட்டுக் கொண்டதில், கொழும்பிலிருந்து வாரா வாரம் அரசியல் சம்பந்தமான கொழும்புக் கடிதம் ஒன்று எழுதிவந்தேன். 1938 மத்தியில் எனது விருந்தினராக கல்கி கிருஷ்ணமூர்த்தியும் ஓவியர் மாலியும் இலங்கைக்கு வந்து பல இடங்களுக்கும் சென்று திரும்பிய சமயம் ஈழகேசரி அதிபரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஈழகேசரி ஆண்டுமலர் ஒன்று, ஆனந்தவிகடன் மலர் போல வெளியிட விரும்பியிருப்பதாகவும், அதற்குச் சில விளம்பரங்களும் சிறப்புக் கட்டுரைகளும் தேடி அனுப்புமாறும் அவர் கேட்டிருந்தார். அவற்றை ஒருவாறு சேகரித்துக் கொண்டபின், ஆண்டுமலர் அமைப்பில் சில புதிய முறைகளைச் சேர்க்க வேண்டும் என்ற ஆசை தூண்டியதில், நானாகவே சுன்னாகம் ஈழகேசரி அலுவலகத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். முன்பின் ஏற்பாடு ஒன்றுமில்லாமல் போன நான், அதன் ஆசிரிய பீடத்தில் நான்கு ஆண்டுகள் சேவித்தது வியப்பான செய்தி.


பொன்னையாவின் உதார குணமும் என்மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும், அந்த ஆண்டுமலரை நானே தயாரிக்க ஒப்படைத்து விட்டார். அவ்வளவுதான், ஆண்டுமலரும் வெளிவந்து, மேலும் வாரப் பதிப்புக்கள் சிலவும் என் கையால் வெளிவந்தும் நான் வேறு எந்தச் சிந்தனையுமில்லாமல் அங்கேயே தங்கிவிட்டேன். பொன்னையா நான் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்தார். தனக்கும் எனக்குமாகத் தம் வீட்டிலிருந்தே உணவு வரவழைத்தார். அச்சகத் தொழிலாளரும் மற்றவர்களும் என்மீது மிகுந்த நெருக்கமானார்கள். இரண்டொரு வாரம் மாத்திரம் தங்கலாம் என்று நினைத்துக்கொண்டு அங்கு வந்த நான் நாலாண்டுகள் அங்கே என் சொந்த நிறுவனம் போல உட்கார்ந்திருந்தது ஆச்சரியம்தான். இதில் வியப்பென்னவென்றால், இரண்டொரு மாதம் கழித்து நண்பர் பொன்னையாவின் மனைவியார் ஒரு நாள் கணவனைக் கேட்டார்: "சிவபாதம் என்ன ஈழகேசரியின் முழுப்பொறுப்பையும் பார்த்துக்கொண்டிருக்கிறாரே, சம்பள விஷயம் ஏதாவது பேசி முடிவு செய்திருக்கிறீர்களா?" என்று. அதற்கு பொன்னையா சொன்ன பதில் பின்னால் எனது காதுக்குமெட்டியது. "அவர் கையில் பத்திரிகை நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. சம்பளம் எதுவும் நான் கொடுக்கும் நிலையிலில்லை, அவரும் கேட்க மாட்டார்" என்று சொன்னாராம். உண்மை நிலையும் அதுதான். ஈழகேசரியில் நான் இருக்கும் வரையும் பத்திரிகையின் முழுப்பொறுப்பும் என் கையில்தான் இருந்தது. பொருளாதார விவகாரம் ஒன்றும் கிடையாது. காரணம் என்னவென்றால், அந்த அமைப்பிலே தனலக்குமி புத்தகசாலை என்ற புத்தக விற்பனை நிலையம் ஒன்றும், வட இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகம் என்ற நிறுவனம் ஒன்றும் பத்திரிகைக்கு கைகொடுத்து வந்தன. ஈழகேசரியில் நான் இருக்கும் வரையும் பத்திரிகை நிர்வாகமும் ஆசிரியப் பொறுப்பும், மற்றும் புத்தகப் பதிப்பு மேற்பார்வை வேலைகளும் என் சொந்தப் பொறுப்பில் இருந்ததால், எனக்குத் தேவையான சௌகரியங்கள் யாவும் ஸ்தாபனத்தின் உரிமையாளர் போன்று வழங்கப்பட்டன. ஆண்டுக்கொரு தடவை டிசம்பர் மாதத்தில் எனது திட்டப்படி தென்னிந்திய சுற்றுப் பயணம் செய்யவும் வசதி கிடைத்தது.

ஈழகேசரியில் நான் போய்ச் சேர்ந்த சமயம் பள்ளிக்கூட ஆசிரியர்களும் பண்டிதர்களும் எழுதிய இலக்கியக் கட்டுரைகள்தான் வெளிவந்து கொண்டிருந்தன. வாராவாரம் தலையங்கக் கட்டுரை ஒன்று, அரசியல் சம்பந்தமாக, எழுதப்படும். இதை நிரந்தரமாக அம்பலவாணர் என்ற பள்ளிக்கூட ஆசிரியர் எழுதிக் கொடுப்பார். இவர் புகழ்பெற்ற சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் மகன். அப்போதிருந்த போர்மன் சின்னத்துரை என்பவர் கிராமத்தவர், ஆனாலும் இலக்கிய அறிவுள்ளவர். கட்டுரைகளில் இலக்கணப் பிழை இருந்தால் திருத்தக் கூடிய திறமைசாலி. இந்தச் சூழ்நிலையில், அதிபர் பொன்னையா சகல வேலைப்பாடுகளையும் என் பொறுப்பிலேயே நம்பிக்கையுடன் விட்டு வைத்ததால் பத்திரிகையில் காலத்துக்கு ஏற்றவாறு உற்சாகத்தோடு புதிய மாறுதல்களைச் செய்ய வாய்ப்பாயிருந்தது. ஈழகேசரி புதிய வடிவம் பெற்றது. தமிழ்நாட்டில் அதுஒரு புதிய இலக்கிய மரபைக் காண்பித்தது. இலக்கியவாதிகள் குறிப்பிட்டுப் பேசும் தரத்தை எட்டியது.

ஈழகேசரியின் இந்தப் புதிய மாற்றம்பற்றி, யாழ்ப்பாணத்து "மல்லிகை" சஞ்சிகையின் 1974 அக்டோபர் இதழில், முன்பு ஈழகேசரி இதழில் பயிற்சிபெற்ற கனக செந்திநாதன் என்ற இலக்கிய விமர்சகர் "முதன் முதலில் சந்தித்தேன்" என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியிருப்பது ஈழகேசரி நாட்களை எடுத்துக் காட்டுகிறது:

"1930ம் ஆண்டு தொடங்கிய ஈழகேசரிப் பத்திரிகை பழைய சுவட்டிலேயே நடந்துகொண்டிருந்தது. 1938ம் ஆண்டுப் பிற்பகுதியில் திரு. சோ.சிவபாதசுந்தரம் அவர்கள் ஆசிரிய பீடத்தில் வந்தமர்ந்தார். வந்தவுடனேயே ஈழகேசரியின் பாதையிலே ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார்.....புதிய புதிய பகுதிகளை ஆரம்பித்து ஆர்வத்தோடு தானே செய்தும் காட்டினார். சிறுகதைகள், இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் முதலியவற்றோடு சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் உபயோகமான பகுதிகளை ஆரம்பித்தார். 'ஈழகேசரி இளைஞர் சங்கம்' என்ற பகுதியில் அவர் உற்சாகப்படுத்திய மாணவ எழுத்தாளர்கள்தான் பிற்காலத்தில் புகழ் பெற்ற ஈழத்துப் படைப்பாளிகள் அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, தி.ச.வரதராசன், ச.நமசிவாயம், வ.ராசையா, வ.நடராசா, கனக செந்திநாதன் என்போராவர்."

ஈழத்துப் புத்திலக்கிய வரலாற்றில் 1938க்குப் பின்னர் ஈழகேசரி ஆற்றிய சேவையும் புகுத்திய புதிய மரபும், தோற்றுவித்த புதிய எழுத்தாளர் பரம்பரையும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. அந்த வகையில் எனது ஈழகேசரி நாட்களை மீட்டும் எண்ணிப் பார்க்கும்போது பெருமிதமடைகிறேன்.




## இப்படியும் சொன்னார்கள்!....

இலங்கை சுப்ரீம் கோர்ட் நீதி பதிகள் மீது கூக்குரலிட்டு கற்களை எறிந்து எள்ளி நகையாடியது யார்?

யாழ்ப்பாணத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களில் வாக்குச்சுரண்டல் செய்து பொய் வாக்குகளை அள்ளிப்போட்டு தேர்தலைக்குழப்பி வாக்குப்பெட்டி களை தூக்கிச்சென்றது யார்?

யாழ்ப்பாணத்தில் கலவரங்களை தூண்டிவிட்டு, யாழ்ப்பாணத்தின் அறிவுப் பொக்கிஷமான யாழ் நூல் நிலையத்தை தீக்கிரையாக்கி யது யார்?

எல்லாம்- எங்கள் சொந்த UNP கட்சியின் உறுப்பினர்கள் சிலர்தான்! 'ஒரு பிரபாகரன்' யாழ்ப்பாணத்தில் தோன்றக் காரணமாக இருந்ததே இவர்கள்தான். தமிழர் ஐக்கிய முன்னணி (TULF) என்ற அரசியல் கட்சி அரசாங்கத்திடம் நியாயம் கேட்டு போராடி வருவதைக்கண்ட பிரபாகரனுக்கு இந்த அரசியல் போராட்டத்தில் சந்தேகங்கள் எழுந்தன.

இந்த நேரத்தில்தான் எங்கள் UNP குழப்பக்காரர்கள் தேர்தலைக் குழப்புவதை- தீ மூட்டுவதை பிரபாகரன் காண நேர்ந்தது!

இந்த நாசகாரர்கள் இன்று நம் கட்சியில் இல்லை. அவர்களுக்கு என் அரசில் இடமில்லை.

இந்த நாசகாரர்கள்தான் எனக்கு இப்போது அறிவுரை- ஆலோசனை வழங்குகிறார்கள். வடக்கு கிழக்கு பிரச்னைகளைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் பற்றி 'பிரசங்கம்' செய்கிறார்கள்.

பண்டாரவளை நகரில் தொழிற் சாலை திறப்புவிழா ஒன்றில் இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா கடந்த வாரம் நிகழ்த்திய உரையிலிருந்து....

-விமல்



இந்தியாவின் பிரபல நாட்டியக்கலைஞர் திருமதி சித்திரா விஸ்வேஸ்வரனின் நாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 20ஆம் தேதி ஞாயிறு மாலை 6.30மணிக்கு வெம்பிளி ஸ்ரான்லி அவனியூ அல்பேட்டன் உயர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது. மகா ஜன கல்லூரி பழைய மாணவர் சங்கம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இது தவிர செப்டம்பர் 19ந் தேதி மாலை றெட் லயன் சதுக்கம் கொன்வே மண்டபத்திலும், செப்டம்பர் 26ந் தேதி சட்டன் சீம் றோட் சீகொம்ப் மண்டபத்திலும் வேறிரு நிகழ்ச்சிகளை அளிக்கிறார்.

## கோடை

அந்திவானம்
செம்மையை விழுங்கும்
அலைகள் பெரிதாய்
கரையை தழுவும்
குளத்தோரத்துப் புற்களின்
கருகிய நுனி
நடக்கையில்- காலை நெருடும்
மேற்கே விரிந்த வயல்கள்
வெறுமையாய்
வானத்தைப் பார்த்து
மௌனித்திருக்கும்
வெம்மை கலந்த
மென் காற்று
மேனியை வருடும்.

புதிதாய் பரவிய
சாலையின் செம்மண்
கண்களை உறுத்தும்
காய் நிறைந்த மாவில்
குயிலொன்று
இடையிடை குரலெழுப்பும்
வீதியில் கிடந்த கல்லை
கால் தட்டிச் செல்ல
அதன் கூரிய நுனி
குருதியின் சுவை அறியும்.

ஒதுங்கிப்போன கல்
ஏளனமாய் இனிக்கும்
இதயத்தில் நினைவுகள் விரிந்து
சா'ரென்று வலியெடுக்கும்
வாடைக்காற்றின் சிலிர்ப்பும்
வரப்போரத்தில் நெடிதுயர்ந்த
சூழா மரத்தின் பசுமையும்
நிறைந்த குளத்தின் மதகினூடு
திமிறிப் பாயும் நீரினழகுமாய்
ஒதுங்கிப் போன இனிய
பொழுதுகள்
ஊமையாய் மனதுள் அழுத்தும்.

-செல்வி



இந்த ஈழத்து பெண் கவிஞர் செல்விக்கு உன்னதமான சர்வதேச விருது ஒன்று கிடைத்திருக்கிறது. கவிஞர்கள், கட்டுரையாளர்கள், நாவலாசிரியர்களுக்கான சர்வதேச அமைப்பான 'பென்' (PEN- Poets, Essayists and Novelists) நிறுவனம் எழுத்துச் சுதந்திரத்துக்கான இவ்வாண்டு விருதை வவுனியாவைச் சேர்ந்த செல்வநிதி தியாகராசா என்ற இயற்பெயரைக் கொண்ட 28 வயதான செல்விக்கு வழங்கியுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தில் இளவயதிலிருந்தே ஈடுபட்டு எழுதிய செல்வியின் கவிதைகள், அவர் ஆரம்பித்து வெளியிட்ட பெண்கள் கவிதைத் தொகுதியான 'சொல்லாத சேதிகளி'லும் பத்திரிகைகளிலும் வெளியாகின. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் 'நாடகமும் அரங்கியலும்' பயின்று கொண்டிருந்த இவர், இரண்டு நாடகங்களையும் தயாரித்து, மேடையேற்றி, நடித்தார்.

1991 ஆகஸ்ட் 30ஆம் தேதி பல்கலைக்கழகத்தில் 3ஆம் ஆண்டு மாணவியாகவிருந்தபோது இவர் தமிழீழ விடுதலைப்புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதாகவும், இன்னமும் அவர்களின் காவலிலேயே வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சர்வதேச சமூகத்தின் மதிப்பு வேண்டுமானால், இவரையும் இவர் போன்றவர்களையும் விடுதலை செய்ய வற்புறுத்தி, 'பென்' நிறுவனத்தின் தலைவர் திரு எட்மன்ட் ஹீலி விடுத்த பத்திரிகைச் செய்தி ஒன்றை, 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


G COM

பரிசளிப்பீர்!!

கோடை
விடுமுறையில்
சிறார்களின்
தொல்லையா?
தவிர்த்திடுவீர்!



**386SX , 386DX, 486**

உங்கள் கம்ப்யூட்டர் தேவை எதுவாயினும் நாடுங்கள்

கம்ப்யூட்டர் தயாரிப்பிலும், தொழில்
நுட்ப ஆலோசனை வழங்குவதிலும்
ஆறு ஆண்டு கால அனுபவம் வாய்ந்த நிறுவனம்

**G-COM COMPUTERS LTD**
253 Western Avenue, London, W3 OPP, United Kingdom.

தொலைபேசி : 44-(0)81-992 8384

www.tamilarangam.net

### மன்றத்தில் ஒலித்த பேருரைக் கீற்றுகள்

# தமிழர் சார்பில் அரசமைப்பை யாக்க சபைக்கு உரிமை இல்லை

**இலங்கைப் பாராளுமன்றத்தில் காலத்துக்குக்காலம் இடம்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த உரைகள்- விவாதங்கள் சிலவற்றை அவ்வப் போது பிரசுரிக்க விழைகிறோம்.**

**திரு ஜே.ஆர்.ஜயவர்த்தன இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் மிக்க முதல் ஜனாதிபதியாகி புதிய குடியரசு அரசியலமைப்புக்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் ஆரம்பித்தபோது, எதிர்க்கட்சித் தலைவராக விருந்த திரு அ.அமிர்தலிங்கம் நீண்டதோர் உரையை ஆற்றிவிட்டு, அந்த விவாதத்தில் தொடர்ந்தும் பங்கு பற்றாது தனது கட்சியினருடன் சபையிலிருந்து வெளியேறினார்.**

**தம்முடைய கட்சி ஏன் அந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதை விளக்கி திரு அமிர்தலிங்கம் ஆற்றிய உரை நாலரை மணித்தியாலங்களுக்கு நீடித்தது. அதுவே பாராளுமன்றத்தில் அவரது மிகநீண்ட உரையாகவுமிருந்தது. திரு அமிர்தலிங்கம் பேச்சை முடித்ததும், சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த சபாநாயகர் திரு ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ், "இத்தகைய ஓர் அருமை வாய்ந்த பேச்சுக்கு தலைமை தாங்கக்கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்" என்று எழுதிய ஒரு குறிப்பை திரு அமிர்தலிங்கத்திடம் சேர்ப்பித்தார்.**

**1978 ஆகஸ்ட் 3ஆம் தேதி திரு அமிர்தலிங்கம் அந்த உரையை தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகழ்த்தினார். அவர் தமிழில் ஆற்றிய உரையின் பெரும்பகுதியையே இங்கு முதலாவதாக தருகிறோம்.**



டி அல்விஸ்

கௌரவ சபாநாயகரவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் என்ற முறையிலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும், நேற்றையதினம் இந்தக் கௌரவ சபையிற் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பையொட்டிச் சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகின்றேன். முதலிலே தமிழில் எனது உரையை நிகழ்த்தி, தொடர்ந்து ஆங்கிலத்திலே பேச விரும்புகிறேன். நாம் இங்கே கூறுகின்ற கருத்துக்கள் வருங்காலத்திலும் சரியாகப் புரியப்படவேண்டுமென்ற காரணத்தினால் நான் எனது உரையை ஆங்கிலத்திலும் நிகழ்த்த விரும்புகின்றேன். அதுமாத்திரமல்ல, வெளிநாட்டவர்களும், மற்றவர்களும் சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகவும் எனது பேச்சின் பிற்பகுதியை ஆங்கிலத்திலே பேச விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, இன்றைய தினம் ஹிந்துக்களுக்கு ஒரு புனிதமான தினமாகும். ஆடி அமாவாசை ஹிந்துக்கள் எல்லோரும் விரதம் அனுட்டிக்கின்ற ஒரு தினம்; விசேடமாக தம் பெற்றோரை இழந்தவர்கள் அவர்களை நினைத்து விரதம் அனுட்டிக்கின்ற ஒரு தினம். அப்படியான ஒரு தினத்திலே இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்களுடைய நிலையைப்பற்றி- அவர்களுடைய உரிமையைப்பற்றி- அது புறக்கணிக்கப்பட்டிருக்கும் வகையைப்பற்றி எடுத்துக்கூறுவது மிகவும் பொருத்தமானதென்று நான் நினைக்கிறேன். ஒரு பாராளுமன்றச் சரித்திரத்திலே அரசியல் அமைப்பை ஆக்குவது 10 ஆண்டுகளுக்கோ 20 ஆண்டுகளுக்கோ ஒரு முறை தான் கிடைக்கின்ற வாய்ப்பு. ஆனால், நமது நாட்டிலே ஒவ்வோர் அரசாங்கமும் ஒவ்வோர் அரசியலமைப்பை ஆக்கமுற்படுமோ என்று நினைக்கக் கூடிய வகையிலே அரசியலமைப்புக்கள் அரசியல் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஓர் அரசியலமைப்பை ஆக்குவது என்பது ஒரு நாட்டிலே வாழுகின்ற மக்கள் தமது இறைமையை உறுதிப்படுத்தி- தமது உரிமைகளை நிலைநாட்டி- அந்த இறைமையைச் சரியான வகையிலே செயற்படுத்துவதற்கேற்ற ஆட்சியமைப்பை ஏற்படுத்துவது தான். அந்த நாட்டிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைத் தத்துவங்கள்- அரசியல் கருத்துக்கள் என்பவற்றின் பிரதிபலிப்பாகவே அந்த அரசியலமைப்பு இருக்கும். நான் இதனை இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிடுவது, மிகவும் பாரதூரமான ஒரு கடமையைச் செய்வதிலே இச்சபை இப்பொழுது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதாலேயே.

## இரு வேறு தோரணை


ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப்போல ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்தர்ப்பத்திலே நான் இக்கௌரவ சபையிலே இரு தோரணையிலே பேசவேண்டியவனாக இருக்கின்றேன். எனது முதற்கடமையாக, முழுக்கடமையாக- இந்த நாட்டிலே உரிமை மறுக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு உழைக்குமாறு- போராடுமாறு கட்டளையிடப்பட்டு மக்களால் தெரிந்தனுப்பப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழுவின் தலைவன் என்ற வகையிலே நான் எனது கருத்தை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில் சென்ற தேர்தலின்போது இந்த நாட்டிலே ஏற்பட்ட சூழ்நிலையிலே முன்பு ஆட்சி அதிகாரத்திலேயிருந்த அரசியற் கட்சி பாராளுமன்றத்திலே மிகச்சிறிய ஒரு கட்சியாக மாற்றப்பட்ட காரணத்தினால், எதிர்க்கட்சித் தலைமையை ஏற்கவேண்டிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற தோரணையிலும் இந்த அரசியல் அமைப்பில் உள்ள பொதுவான சில அம்சங்களை ஓட்டி எனது கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

## செல்வநாயகம் ராஜிநாமா


இன்று நான் பேச எழும்போது மிகவும் கனத்த உள்ளத்தோடு எழுந்து நிற்கிறேன். 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு அழிக்கின்றதே என்று அல்ல; அதை நிராகரித்தவர்கள் நாங்கள். அந்த அரசியல் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அன்று பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் முன்னிலையில் "இந்தக் குடியரசு அரசியல் அமைப்பு என்று முடிவுக்கு வரும்?" என்று கூறி அந்த அரசியல் அமைப்பைத் தீக்கிரையாக்கியவர்கள் நாங்கள். அந்தஅரசியல் அமைப்பை விவாதித்த அரசியல் நிர்ணயசபையிலிருந்து எமது இயக்கத் தலைவரும் அன்று இந்தப் பேரவையிலிருந்த எங்கள் பிரதிநிதிகளும் வெளிநடப்புச் செய்தார்கள். அப்போது எமது இயக்கத் தலைவராக இருந்த மறைந்த பெரியார் திரு சா.வே. ஜே.செல்வநாயகம் அவர்கள் அரசியல்நிர்ணய சபையிலிருந்து ஏன் வெளிநடப்புச் செய்கிறோம் என்ற காரணத்தை எடுத்துக் கூறினார்கள்.

**ஓர் இனத்தின் இறைமையை மூன்று வகையில் தான் அழிக்க முடியும். ஒன்று, ஓரினம் தானாகச் சம்மதித்து அந்தச் சம்மதத்தின் பேரில் அதன் இறைமை இன்னொரு தேசிய இனத்தின் இறைமையோடு இணைந்து ஒன்று பட்ட இறைமையாக அது அமைவது;அல்லது ஒரு தேசிய இனத்தின் இறைமை யுத்தக் களத்தில் அந்த இனம் வெற்றி கொள்ளப்பட்டு அடிமைப்படுத்தப் படுவதால் அதனுடைய இறைமை இல்லா தொழிவது; மூன்றாவதாக, அப்படியான சூழ்நிலையில் ஆக்கப் பட்டஅரசியல் அமைப்பின் கீழ் சட்டரீதியாக அந்த இறைமை இல்லை என்ற .நிலை நிலைநாட்டப்படல்.**

**இன்றைக்கு இந்தத் தேசிய அரச பேரவை இயங்குகின்ற அரசியல் அமைப்பு இந்த மூன்று துறைகளிலும் தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்த அளவில் செல்லுபடியற்றது என்பது எமது நிலை. ஆனபடியால் இந்தத் தேசிய அரசுப் பேரவைக்கு தமிழ் தேசிய இனத்தின் சார்பில் ஓர் அரசியல் அமைப்பை யாக்க உரிமை இல்லை என்பதைத் தான் நாங்கள் கூறுகிறோம்.**



## இலங்கை பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம்



ஜே.ஆர்

1971ஆம் ஆண்டு ஆனி மாதம் 28ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையிலே எமது இயக்கத்தின் தலைவர் அந்தச் சபையிலிருந்து எமது உறுப்பினர்களுடன் வெளியேறினார். அதன் பின் எமது சம்மதமின்றி, இந்த நாட்டுத்தமிழ் மக்கள் பங்குபற்றும் சூழ்நிலையின்றி அந்த அரசியலமைப்பு ஆக்கப்பட்டது. அது நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்த அந்த நேரத்தில் மாண்புமிகு நீதி அமைச்சரும் எங்களுடன் கூட இருந்தார். அந்த நேரத்தில் இந்த நாட்டுத் தமிழர் சார்பிலே அந்த அரசியலமைப்பைத் திருத்துமாறு நாம் எல்லாரும் சேர்ந்து முந்திய அரசாங்கத்துக்குச் சில கோரிக்கைகளை விடுத்தோம். ஆனால், எந்தவிதமான திருத்தங்களையும் செய்ய அவர்கள் மறுத்த காரணத்தினால் சனநாயகரீதியாக மக்களின் கருத்தை வெளிப்படுத்துவதற்கு ஓரேயோரு வழி ஓர் இடைத் தேர்தலை ஏற்படுத்துவது தான் எனக் கருதி எமது தலைவர் திரு செல்வநாயகம் அவர்கள் காங்கேசன்துறைத் தொகுதியில் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்து ஒரு இடைத் தேர்தலை ஏற்படுத்த வழிவகுத்தார்.

## தனிநபர் பிரேரணை

கௌரவ பிரதமர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்பொழுது எங்களுடைய இன்றைய சனாதிபதி அவர்கள் வேறு ஒரு விஷயத்தை நிலை நாட்டுவதற்காக 1975ஆம் ஆண்டிலே தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு ஒரு இடைத்தேர்தலை கொழும்பு தெற்கிலே ஏற்படுத்தினார் எனக் குறிப்பிட்டார். ஜனாதிபதி அவர்கள் அந்த விதமாக மக்களின் சனநாயக உரிமைக்கு மதிப்புக் கொடுத்ததைப் பெருமையுடன் பிரதமர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

19ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# காவல்காரன்

## ஸ்ரீதரன்

மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே சிறுகதைகளை எழுதியபோதிலும் ஈழத்தின் சமகாலச் சிறுகதை ஆசிரியர்களில் சிறந்த ஒருவராக தன்னை இனங்காட்டிக் கொண்டிருப்பவர் ஸ்ரீதரன். (எம்.எல்.எம்.மன்சூர், உமா வரதராஜன் ஆகியோரும் இத்தகையோரே.) இறுக்கமும், நளினமும், சொல்லாட்சியும், எள்ளல் நடையும் இவரது சிறப்புக்கு காரணங்கள்.

'கணையாழி'யில் வெளியான 'நிர்வாணம்' என்ற நெடுங்கதை மூலம் தமிழ்நாட்டிலும் பாராட்டுப் பெற்றவர். 'கணையாழி'யில் வெளியான மற்றுமொரு சிறுகதை, அம்மாதத்தின் சிறந்த சிறுகதையாக தெரிவுசெய்யப்பட்டு, 'இலக்கிய சிந்தனை' அமைப்பினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் சிறந்த சிறுகதைகளின் தொகுதியிலும் இடம்பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பட்டதாரியான ஸ்ரீதரன், இலங்கை நீர்ப்பாசன திணைக்களத்தில் பணிபுரிந்தவர். இப்போது அமெரிக்காவின் கொலறாடோ பல்கலைக்கழகத்தின் பொறியியல் ஆய்வு நிறுவனத்தில் பணிபுரிகிறார்.

சுப்பன் இந்தப்பக்கம், குப்பன் அந்தப்பக்கம்; இடுப்பில் வாளுடன், கையில் வேலுடன். உள்ளே ராஜாதிராஜ ராஜ மார்த்தாண்ட மகாராஜா சயனம். ஒரு தேவியுடனோ இல்லையோ என்பது சுப்பனுக்குங் குப்பனுக்குந் தெரியாது. இவர்கள் ராஜாவுக்குக் காவலே தவிர அவன் செய்வது எல்லாவற்றிற்குமல்ல.

சுப்பன் இந்த இரவு வேளையில் காவல் நேரத்தில், தன்னுடைய நாலாவது பிள்ளையைப் பெற்றெடுக்க... இல்லை ஈன்றெடுக்கப் போயிருக்கிற, தன் பெண் சாதியைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறான். நேரவேளை யாதொன்றுந் தெரியாமல் இந்த நேரத்தில் அவன் முதுகில் ஓர் எறும்பு அரிக்கிறது. வேலை எறிந்துவிட்டு முதுகு சொறியவேண்டும் போல இருக்கிறது. காவல் நேரத்தில் சுண்டு விரலைத்தானும் அசைக்கமுடியாதே!

எதிரில் நிற்கும் குப்பன் ஒரு கட்டைப் பிரமச்சாரி. ஆதலால் கடமை அல்லது வேலைதான் இந்த உலகத்திலேயே மிகப் பிரதானமானது. விறைப்பாக நிற்கிறான். 'இந்தச் சுப்பனைப் பார் கண்ணை அடிக்கடி திறந்து மூடிக் கொண்டு நிற்கிறான். ராஜ விசுவாசமில்லாத பயல்.....' என்று மனத்தில் சுப்பனைத் திட்டிக் கொண்டு நிற்கிறான்.

மற்றது, இது சாதாரண சமயமில்லை. இந்தக் கோட்டைக்கு வெளியே இன்னொரு ராஜதிராஜ ராஜமார்த்தாண்ட மகாராஜா கூடாரத்தில் சயனம். சதுர்யுகபடை வீரர்களுடன் அவனுக்கும் இரண்டு பேர்கள் காவல்; இடுப்பில் வாளுடன், கையில் வேலுடன், இந்த ராஜா அந்த ராஜாவின் எதிரி. படையெடுத்துக்கொண்டு வந்திருக்கிறான், தனக்குப் பிற்காலத்தில் பேராசிரியர்கள் பலபேர்–அதிலும் விசேஷமாக கலாநிதி 1–ம் கலாநிதி 2–ம் தன்னைப்பற்றி சண்டை பிடிப்பார்கள் என்று அவனுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால்...

(இந்தக் கலாநிதிகளுக்குக் குப்பனைப் பற்றியோ அல்லது சுப்பனைப் பற்றியோ ஒன்றுந் தெரியாது. தெரிய வேண்டியதில்லை என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கலாநிதி 2 இந்த மன்னர் களின் காவற்படை வீரர்களைப் பற்றி – அவர்கள் எவ்வாறு தெரியப்பட்டார்கள்?– என்ன சாதி? மாதத்திற்கு எத்தனை அவணம் நெல்?– என்பவை களைப்பற்றியெல்லாம் விஸ்தா ரமாக ஒரு சரித்திர ஏட்டில் நிரவல் பண்ணியிருக்கிறார். இருந்தாலும் குப்பனைப் பற்றியோ சுப்பனைப் பற்றியோ ஒன்றுமே சொல்ல வில்லை. கலாநிதி 1 இன் ஆராய்ச்சி விஷயங்களுக்குள் காவற்படை வீரர்களே இன்னும் விழவில்லை, குப்பனும் சுப்பனும் எப்படி விழு வார்கள்?)

அதுகிடக்க, சுப்பனுடைய இந்தக் கணத்து யோசனை.... 'சே என்ன இழவு! இந்த நாசமாய்ப்போன எறும்பு முதுகு பூரா ஊர்கிறது. வைத்தியன் என்ன இழவை அவளுக்குக் கொடுக்கிறானோ...?

பிள்ளைகள் தன் வயதான தாயைப் பிய்த்துப்பிடுங்கும் ஒரு காட்சியும் மனத்தில் ஓடுகிறது.

'அரிசி ஒரு மணிகூட இல்லை. நாசமாய்ப் போன தேசம். இதற்கு நாசமாய்ப்போன ஒரு ராஜா. நாசமாய்ப்போன ஒரு காவற்படைத் தலைவன்...'

ஏன் இண்டு பேராய்க் காவலுக்கு விடுகிறார்கள் என்பது இப்போதுதான் அவனுக்கு விளங்கியது.

'தனியே இருந்தால் ராஜாவைத் தொலைத்து விடமாட்டேனா?'

பல்லைக் கடிக்க வாயெடுத்தவன் அந்த 'மடையன்' குப்பனைப் பார்த்து–அவன் தன்னைப் பார்க்கும் கொடூரப் பார்வையைப் பார்த்து– அடக்கிக் கொண்டான்.

'முதலில் இவனைக் கொல்ல வேண்டும்...'

சுப்பனுக்கும் குப்பனுக்கும் நெடுகவே தகராறு. குப்பனுக்குத் தான் ஓர் அசாத்திய ராஜவிசுவாசி என்கிற இறுமாப்பு உண்டு. மற்ற சேவகர்களைப் பார்த்து 'என்ன கடமை செய்கிறீர்கள்? என்ற நோக்குடனும் பேச்சுடனுமே நடப்பான். இதை மற்றச் சேவகர்கள் 'கிண்டல்' பண்ணுவார்கள். ஆனால் சுப்பனுக்கு இந்த மாதிரியாகக் குப்பனைக் 'கிண்டல்' பண்ணும் மனநிலை இல்லை. 'இந்த மடையனுக்கு மற்றவர்கள் கஷ்டங் தெரிந்தால்தானே' என்று குப்பனைத் திட்டிக் கொள்வான்.

சுப்பன் வீட்டில் பெருந்திண்டாட்டந்தான். இந்த லட்சணத்தில் அவன் மனைவியும் ஒரு ராஜாங்க சேவகி. சேனாதிபதி மாளிகையில் எடுபிடிவேலை. போர்தான் ராஜாங்க சேவகமே தவிர சுப்பனின் வயது போன தாய், தந்தை, அவன் குழந்தை என்று பலபேர் பல எதிர்பார்ப்புகளுடன். 'சீவிய'த்தை நடத்துவதில் அவன் பாடு பெருந் திண்டாட்டம். 'நெல்' மட்டு மட்டாக இருக்கிற நேரத்தில் போரும் வந்து தொலைந்து விட்டது. காவற்படைத் தலைவன் நெல்லைக் கொடுக்க மெத்தப் பிணக்குப் படுவதனாலும், காய்கறி வரத்துக் குறைந்து விட்டதனாலும் நெருக்கடி வயிறு வரை வந்து விட்டது. குழந்தைகள் சுருண்டு படுத்திருக் கிறார்கள்.

இந்த நேரத்தில்... இவள் பிள்ளை பெறப் போகிறாள். அந்த வைத்தியன் ஒரு காற்பொன்னைக் கண்டால்தான் பெட்டகத்தைத் திறப்பான். மற்ற வைத்தியர்கள் என்றால் இவன் பார்க்கிற ராஜாங்க உத்தியோகத்திற்கு மரியாதை பண்ணிக் கொடுப்பதை வாங்கிக் கொள்வார்கள். இவன் ராஜாங்க வைத்தியன். அவனுக்குத் தெரியாதா சுப்பனின் சேவகம்? அதையும் யோசித்துக் கொண்டான் சுப்பன்.

எல்லாக் காவற்காரர்களும் ஒன்று சேர்ந்தால் ராஜாங்கத்தை ஒரு நொடியில் தொலைத்து விடலாம். சேருவார்களா....? மாட்டார்கள்! ஏன்? இந்த மடையன் குப்பனை மாற்ற முடியுமோ....? ராஜ விசுவாசமாம்.... இவன் காவற்காரர்கள் ஒன்று சேர்ந்து என்ன செய்தாலும் வரமாட்டான். ராஜாவுக்கு அடுத்தபடியோ அல்லது சமமோ என்கிற யோசனை, மடையனுக்கு. மந்திரி வீட்டில் பகலில் வேலை. இரவு காவல். நேரத்துற்குச் சாப்பாடு. பிள்ளையா–குட்டியா? காவற்படைத் தலைவன் நெல்லைத் தருமட்டும் பார்த்துச் சீவிப்பது பற்றி இவனுக்கென்ன தெரியும்....? இவனை மாதிரி அநேகம் முழு மடையர்கள் இருக்கிறார்கள்..... எல்லாருக்கும் பிள்ளை குட்டிகள் இருந்து என்னைமாதிரிக் கஷ்டப்பட்டால் தெரியும்....? அந்தக் காலத்தில் என்பாட்டனின் பாட்டனும் இதே வேலைதான். சந்தோஷமாகத்தான் செய்து வந்திருக்கிறார்கள். ஹ....அந்தக் காலத்தில் ஓரவணம் நெல்லைக் கொடுத்து என்னனென்ன வாங்கலாம்....? சே....! போர் தொடங்குகிறது என்றாலே விலை ஏறிவிடுகிறது. போர் முடிந்து விலை இறங்க ஒரு மாதமாகிறது. விலை ஒரு வழியாய் இறங்கி முடியத் திரும்பவும் போர் தொடங்குகிறது. இந்த வியாபாரிகள் எல்லாருஞ் சேர்ந்து மறைமுகமாய் நின்று போரை நடத்துகிறார்களோ....? இழவு எறும்பு கழுத்தில் ஊர்கிறது. இந்த நாசமாய்ப் போன குப்பன் எதிரில் இல்லாதுபோனால் எறும்பை எடுத்துத் தொலைத்துவிடலாம்....!

யோசித்துக் கொண்டே அரைக் கண்ணால் மண்டபத்தின் மூலையில் வாள் வேல் இவற்றுடன் காவலுக்கு நிற்கிற நாகனையும், வேலனையும் பார்த்துக்கொண்டான்.

'...நாகனும் வேலனும் அசல் ஆசாமிகள். விறைப்பாக நிற்கிறதில் குறை வைக்கவே மாட்டார்கள். ஒருத்தன் ஓடி வந்தால் போதும். இருக்கிறதை அப்படியே போட்டு விட்டு ஓடுகிற வீரர்கள். தலைவனுக்கு அதை இதைக் கொடுத்து நாலு அவணம் கூடவே தட்டிக்கொண்டு போகிற சூரர்கள்.

அங்கே! இரண்டுபேரும் காவல் நேரத்தில் வெற்றிலை போட்டுக் கொண்டு பாக்கைக் கடிக்கிற சத்தம் இங்கு மட்டும் கேட்கிறது.... இங்கே என்னை வெற்றிலைபோட குப்பன் விடமாட்டான். தலைவனிடஞ் சொல்லிக் கொடுத்துவிடுவான். நாசமாய்ப் போனவன். இவன் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் எறும்பைத் தட்டி விடலாம். இடம் மாறும்போது பார்த்துக் கொள்வோம்....'

எறும்பு திரும்பவும் முதுகுப் பிரதேசத்தின் நட்டநடுப்பகுதியில் போய்ச் சேர்ந்து விட்டது.

'நாளைக்காலை தலைவனிடம் கொஞ்சம் நெல்லைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.... அவள் என்ன செய்கிறாளோ?' இதற்கு அப்பால் அவனால் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை. நாகனும் வேலனும் தன் மனைவி சேனாதிபதி மாளிகைக்கு வேலைக்குப் போவதைப் பற்றி கொஞ்சம் இளக்காரமாகவே ஒரு நாள் பேசியதை நினைவில் மீட்டுக்கொண்டான்.

'ஈனப் பிழைப்புகாரர்கள்.....,' என்று திட்டிக் கொண்டான். '...இருந்தாலும் உதவி செய்வார்கள். இந்த இழவெடுத்த குப்பன் மாதிரியா.....?

இந்த நேரத்தில் மாமியார்க்காரியின் நினைவு வந்துவிட்டது. 'ராசாத்தி மகளாம் தன் மகள். இங்கே எனக்கு வாழ்க்கைப்பட்டதில் அவலப் பிழைப்பாம், அங்கே கிராமத்தில் பண்ணையாருக்குக் கால் கழுவுகிறது பாழ்போகிறது. இந்த லக்ஷணத்தில் எனக்குச் சொல்கிறாள். இங்கே நெல்லை நேரத்துக்குக் கொடுத்தால் என்னை வெல்ல யாரிருக்கிறார்கள்...? ஆ... எறும்பு. இல்லை எறும்புகள்.... மூலைத்தீவட்டியிலிருந்து பூச்சிகளும் என்னை நோக்கித்தான் பார்க்கின்றன. என் கஷ்ட காலத்திற்குத் தீவட்டி என்னருகில். குப்பனுக்கு இது விளங்குமா? தூரத்தில் நாகனும் வேலனும் வாயசைப்பது தெரிந்தது. வெற்றிலைதான்.

> எல்லாக் காவற்காரர்களும் ஒன்று சேர்ந்தால் ராஜாங்கத்தை ஒரு நொடியில் தொலைத்து விடலாம். சேருவார்களா...? மாட்டார்கள்! ஏன்? இந்த மடையன் குப்பனை மாற்ற முடியுமோ...? ராஜ விசுவாசமாம்... இவன் காவற்காரர்கள் ஒன்று சேர்ந்து என்ன செய்தாலும் வர மாட்டான். ராஜாவுக்கு அடுத்தபடியோ அல்லது சமமோ என்கிற யோசனை, மடையனுக்கு.


குறைந்து கூடி எரிகிற தீவட்டி வெளிச்சத்தில் எதிரில் குப்பனின் கண்கள் பயங்கரமாக விழிக்கின்றன. அந்தக் கண்களைப் பார்க்கப் பயங்கரமாகவும் வெறுப்பாகவும் கோபமாகவும் இருந்தது, சுப்பனுக்கு. திரும்பவும் அவன் மனைவியைப் பற்றி யோசித்துக்கொண்டான். மனைவியை அந்த மாமியார்க் கிழவியைக் கூட்டிக்கொண்டு வைத்தியரிடம் போகச் சொன்னது மனத்தில் மின்னியது.

'...சே! குப்பனின் கண்கள் என்ன கொடூரத்தைக் கொட்டுகின்றன!'

எறும்புகள் இடது விலாப்புறத்தில் நின்று மேய்கின்றன.

'நாளைக்குக் காலை கஞ்சி வடிக்க அரிசி இல்லை. புழுங்கல் தானும் இல்லை. காவல் முறைக்கு விடியற்காலை ஆள் வந்தவுடன் அரிசிக்கு ஓடவேண்டும். இந்தப் போர்க் கஷ்டம் பெரிய கஷ்டமாக இருக்கிறது.... எந்த இழவெடுத்த ராஜா ஆண்டாலென்ன நாளைக்கு அரிசி கிடைக்குமா எனக்கு? இந்த ராஜா... எங்களையெல்லாம் ஆளப்பிறந்தவன், கட்டிலில் சயனம். எனக்கிருக்குங் கஷ்டமோ?–சே என்னை மாதிரி எத்தனை ஆயிரம் பேர் இருக்கிறார்கள்– அவர்கள் கஷ்டத்தையுஞ் சேர்த்துத்தான் சொல்கிறேன். இவனுக்குத் தெரியுமா...? தூங்குகிறான். இவன் சண்டை பிடிப்பது தனக்காகவே

17ம் பக்கம் பார்க்க





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக தமிழ்க்கல்வி தொடர்பு மையம்

## சிங்கப்பூரில் ஆசிரியர் மாநாடு

சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் ஜூன் 15 முதல் 18 வரை நடாத்திய முதல் உலகத் தமிழாசிரியர் மாநாடு பல வழிகளில் முன்னோடியாகத் திகழ்ந்தது. தமிழார்வமுடைய சமூகத் தலைவர்களிடம் பெற்ற நிதியுதவிகளே மாநாட்டை நடத்தப் பயன்பட்டன. முழுக்க முழுக்கக் கல்வித்துறையில் ஆர்வமுடையவர்களே கலந்துகொண்டனர்.

சிங்கப்பூர் அரசின் கோட்பாடு, "உன்னதநிலையை நோக்கி" என்பதாகும். எதிலும் எப்போதும் உன்னதநிலையாம் மேம்பாட்டை நோக்குவதுபோல, கல்வியிலும், தேசீய வருமானத்தில் 25 விழுக்காடு செலவழித்து, மொழிக்கல்வியையும் உன்னத நிலை நோக்கி வளர்க்கின்றனர். தமிழர் ஐந்தாறு விழுக்காட்டிற்குள் இருப்பினும் தமிழின் தொன்மையையும் சிங்கப்பூரை முதலில் வளப்படுத்திய தமிழர் உழைப்பையும் கருதி சிங்கப்பூர் அரசு தமிழையும் தேசீய மொழியாக்கி, சீனம், மலாய், ஆங்கிலத்திற்கு நிகரான இடம் தந்துள்ளது.

### அமைச்சரா, அப்படியா?

ஒரு நாளில் 20 மணி நேரம் தமிழ் ஒலித்த வண்ணம் உள்ள ஒரே வானொலி நிலையம் சிங்கப்பூர் ஒலிபரப்பு நிலையமே. அங்குள்ள தொலைக் காட்சியும் தமிழுக்கு உரிய இடம் தருகிறது. வாரம் ஒரு தமிழ்த்திரைப்படமும் உண்டு. ஐந்து காசு சிறு நாணயத்திலும் 'சிங்கப்பூர்' என்ற தமிழ் எழுத்துகள் மின்னும் நாடு அது.

கம்போங் கிளாங்குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சின்னக்கருப்பன், மாநாட்டைத் தொடக்கி வைத்தார். நான்காம்

* மழலையர் பள்ளிகளில் பாடத்திட்டம்
* வயதின் அடிப்படையில் தமிழ் நூல்கள்
* நடைமுறை இலக்கண நூல்

நாளன்று, ராபிள்ஸ் கல்வி நிலையத்தில் நடைபெற்ற கண்காட்சியில், சிங்கப்பூர் தேசீய வளர்ச்சித்துறை அமைச்சர் தனபாலன் தாமாக விரும்பிக் கலந்துகொண்டு, கண்காட்சியை முழுவதுமாகச் சுற்றிப் பார்த்தார். ஒரு வார்த்தை கூட மேடை ஏறிப் பேசவில்லை. அங்கு அரசியலார் வருவதும் போவதும் சாதாரண 'மனிதர்கள் வந்து போவதுபோல இருப்பதால், 'அமைச்சரா? அப்படியா?' என்று நாம் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.

இதனைத் 'தமிழாசிரியர்கள், தமிழாசிரியக் கல்வி மேம்பாட்டுக்காக நடத்திய தமிழாசிரியர் மாநாடு' என்று வருணிக்கலாம். பொதுவாகத் தமிழ்மேம்பாட்டுக்கான அமைப்புகள் அரசியல் தொடர்பின்றி உருவானால் தான், உண்மையான வளர்ச்சி காண முடியும் என்ற கருத்து இம்மாநாட்டில் அழுத்தமாக நில்வியது.

### ஏழுநாடுகள், 63 வெளிநாட்டவர்

இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியஸ், ரீயூனியன், மலேசியா ஆகிய ஏழு நாடுகளிலிருந்து வந்த 63 பேராளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். சிங்கப்பூர்த் தமிழாசிரியர்கள் 172 பேர் பங்கேற்றனர். மாநாட்டு மலர் ஒன்று ஆய்வுக் கட்டுரைகளின் அணி வகுப்பாகப் பேணிக் காக்கும்படி வெளியிடப் பெற்றது. மொத்தம் நூறு ஆய்வுரைகள் படிக்கப்பட்டன.

"தமிழ் கற்றல், கற்பித்தல்; இன்றும் நாளையும்" என்பது மாநாட்டுக் கருப்பொருள். எல்லா உரைகளையும் இதனை நோக்கியே எழுதுமாறு செய்தது, மாநாட்டின் பெருவெற்றியாகும். 'தமிழ் கற்றல்' என்பதிலேயே கற்பித்தலும் அடங்கும் என்பது உணரப்பட்டது. கற்பித்தலுக்கும் கற்றல் வேண்டும்; நன்கு கற்றவரே கற்பிக்க முடியும்; மாணவர் தம் கற்றலுக்கும் ஆசிரியர்தம் கற்றலே அடிப்படையாகும் என்பன அழுத்தமாக வெளியிடப்பட்டன.

### மாநாட்டு முடிவுகளும் தொடர்ச்சியும்

தமிழாசிரியர் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசுக் கலப்பின்றி நடைபெற வேண்டுமென்றும் அடுத்த மாநாட்டை 1994-ல் மலேசியாவில் நடத்துவது என்றும் ஒவ்வோரு நாட்டிலுமுள்ள தமிழாசிரியர் கழகங்கள் தமிழாசிரியர் மாநாடுகளை பொறுப்பேற்று நடத்தவேண்டுமென்றும் அடுத்த மாநாடு 1994-ல் நடைபெறும் வரை சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் தொடர்பு மையமாக விளங்குமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதுவரை பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன் (தமிழ்நாடு), அறவாணன் (புதுச்சேரி), என்.நடராஜபிள்ளை (மைசூர்), கோ.இராதாகிருஷ்ணன் (மலேசியா), அ.புட்பரதம் (மொரிசியஸ்), கா.சிவத்தம்பி (இலங்கை), ஆ.கந்தையா (ஆஸ்திரேலியா) ஆகியோர் தத்தமது நாடுகளில் தொடர்பாளர்களாக விளங்குவர்.

### கல்வி தொடர்பான முடிவுகள்

மழலையர் பள்ளிகளில் தமிழ் கற்றலுக்கான பாடத் திட்டம், பாட நூல்கள், பயிற்றுக் கருவிகள், ஆசிரிய வழி காட்டி ஏடுகள் ஆகியன உருவாக்கப்படுதல் வேண்டும். இதனைத் தமிழகத்தில் செய்ய இசைவு தெரிவிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளிலுள்ள தமிழ் கற்றலுக்கான பாடத்திட்டங்களைத் தொகுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இத்தொகுப்பு முயற்சி சிங்கப்பூர்த் தேசீயக் கல்விக் கழகத்திடம் ஒப்படைக்கப் பெற்றது. அங்ஙனம் தொகுத்த பின் அவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து பாடத்திட்ட மேம்பாட்டுக்கான கருத்துரைகள் உருவாக்கப்படும்.

பாடத்திட்டத் தொகுப்புப் போலவே தமிழ் கற்றல் தொடர்பான பயிற்று கருவிகள் பற்றிய விவரத் தொகுப்பு ஒன்று தொகுக்கப்பட வேண்டும். உலகளாவிய பல நாடுகளில் கையாளப்படும் இக்கருவிகள் பற்றிய விவரம் தொகுக்கப்படுவதற்குச் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் உதவும்.

வயது அடிப்படையில் குழந்தைகளுக்குகான தமிழ் நூல்கள் உருவாக்கப்படுதல் வேண்டும். வெளிநாடுகளில் இத்தகைய புத்தகங்களைப் படிப்பிப்பதில் இடர்ப்படுகின்றனர். எனவே இதற்காகப் பல்வேறு வயதினர்க்கும் வகுப்புகளுக்கும் ஏற்ற தமிழ்ச் சொற்கோவைகளைத் தொகுக்கவும் முடிவு செய்யப்பட்டது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இப்பணியில் ஈடுபடும்.

புதிய இலக்கண நூல்களை எழுதவும் தீர்மானிக்கப்பட்டது. அந்நூல்களில் இக்கால நடைமுறைகளை வெளிப்படுத்துகின்ற உதாரணங்களே இடம்பெற வேண்டும். மாணவர் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்ற வகையில் இலக்கணக் கூறுகளைக் கொண்டவையாகவும் அவை இருக்க வேண்டும். இதனைத் தமிழகத்தில் செயற்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

### உலக நாடுகளில் தமிழ்

மலேசிய நாட்டில் தமிழின் நிலைபற்றி கோ.இராதாகிருஷ்ணன், என்.எஸ்.இராசேந்திரன் இருவரும் விளக்கினர். தமிழகத்திலிருந்து வரும் திரைப்படங்களும் திரை இசைப் பாடல்களும் கொச்சையாய்ப் பச்சையாய்க் காணப்படுகின்றன. இவற்றையே பார்த்தும் கேட்டும் சுவைக்கும் மலேசியத் தமிழர்கள் மெல்ல மெல்லத் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பற்றிய உயரிய எண்ணங்களை இழந்து வருகின்றனர் என அவர்கள் கூறியபோது, சிங்கப்பூர்த் தமிழர்கள் 'எங்கள் நிலையும் அதுதானே' என வழிமொழிந்தனர்.

### தமிழ்மறந்ததமிழர்

என்.எஸ்.இராசேந்திரன் பல நன்னம்பிக்கை தரும் செய்திகளைத் தந்தார். மலேசியாவில் மலாய், ஆங்கிலம் கற்றால் வேலை உண்டு, தமிழ் கற்பதால் பெரும் பயன் ஏதும் இல்லை. ஆயினும் தமிழாசிரியப் பணி நிச்சயம் உண்டு. மலேசியாவில் 10,400 தொடக்கப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. 6500 தமிழாசிரியர்கள் இப்போது பணி புரிகிறார்கள். தமிழிலேயே ஆறாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கும் 543 பள்ளிகள் உள்ளன. தமிழாசிரியப் பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து கூடி வருகின்றன. இப்பயிற்சியும் மாணவர், பெற்றோர்தம் ஆர்வமும் தமிழை மலேசியாவில் நிலைநிறுத்தும் என்றார் அவர். மலேயா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் க.திலகவதி, திருமதி.முல்லை இராமையா, பயனுள்ள ஆய்வுரைகளை நல்கினார்கள்.

மோரிசியஸ் அருணாசலம் புட்பரதம், பி.திருமலைச் செட்டி இருவரும் அந் நாட்டில் தமிழின் நிலை பற்றியும் அங்கு தமிழ் கற்பித்தலில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் விளக்கினர். அங்கு 250க்கும் மேற்பட்ட தமிழாசிரியர்கள் பணி செய்கின்றனர். அங்குள்ள ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்

* மலேசியாவில் 10,000 தொடக்கப் பள்ளிகள்
* மொரீஸியஸில் 250க்கு மேல் தமிழாசிரியர்கள்
* ரீயூனியனில் 2லட்சம் தமிழர் தமிழை மறந்தனர்
* சிங்கப்பூரில் தமிழ்கற்கும் 16,000 மாணவர்கள்

கள் தமிழை அறவே மறந்துவிட்டனர். இன்று அவர்களது தாய்மொழி கிரியோல். ஆட்சி மொழி ஆங்கி லம். எனினும் அவர்கள் விரும்பிப் படிப்பது பிரெஞ்சு மொழி. தமிழை முதாதையர் மொழி என்று விரும்பிப் படிக்க ஆர்வம் கொண்டுள்ளனர். தமிழ் மொழியை மறந்தாலும் தமிழர் பண்பாட்டை, சமயத்தை, வழிபாட்டை அவர்கள் இழக்க வில்லை.

### செல்வரான தமிழர்கள்

ரீயூனியனிலிருந்து வந்திருந்த பேராசிரியர் வி.குமாரசாமி மிக நகைச்சுவையாகப் பேசி அனைவர் உள்ளங்களையும் கவர்ந்தார். அவர் பிரெஞ்சு மொழி கற்பிக்கின்றவர், ஆசைபற்றி அறையலுற்றேன் எனத் தமிழராதலால் தமிழையும் போதிக்க முயன்று வருகிறார். ரீயூனியன் பிரெஞ்சுக்குட்பட்ட தீவு:தனி நாடன்று, மொரிசியஸ் பக்கத்தில் உள்ளது. அங்கு பிரெஞ்சுதான் ஆட்சிமொழி, கல்வி மொழி எல்லாம். அத்தீவிலுள்ள 6 லட்சம் மக்களில் 2.5 லட்சம் தமிழர்கள் தமிழை மறந்தே போயினர். ஆயினும் தமிழர் நடை, உடை, பாவனை இருக்கிறது; உணவுப் பழக்கம் மாறவில்லை. ஏறத்தாழ 150 கோயில்கள் உள்ளன. வழிபாடு, தீ மிதித்தல், காவடி எடுத்தல், பத்து நாள் திருவிழா யாவும் உள. அவர்களுக்கு இனித் தமிழ் படிப்பதால் எவ்வித இலாபமும் இல்லை, உலகிலேயே தமிழர்கள் பெரும் செல்வர்களாக எல்லா வசதிகளுடனும் வாழும் நாடு அதுவாகும். இப்போது சிறுகச் சிறுகத் தமிழையும் கற்க முன்வருகின்றனர். ஆனால் கற்கத் தொடங்கியவுடனேயே தமிழ் உச்சரிப்பு, எழுத்து முறை இவற்றைப் பார்த்து தமிழ்மிகக் கடினமான மொழி என்று ஓடி விடுகின்றனர், அவர்கட்கு ஏற்பத் தமிழை எளிய முறையில் கற்பிக்க நெறிமுறைகளைக் காண வேண்டும் என்று பேராசிரியர் வி.குமாரசாமி வற்புறுத்தினார்.

ஆஸ்திரேலியாவில் தமிழ் கற்க விரும்புவோர் சிதறிக் கிடப்பதால் வகுப்பறைகளில் தமிழ் போதிக்கும் நிலை வளரவில்லை என்று முனைவர் ஆ.கந்தையா விளக்கினார். வீட்டிலிருந்து அவரவர் தம் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்கும் அரசு நிதி உதவி செய்கிறது என்ற செய்தியை அவர் வெளியிட்டார். பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பிரிவுகள் கொண்ட நூலகங்கள் உள்ளன. அங்கே முயற்சித்தால், தமிழ் வளர்ச்சிக்கு நிறைய நிதியுதவி கிட்டும் என்றார் அவர். ஆங்கிலத்தையே பேசி வாழும் அந்த நாட்டுத் தமிழர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதிலுள்ள இடர்ப்பாடுகளை அவர் மிகுந்த நகைச்சுவையுடன் விளக்கினார்.

தென்னாபிரிக்காவில் தமிழ் கற்பிப்பதிலுள்ள இடர்பாடுகளையும் தடைகளையும் சைவப் புலவர் வித்துவான் க.செல்லப்பா விளக்கினார். இவர் ஒருவர்தான் இந்தியா வந்து தமிழ் படித்த பெரும் புலவர். அங்குள்ள பல லட்சம் தமிழர்கள் ஆங்கிலத்தையே பயன்படுத்துகின்றனர். பழக்கவழக்கம், சமயம், வழிபாடு, பண்பாடு யாவும் இருந்தாலும் அவை யாவும் ஆங்கில வழியில் நடைபெறுகின்றன. தமிழ் படிக்க வாய்ப்புத் தந்தும் பிள்ளைகள் சேர்வதில்லை. இந்திய அரசு தமிழ் படித்த ஆசிரியர்களை அங்கு அழைக்க எளிதில் விடுவதில்லை. தமிழக அரசு எவ்விதத்திலும் உதவுவதில்லை என்றார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி இலங்கையின் நிலையை விளக்கி இலங்கையில் தொடக்கப்பள்ளி முதல் மருத்துவம், பொறியியல் முதலான படிப்புகள் வரை தமிழ் வழியாகவோ, சிங்கள வழியாகவோ தான் கற்பிக்கப்படுகின்றன. ஆங்கிலம் தொடர்பு மொழியாக மட்டும் கற்பிக்கப்படுகின்றது என்றார்.

### சிங்கப்பூர்க் கட்டுரைகள்

சிங்கப்பூரில் 16,000 மாணவர்கள் தமிழ் கற்கின்றனர்.ஆட்சி மொழியாகிய ஆங்கிலம் தவிர, தாய்மொழியையும் கட்டாயம் பயில வேண்டும் என்ற இரு மொழிக் கொள்கையை அரசு கடைப்பிடிப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு தொடக்கப் பள்ளிகளில் ஏறத்தாழ 10,700 மாணவர்களும் உயர் நிலைப் பள்ளிகளில் 4,500 மாணவர்களும், புகுமுக வகுப்புகளில் 710 மாணவர்களும் தமிழ்மொழி பயில்கின்றனர். தமிழ் மொழிப் பயிற்சிக்கு ஒலி, ஒளிச் சுருள்கள், கணினிகள், புதிய அறிவியல் சாதனங்கள் அதிகமாகப் பயன்படுத்தும் நாடு என்று சிங்கப்பூரைக் குறிப்பிடலாம்.

தமிழ்க் கல்வித் தொடர்பு மையம்

பிரிட்டிஷ் கவுன்சில் போல, தமிழ்க் கல்வித் தொடர்பு மையம் ஒன்று, அரசு சார்பின்றி உலகளாவிய நிலையில் அமைக்கப்பட வேண்டும் என்று மாநாட்டில் பரவலாக-ஆழமாக உணரப்பட்டது.

**தமிழண்ணல்**

---

## உத்தரவோடு நின்றுபோகிறது

(கொழும்பு)

அரச கரும மொழிகளான சிங்களமும், தமிழும், சீராக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை அவதானிக்க, உத்தியோக மொழி ஆணைக்குழு கொழும்பில் ஆய்வுத் திட்டமொான்றை ஆரம்பித்துள்ளது.

உத்தியோக மொழி அமுலினை கடைப்பிடிக்கத் தவறுவோர் மீது, வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இது போன்ற பல உத்தரவுகள் முன்னர் பல தடவை பிறப்பிக்கப்பட்டும் கூட அவை விழலுக்கு இறைத்த நீராகி, மலையக மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளில், பாதை, பஸ்பெயர்ப்பலகைகள், நீதிமன்ற விசாரணைகள், உத்தியோக பூர்வ கடிதப் போக்குவரத்துக்கள் இன்னும் பல தொடர்ந்தும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

பலநூறு தடவைகள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, அமைச்சு, மற்றும் ஜனாதிபதி மட்டங்கல் சுட்டிக்காட்டப்பட்ட போதும், உத்தரவு மட்டத்தில் நின்று போன இந்நிறைவேற்றுச் சட்டம் இனியேனும் அமுலாகுமா என வினவப்படுகிறது.

---

## மீண்டும் பட்டாபிஷேகம்

(நமது நிருபர்)

தெற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலையின் பாராட்டுப்பெற்ற பட்டாபிஷேகம் நாடகம் ஈலிங் நகரமண்டபத்தில் இம்மாதம் 20ந் தேதி மீண்டும் மேடையேறுகிறது.

இராமாயணம் முழுவதையும் நாடகமாக நடித்த இப்பாடசாலைச் சிறுவர் சிறுமியர் அதன் கடைசி அங்கமாக பட்டாபிஷேகத்தை சில மாதங்களுக்கு முன்பு அவர்களின் பாடசாலை விழாவில் அளித்தார்கள்.

---

## "சின்ன மாமியே.." நித்திக்கு பாராட்டு

(நமது நிருபர்)


இலங்கையில் 'பொப்' இசையின் பிதாமகர் என்று அழைக்கப்படும் திரு நித்தி கனகரத்தினத்துக்கு 'அகதி' பத்திரிகை பாராட்டொன்றை அளிக்கிறது. இம்மாதம் 29ஆம் தேதி ஞாயிறு மாலை 6மணிக்கு எட்மடன்டன் நைற்றிங் கேல் றோட் சலிஸ்பரி பாடசாலை மண்டபத்தில் இது நடைபெறுகிறது.

திரு கனகரத்தினம், அவருக்கு பெரும் புகழை ஏட்டிய "சின்னமாமியே..." என்ற பாடலைப் பாடிய 25ஆவது ஆண்டு நிறைவும் இதுவாகும்.


கிராமிய சூழல், சிந்தனையிலான பாடல்களில் ஆர்வம் கொண்டவர் திரு நித்தி. அப்படியான ஒரு விதத்திலேயேஇந்த நிகழ்ச்சியை அவர் அளிக்கப்போவதாக தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



கடந்த மாதம் 29ஆம் தேதி லண்டனில் அரங்கேறிய பீற்றர் லொக்கெற், பிரபல மிருதங்கமேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியின் சிஷ்யர். அற்புதமாக வாசிக்கிறார். அதுமாத்திரமல்ல ஜதிகோவைகளை நறுக்குத் தெறித்தாற்போல் உச்சரிக்கிறார். நாட்டியத்துக்கு நட்டுவாங்கம் செய்யப் போகிறார்.



லண்டன் மனோர்பாக் மகாலக்ஷ்மி கோவில் ஸ்ரீ துர்க்கா பிர திஷ்டையையொட்டி நடைபெற்ற லக்ஷார்ச்சனையின் இறுதி நாளன்று நடைபெற்ற கலசஅபிஷேகம். ஸ்ரீ சம்பத் குமாரன் பட்டாச்சாரி, ஸ்ரீ ராமானுஜ பட்டாச்சாரி ஆகியோர் இதனை நடத்தினார்கள்.

# தமிழோசை விளையாட்டுப் போட்டி
## விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர் ........................................

முகவரி ........................................
........................................
........................................

பாடசாலை / கழகம் / தனிப்பட்டோர் ........................................

பிறந்த திகதி .................... வயது ....................
(01-09-1991 ல் உள்ளபடி)

பங்கு பற்றும் போட்டிகள்

தனி
1. ........................................
2. ........................................
3. ........................................

குழு
1. ........................................
2. ........................................
3. ........................................

எனது அறிவுக்கெட்டிய வரையில் மேலே குறிப்பிட்டவையெல்லாம் உண்மையெனவும் போட்டி விதிமுறைகளுக்கு அமைய நடந்து கொள்வேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம்
விண்ணப்பதாரர்/பெற்றார்/பாதுகாவலர்

குறிப்பு:-

1. பாதுகாப்புக்காகவும் நிகழ்ச்சிகளை சுமுகமாக நடத்துவதற்காகவும் நிகழ்ச்சிகளை மாற்றுவதற்கோ ரத்துச் செய்வதற்கோ நிர்வாகிகளுக்கு தனி உரிமை உண்டு.
2. வயதை உறுதிப்படுத்த தேவைப்படும் பட்சத்தில் அதனை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரம் கொண்டு வரல் வேண்டும்.
3. கட்டணம்:
தனி விண்ணப்பம்: £ 5.00 (ஒருவர் மூன்று தனி நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்கு பறறலாம்.)
குழு விண்ணப்பம்: £ 10.00 ( கயிறிழுத்தல், அஞ்சல் ஓட்டம்)
4. ஒவ்வொரு வயதுக் குழுக்களிலும் கூடிய புள்ளிகள் பெறும் வீரர்/வீராங்கனை களுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.
5. அதிக புள்ளிகள் பெறும் பாடசாலை/கழகத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படும்.
6. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது.
7. புள்ளிகள்:-
முதலாம் இடம் - 10 புள்ளிகள்
இரண்டாம் இடம் - 7 புள்ளிகள்
மூன்றாம் இடம் - 4 புள்ளிகள்
8. கராட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் தமது உத்தரவுப் பத்திரங்களை (Licence) கொண்டு வரல் வேண்டும்

விண்ணப்ப முடிவுத் திகதி : 25-09-1992

விபரங்களுக்கு 081 993 7652

## புள்ளிகளுக்குரிய தனி நிகழ்ச்சிகளும் போட்டி வயதெல்லைகளும், நிகழ்ச்சிகளும்

**8 வயதிற்கு உட்பட்டோர்:**
50 மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல் (50 மீற்றர்)

**8 முதல் 11 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல் (50மீற்றர்), தடை ஓட்டம், அஞ்சலோட்டம் 4*100 மீற்றர் (பாடசாலை/கழகம்)

**11 முதல் 14 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல், தடை ஓட்டம், பந்தெறிதல் (CRICKET), அஞ்சலோட்டம் 4*100மீற்றர் (பாடசாலை/கழகம்)

**14 முதல் 17 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல், தடை ஓட்டம், பந்தெறிதல் (CRICKET), அஞ்சலோட்டம் 4*100மீற்றர், 4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**17 முதல் 20 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல் அஞ்சலோட்டம் 4*100மீற்றர் 4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**20 வயதிற்கு மேற்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல் அஞ்சலோட்டம் 4*100மீற்றர் 4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**20 முதல் 35 வயதிற்குட்பட்டோர்:**
குண்டெறிதல்

**35 வயதிற்கு மேற்பட்டோர்:**
குண்டெறிதல்

**17 வயதும் - அதற்கு மேற்பட்டோரும்:**
800மீற்றர், 1500மீற்றர்

கராட்டி
KUMITE
11-14 YEARS
14-16 YEARS
OVER 16 YEARS
KATA

CHILDREN (7th to 4th KYU)
CHILDREN UNDER 16 (3rd KYU & Above)
MEN OVER 16 (7th to 4th KYU)
MEN OVER 16 (3rd KYU & Above)
MIXED WHITE BELT

**கயிறு இழுத்தல் போட்டி**
விண்ணப்பக் கட்டணம் £10.00

**பொது நிகழ்ச்சிகள்:**
(போட்டியிலன்று மைதானத்தில் விண்ணப்பங்களை கையளிக்கலாம்.)
தலையணைச் சண்டை, மிதிவண்டி மெதுவாக செலுத்தும் போட்டி. (மிதிவண்டிகள் கொண்டு வரல் வேண்டும்), விநோதஉடைப்போட்டி, மூன்று கால் ஓட்டப்போட்டி (தம்பதிகளுக்கு மட்டும்), சமனிலை ஓட்டம் (பெண்கள்) ,சங்கீதக் கதிரை



www.tamilarangam.net

www.tamilarangam.net

# நம் காலத்தில் நிகழ்ந்த அற்புதம்

# ரசிகமணி டி.கே.சி

கி.ராஜநாராயணன்

ஒவ்வொரு கண்ணன் பிறப்பின் போது ரோகிணி நட்சத்திரம் வரும் அந்நாளில் ரசிகமணி (டி.கே. சிதம்பரநாதமுதலியார்)யின் பிறந்த நாளும் கொண்டாடப்படுகிறது. ரசிகமணியின் அன்பர்கள் அத்திரு நாளை முன்பு திருக்குற்றாலத்திலும் இப்போது தென்காசியிலும் கொண்டாடுகிறார்கள்.

ஆண்டுதோறும் அவர்கள் கூடி அவரைப் பற்றிய தங்கள் நினைவுகளில் உள்ளவற்றைப் பேசுகிறார்கள். அதே நினைவுடன் பிரிகிறார்கள். இப்படி நடந்துகொண்டேயிருக்கிறது. இப்படிக் கூட்டம் கூடிப் பேசிய பேச்சுகளை ரசிகமணி டி.கே.சி.யின் பெயரன் தீப- சிதம்பரநாதன் என்ற நடராஜன் ஒலிப்பேழைகளில் பதிவு பண்ணி வைத்திருக்கிறார். அப்பேச்சுகளில் தேர்ந்தவற்றை மட்டும் எடுத்து அச்சாக்கம் செய்தாலே சில புத்தகங்கள் வரும். வெளியூர்களில் எங்காவது சில நண்பர்களை, பெரியவர்களை நான் சந்திக்க நேரும்போது, டி.கே.சி.யைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள், எங்களுக்கு அவரைப் பற்றி சரியாகத் தெரியவில்லை என்று கேட்பார்கள்.

ஒரு தயக்கத்துக்குப் பிறகு, நான் அறிந்த சிலதைச் சொல்வேன். 'அப்படியா, அப்படியா' என்று ஆர்வத்தோடு செவிமடுப்பார்கள். ரசிகமணி பற்றி நான் அறிந்து கொண்டது ரொம்ப ரொம்பக் கொஞ்சம்.

நம்முடைய தமிழ் மாமக்களிடம் எப்பவும் ஒரு வழக்கம்-குணம்- உண்டு. அவர்கள் வாழ்ந்த காலத்து மேன்மக்களைப் பற்றித் தங்களுக்குள் அப்போது பேசி வியந்து, மகிழ்ந்து, பின் மறந்து, மடிந்து போய்விடுவார்கள்.

தாம் அறிந்த அபூர்வ விசயங்கள் மற்றவர்களும் அறிந்துகொள்ள எழுத்தில் பதிவதோடு புத்தகமாக்குவதோ கிடையாது. மகேந்திரநாத் என்ற "உழக்கரிசிச் சீவன்" மட்டும் இல்லை என்றால், ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி இந்த உலகத்தில் ஒரு "சுடுதுஞ்சு"க்குக்கூட அந்த விசயம் எட்டாமலே போயிருக்கும்.

டி.கே.சி. வாழ்ந்த காலத்தில் அவரோடு நெருக்கமாக இருந்த "புண்ணியவான்"களில் யாராவது மகேந்திரநாத்தைப்போல, அன்றாடம் இல்லையென்றாலும் ஒரு தேதியில்லா நாள்குறிப்பு போலவாவது டி.கே.சி.சொன்னவற்றைப் பற்றிக் குறித்து வைத்திருக்கலாம்.


டி.கே.சி. எழுதியது கொஞ்சம்; மிக மிகக் கொஞ்சம். அதோடு அவருக்கு அதன்பேரில் பெருத்த நம்பிக்கையும் கிடையாது. காரணம், எழுத்தில் அவற்றையெல்லாம் கொண்டுவர முடியாது என்னும் ஓர் எண்ணம் இருந்தது. கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள்தான் ரசிகமணியை உத்ஸாகப்படுத்தி எழுதவும் வைத்தார்கள் என்று சொல்லலாம்.

> கம்பருடைய தனித்த அனுபவ தத்துவம் ஒரு செய்யுளில் இல்லையென்றால் அந்தச்செய்யுளைத் தள்ளி விடுவதற்கு யோசிக்கவே கூடாது.

ரசிகமணி ஆனந்தமாக, ஈடுபாட்டோடு செய்துவந்தது பேச்சு மட்டும்தான் (மேடைப் பேச்சல்ல). உட்கார்ந்து அப்படி அவர் பேசிய பேச்சைக்கண்டு கேட்டவர்களைப் பாக்கியவான்கள் என்று சொல்லுவேன். நமது காலத்தில் இப்படி ஓர் அற்புதம் நிகழ்ந்தது என்பது தமிழர்களில் ரொம்பப் பேர்க்குத் தெரியாது.

இந்த இடத்தில் எனக்கு விளாத்திகுளம் சுவாமிகள் நினைவுக்கு வருகிறார். சுவாமிகளார், அன்பர்கள் புடைசூழ உட்கார்ந்த இடத்தில் பாடுவதுபோல மேடையில் அவர் பாடியதே இல்லை. மேடையை "அஜாடிகள்" நிறைந்த சபை என்பார்! அங்கே அவரைப் பாட வைப்பதே சிரமம்; மீறிப் பாடினாலும்; நமக்கு மன நிறைவு ஏற்பட்டாலும் அவருக்கு ஏற்படுவதில்லை.

ஒலிப்பதிவு நாடா முறை அமலுக்கு வராத அந்தக்காலம் தமிழனுக்கு இழப்பான காலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒலிப்பதிவு மட்டுமே இருந்திருநதால்



கால்வாசி ரசிகமணிதான் அதில் கிடைத்திருப்பார்; ஒளிப்பதிவும் சேர்ந்து இருந்தால்தான் ஓரளவு முழு ரசிகமணி டி.கே.சி.யை நாம் தரிசிக்க இயலும்.

தமிழனுடைய சொத்து என்னவெல்லாமோ கடல் கொண்டு போய்விட்டதுஎன்று சொல்லுவார்கள். அந்தக்கணக்கில் இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்; வேறுவழியில்லை.

ரசிகமணியின் குரலாக இப்போது நமக்குக் கிடைத்திருப்பதெல்லாம் அவருடைய கடிதங்களே; அடுத்து அவருடைய கட்டுரைகள்; அதற்கடுத்தது அவர் பதிப்பித்து வெளியிட்ட புத்தகங்கள். டி.கே.சி.யின் கடிதங்கள் அவ்வளவும் புத்தகங்களாக வந்துவிட்டன என்று சொல்ல முடியாது. பத்தில் ஒரு பங்கு புத்தகங்களாக வந்திருக்கின்றன என்று சொல்லலாம்.

அவற்றின் விவரம் பின்வருமாறு:-

1. "ரஸிகமணி டி.கே.சி.யின் கடிதங்கள்" -1961, முதல் பதிப்பு- 304 பக்கங்கள்.

தொகுப்பு: தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் (பொதிகை மலைப் பதிப்பு, தென்காசி)

(ராஜாஜி, திருப்புகழ் மணி, தேசிக விநாயகம் பிள்ளை, மகராஜன், பாஸ்கரன், டாக்டர் திருமூர்த்தி, கல்கி போன்ற மொத்தம் 26 பேர்களுக்கு எழுதிய கடிதங்கள்)

2. "ரசிகமணி கடிதங்கள்" - 1979, முதல் பதிப்பு- 392 பக்கங்கள்.

தொகுப்பு: எஸ்.மகாராஜன். (வெளியீடு: டி.கே.சி.வட்டத்தொட்டி

6 SND -தெரு, கீழ்ப்பாக்கத் தோட்டம், சென்னை-10)

(மகாராஜன், வேலம்பாள் இருவருக்கும் எழுதியவை)

3. "ரசனையின் ஒலி" பதிப்பு: சச்சிதானந்தம்- 1985-Peacock Publications-138- பக்கங்கள்

(திருச்சி ஜி.ஸி.பட்டாபிராம் அவர்களுக்கு எழுதிய சங்கீதம், பரதநாட்டியம், சிற்பம் போன்ற நூல்களைப் பற்றிய கடிதங்கள்)

4. "பேசும் கடிதங்கள்"

தொகுப்பு: ராஜேஸ்வரி நடராஜன்- 1988; 48 பக்கங்கள் (பாஸ்கர நிலையம், 31, 7வது குறுக்குத்தெரு, சாஸ்திரி நகர், சென்னை- 20)

## டி.கே.சி. எழுதிய நூல்கள்:

1."இதய ஒலி"

20 கட்டுரைகள். முப்பதுகளில் டி.கே.சி. அவ்வப்போது எழுதியவை. முதல் பதிப்பு 1941- பொதிகைமலைப் பதிப்பு, தென்காசி- விற்பனை: வானதிப் பதிப்பகம் (நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளன)

2. "கம்பர் யார்?"

வானொலிப் பேச்சுகள் ஆறும் ஆனந்த விகடனில் வந்த கட்டுரைகள் மூன்றும். முதல் பதிப்பு 1941- பொதிகைமலைப்பதிப்பு- விற்பனை: வானதிப் பதிப்பகம், சென்னை.

3. "அற்புத ரஸம்"

1944ல் வெளிவந்த சிறிய பிரசுரம். இவை போக, "தமிழ்க் களஞ்சியம்" எனும் தலைப்பில் "கல்கி" இதழில் தொடராக, தனிப்பாடல்கள் பற்றி வந்தவை, இன்னும் புத்தகமாக வரவில்லை.

இவை போக இன்னும் சில கட்டுரைகள், கையெழுத்துப் பிரதிகளாகவும் இருக்கலாம்.

ஆனந்தவிகடனில், "இசையில் அமேஸான்" என்ற ஒரு கட்டுரை எனது சிறிய வயசில் பார்த்ததாக நினைவு. கட்டுரையின் விசித்திரத் தலைப்பே அது என் ஞாபகத்தில் இன்றும் இருக்கக் காரணம். இது நாற்பதுகளின் ஆரம்பத்தில் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

**டி.கே.சி. பதிப்பித்த நூல்கள்:**

1."முத்தொள்ளாயிரம்"

1943-பொதிகைமலைப் பதிப்பு. விற்பனை: பாரி நிலையம் சென்னை-1

2. கம்பர் தரும் ராமாயணம்" மூன்று பாகங்கள்

முதல் பாகம்: பால- அயோத்தியா காண்டங்கள்- 1953.

இரண்டாம் பாகம்: ஆரணிய- கிஷ்கிந்தா காண்டங்கள்-1954

மூன்றாம் பாகம்: சுந்தர-யுத்த காணடங்கள்-1955 பொதிகைமலைப் பதிப்பு, "பஞ்சவடி" அனுமந்தபுரம் தெரு, தென்காசி.

டி.கே.சி. பதிப்பித்த நூல்கள் திருத்தமாகவும் சொடுக்கு எடுத்ததுபோல் சிக்கல் இல்லாமல் தெளிவாகவும் இருக்கும். பாடல்கள்- கவிதைகள்- மக்களைச் சென்று அடையவேண்டும் எனும் அக்கறையில் சந்தி பிரித்து அழகாக

## காவியத்தை யாத்த கவிஞனாகவே மாறிவிடுவார்

அச்சிடப்பட்டிருக்கும். பண்டைக் காலத்தில் பனை ஓலைச் சுவடிகளில் இடம் பற்றாக்குறை காரணமாக எழுதிவைத்த முறை சாமானியர்களால் படித்து அனுபவிக்க முடியாதபடி இருந்து வந்தது. ஏட்டைப் பார்த்துப் படிக்கத் தெரிந்தவரைத்தான் கூப்பிடவேணடும். அவர் வந்து படித்துக் காட்டினாலும் விளங்கிக்கொள்ள முடியாது. விளக்கம் சொல்ல, அது தெரிந்த ஓர் ஆளைக் கூப்பிட வேண்டும். அவரும் நமக்கு விளங்கும்படிச் சொன்னால்தான் உண்டு?

"பற்றேய்த்தான்" என்று இருந்தால், பல் தேய்த்தான் என்று சொன்னால் தான் விளங்கும் நமக்கு. காறள் ளாடுது என்றால் கால் தள்ளாடு என்று அர்த்தம். முட்டைத்து விட்டது என்றால் முள் தைத்து விட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். நமது பெரும் மதிப்பிற்குரிய பெரும் பண்டிதர்கள் மெய்யாகவே இப்படித்தான் எழுதியும் பேசியும் (!) வந்தார்கள் ஒரு காலத்தில். ஒருசெம்பைக் கையில் எடுத்துக்கொண்டு அழும் குழந்தைக்குப் பால் வாங்கிவரப் போனார். பசுமாடுகள் இருக்கும் வீடுகளுக்குத்தான் போனார். கேட்டார். மன்றாடினார். கையை விரித்து விட்டார்கள்.

"பாறருவாருண்டோ"

"பாறருவாருண்டோ"

என்றுதான் கேட்டார் (உசாவினார்). அவர்கள் தமிழ் மக்களாக இருந்தும்கூட அவர்களுக்குத் தமிழ் விளங்கவில்லை, பாவம்.

டி.கே.சி. பதிப்பித்த நூலில் ஒவ்வொரு பாடலுக்கும் முன்னுரை, பொருள் விளக்கம், அடிக்குறிப்பு இவை இருக்கும். "பண்டையத் தமிழ் நூல்கள் அனைத்தும் கற்றவரையே மனதிற்கொண்டு பதிப்பிக்கப்பட்டன. அந்நூற் பதிப்புகள் கடினத்தன்மையைப் பெற்று விளங்கியமையால் ஆழ்ந்த கல்வியறிவு இல்லாத மிக எளிய மக்களுக்கு அவற்றால் பயன் ஏதும் விளையவில்லை. இந்நிலையை மாற்றிப் பதிப்புக் கலை எளிய மக்களையும் சென்றடையுமாறு முதன்முதலில் அதனை எளிமைப்படுத்தித் தந்த பெருமை ரசிகமணி டி.கே.சி.யைச் சாரும்... கற்றறிந்த பண்டிதருக்காக இவர் பதிப்புப் பணியை மேற்கொள்ளவில்லை" என்று கூறுகிறார் முனைவர் பட்ட ஆய்வாளர் ச.ஈஸ்வரன் என்ற இக்காலத்திய இளைஞர். "கம்பர் தரும் இராமாயணத்தில் கவிதையையும் கம்பரையும் பற்றி 45 பக்கங்கள் கொண்ட விரிவான டி.கே.சி.யின் முகவுரை உள்ளது... 'சீரும் சந்தமும்' என்ற முதல் அனுபந்தத்தில் பாட்டை எவ்விதம் படிக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது அனுபந்தத்தில் டி.கே.சி.யின் திருத்தங்கள் அனைத்திற்கும் அட்டவணை காணப்படுகிறது. அத்திருத்தங்கள் மற்ற கம்பராமாயணப் பதிப்புகளோடு ஒப்பிட்டுத் திருத்தங்களின் இன்றியமையாமையைத் தெரிந்து கொள்ளலாம். மூன்றாவது அனுபந்தம் பாடல்களின் முதற்குறிப்பு அட்டவணையினின்றும் வேறுபட்டது. பாடலின் முதல் எழுத்துக்களைக் கொண்டு அகர வரிசைப்படி

16ம் பக்கம் பார்க்க

> மேலவையில் டி.கே.சி. பேசிய பேச்சுகளில் முக்கியமானவற்றில் ஒன்று அப்போதைய வெள்ளை அரசு பாரதியின் பாடல்களைத் தடைசெய்து இயற்றிய சட்டத்தை எதிர்த்து. சிறந்த ரசிகர் என்ற முறையில் சிறந்த கவிதைகளுக்கு விதிக்கப்பட்ட தடையை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும் வெள்ளை அரசின் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார்.

> காவியத்தில் ஒரு பாத்திரம் பேசும்போது, கவிஞனே அப்பாத்திரமாக மாறிவிடுகிறான். நாமெல்லாம் அந்தப் பாத்திரம் பேசுவதையும் இயங்குவதையும் அனுபவிப்போம். ரசிகமணியோ, அந்தப் பாத்திரத்துக்குள் புகுந்து அந்தக் கவிஞனாகவே மாறிவிடுகிறார்.

> நம்முடைய தமிழ் மாமக்களிடம் எப்பவும் ஒரு வழக்கம் -குணம்- உண்டு. அவர்கள் வாழ்ந்த காலத்து மேன்மக்களைப் பற்றித் தங்களுக்குள் அப்போது பேசி வியந்து, மகிழ்ந்து, பின் மறந்து, மடிந்து போய்விடுவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம் காலத்தில்

15ம் பக்கத் தொடர்ச்சி

அமைக்காமல், எதுகையகராதியாக அமைத்திருப்பது டி.கே.சி.யின் பதிப்பில் ஒரு விசேடம். அஃதாவது, இரண்டாவது எழுத்து ஒன்றாக வருமாறு காணப்படும். ஒரு பாடலில் எந்த அடி நினைவுக்கு வந்தாலும் அதை வைத்து இநத அட்டவணையிலிருந்து பார்த்து எடுக்கலாம். முதல் மொழியை மட்டும் காட்டாமல் நான்கடிகளுக்கும் பொதுவாக உள்ள எழுத்தைக் கொண்டு இந்த அட்டவணை அமைக்கப்பட்டதால் பாடலை மிக எளிமையாகக் கண்டுபிடித்து விடலாம். இஃது இப்பதிப்பின் சிறப்பாகும்".

கம்பர் பாடாத பாடல்களை நீக்கியும், திருத்தங்கள் செய்தும் வெளியிடப்பட்ட டி.கே.சி.யின் "கம்பர் தரும் ராமாயண"ப் பதிப்பை, 'தெரிவு திருத்தப் பதிப்பு' எனப் பெயர் சூட்டி அழைக்கிறார், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. ("கம்பன் காவியம்" பக்கம் 108)". முத்தொள்ளாயிரப் பதிப்பில் பாடல்களை டி.கே.சி.திருத்தவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும் இங்கே. பண்டைய கவிதைகளில் ஏற்பட்டிருந்த பிழைகளை- முக்கியமாகக் கம்ப ராமாயணப் பாடல்களில் ஏற்பட்ட பிழைகளை- டி.கே.சி.திருத்தியது, அக்காலத்தில் அவருக்கு எதிராக ஒரு புயல்வேக எதிர்ப்புத் தோன்றியது.

"தமிழ் நூல்களில் பாடம் எத்தனையோ விதத்தில் சிதைந்து கிடக்கிறது. ஆனால் கம்ப ராமாயணத்தில் பாடம் சிதைந்து கிடக்கிற மாதிரி வேறொன்றிலும் பார்க்கமுடியாது. சில பாடல்களில் சீருக்குச் சீர் பாட பேதம். பாட பேதங்களைக் குறித்த எந்தப் பதிப்பைப் பார்த்தாலும் அது தெரியவரும. கண்ணை எடுத்துக் காதில் வைத்திருக்கும்; அப்படியே காதை எடுத்து மூக்கில் வைத்திருக்கும்; கையைப் பிய்த்து இடுப்பிலும் காலை வாங்கித் தோளிலும் தொங்கவிட்டிருக்கும். இவற்றை "ஆப்பரேஷன்" செய்து உருவம் ஆக்குவது என்றால் எளிதா? 'போதும் போதும் கம்பராமாயணம் போதும்' என்று தோன்றிவிடும். பழைய ஏடுகள் ஒருவகையில் வழிகாட்டலாமே ஒழியப் பூரணமாகத் திருப்தி கொடுத்த பாடாக இல்லை. யூகித்து யூகித்து ரொம்பவும் சிரமப்பட்டுத் தான் பாடங்களைக் கண்டுபிடித்துத் திருத்த வேண்டியிருக்கிறது.

"காட பேதங்கள், அதாவது பார்த்து எழுதுவதில் ஏற்பட்ட பிழைகள் இருந்து விட்டுப் போகட்டும். கம்பர் பாடாத

> தாம் அறிந்த அபூர்வ விசயங்கள் மற்றவர்களும் அறிந்துகொள்ள எழுத்தில் பதிவதோடு புத்தகமாக் குவதோ கிடையாது.

கவிகளை ஏட்டில் புகுத்தியிருக்கிறார்களே!; அதுவும் எத்தனை எத்தனையோ!! அதனால் பாத்திரங்களும் கட்டங்களும் உருக்குலைந்து போயிருக்கிறதைப் பார்த்தால், ஏதோ கம்பர் மேல் துவேஷம் கொண்ட புலவர்கள் நெடுகிலும் ஆயிரம் வருஷமாகச் செய்துவந்த அக்கிரமம் என்று சொல்லத் தோன்றும். இந்தச் செருகு கவிகளையும் சேர்த்து ஒரு கட்டத்தை வாசித்துப் பார்த்தால் கம்பரானவர் கவி அல்லர் என்று மாத்திரம் தோன்றாது; பைத்திய ஆஸ்பத்திரியில் வைத்து பங்தோபஸ்துப் பண்ண வேண்டிய ஆசாமி என்றே தோன்றும். செருகு கவிகளை அறவே களைந்து விட்டுப் படித்தாலொழிய கம்பரை உணர்ந்தோம் என்று சொல்ல முடியாது. இந்த விஷயத்தில் பேரம் பண்ணிக் கொண்டிருந்தால் கம்பருக்குத் துரோகம் செய்கிறோம் என்றுதான் ஏற்படும். கம்பருடைய இதய பாவங்களையும் ஓசை, தாளம் ஆகிய இசைப் பண்புகளையும், கை லாகவங்களையும் பார்த்தனுபவித்த சாதனையுடையவர்கள் செருகு கவிகளைக் கண்டுபிடித்து ஒதுக்கிவிடலாம்.

இது ஒருவாறு சித்தி ஆவதுதான். கம்பரது கவி ஒவ்வொன்றிலும் இருக்கிறது அவர் முத்திரை. ஷேக்ஸ்பியர் கவிகளில் முத்திரையிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மகாகவிகள் எல்லோரிடத்திலுமே முத்திரை என்று சொல்லக் கூடிய தனித்த அனுபவ தத்துவம் உண்டு. கம்பருடைய தனித்த அனுபவ தத்துவம் ஒரு செய்யுளில் இல்லையென்றால் அந்தச் செய்யுளைத் தள்ளி விடுவதற்கு யோசிக்கவே கூடாது. வைர உட்டாணி



களால் செய்த பதக்கத்தின் இடையே காசுக்கு நாலாக வாங்குகிற கண்ணாடித் தரிப்பு இருந்துவிட்டால் அவற்றைஉடனே பிடுங்கி எறிய வேண்டியதுதானே முறை. அல்லாத பட்சம் குறுணிவந்து கோட்டையைக் கெடுத்தது என்றபடி பதக்கமே தரிப்புப் பதக்கமாய்ப் போய்விடும்." என்கிறார் ரசிகமணி டி.கே.சி.

(-"கம்பர் யார்?" பக்கங்கள் 101,102.)

## டி.கே.சி.யைப் பற்றி இதுவரை வந்த நூல்கள்:

"ரசிகமணி டி.கே.சி." -1946- தொ.மு.பாஸ்கரத் தொண்டமான்.

"டி.கே.சி. வரலாறு" - 1955- ல.சண்முகசுந்தரம்.

"நான் கண்ட டி.கே.சி." - 1955- எஸ்.வி.எஸ்.

"மாந்தருள் ஒரு அன்னப்பறவை" - 1981-

கி.ராஜநாராயணன்.

"ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார்" - 1987

-ல.சண்முகசுந்தரம் (சாகித்திய அகாதெமிக்காக)

"ரஸஞ்ஞானி டி.கே.சி." - 1990 -எஸ்.மகாராஜன்.

பல்கலைக்கழகங்களின் ஆய்வுகள்;

டி.கே.சி.யைப் பற்றி:-

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

முனைவர் பட்டம் (Ph.D) ஆய்வாளர்:

ச.ஈஸ்வரன்.

காமராசா பல்கலைக்கழகம், மதுரை.

இளம் முனைவர் பட்டம் (எம்.பில்)

ஆய்வாளர்: குமார- அழகப்பன்.

டி.கே.சி.வகித்த பதவிகள்:-

சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினர் (M.L.C.)

1927-30

இந்து அறநிலையத்துறை ஆணையர் -1930-35

ரசிகமணி, சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த போது அவருடைய நடவடிக்கைகள் எவ்வாறு இருந்தன, ஒழுங்காக சட்டமன்றத்துக்குப் போனாரா, என்ன என்ன பேசியிருப்பார், என்ன மாதிரியான

> ரசிகமணி ஆனந்தமாக, ஈடுபாட்டோடு செய்து வந்தது பேச்சு மட்டும் தான் (மேடைப் பேச்சல்ல). உட்கார்ந்து அப்படி அவர் பேசிய பேச்சைக்கண்டு கேட்டவர்களைப் பாக்கியவான்கள் என்று சொல்லுவேன்.

கேள்விகளையெல்லாம் கேட்டிருப்பார் என்றெல்லாம் நான் யோசித்ததுண்டு. ஆய்வாளர் ஈஸ்வரனிடம், சட்டமன்ற மேலவை நடவடிக்கைகளைப் பற்றிய பதிவுப்புத்தகங்களில் இதுபற்றித் தேடி எடுக்கமுடியுமா என்று கேட்டேன். அந்தக் காரியத்தை ஈஸ்வரன் ரொம்பத் திருப்தியாக செய்து முடித்தார். அவற்றின் நகல்களை எனக்கும் ஒரு படி அனுப்பி வைத்தார். மேலவையில் டி.கே.சி.பேசிய பேச்சுகளில் முக்கியமானவற்றில் ஒன்று அப்போதைய வெள்ளை அரசு பாரதியின் பாடல்களைத் தடைசெய்து இயற்றிய சட்டத்தை எதிர்த்து. சிறந்த ரசிகர் என்ற முறையில் சிறந்த கவிதைகளுக்கு விதிக்கப்பட்ட தடையை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும் வெள்ளை அரசின் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார்.

அறநிலையத்துறை ஆணையாளராகப் பதவி வகித்த அய்ந்தாண்டுக் காலங்களில் (1930-35) கோயில்கள்தோறும் சென்று சிற்பங்களைப் பார்த்து அனுபவிக்கும் வாய்ப்பு வாய்த்தது. அப்போது கோயில் பட்டர்களின் உலகம் ஒரு "வித்தியாசமான" ஆணையரைப் பார்க்க நேர்ந்தது! சிலைகளை, ஆடை உடுத்தி அணிகலன்கள் பூட்டி அலங்காரம் செய்த பிறகு தான் அதிகாரிகளை அழைத்துக் காட்டுவது வழக்கம்; அவர்களும் பார்ப்பது வழக்கம். இந்த வித்தியாசமான ஆணையரோ, ஆடைகளும் அணிகலன்களும் சிற்பத்தின் அழகைக் குறைக்கும்- சில சமயம் கெடுத்துவிடும் - என்று கருதினார். சிலை செய்த சிற்பியே அதற்கு ஆடையும் அணிகலன்களும் செய்தேதான் வைத்திருக்கிறான் என்று கருதினார். ஆகவே பட்டர்கள் அலங்காரம் பண்ணுவதற்கு முன்னால் சிலைகளைப் பார்த்து அனுபவிக்க விரும்பினார். இந்து அறநிலையத்துறை ஆணையரே வந்து கேட்கும்போது பட்டர்களால் தடுதல் சொல்ல முடியுமா?

சென்னை ராஜதானி முழுவதிலுமுள்ள கோயில்களில் தாம்பார்த்த சிலைகளிளெல்லாம் விஞ்சி நிற்பது தென்காசியிலுள்ள காசிவிஸ்வநாதர் ஆலயத்தின் முன்மண்டபத்தில் அமைந்துள்ள சிலைகளே; அதிலும் அந்த முன்பக்கத்திலுள்ள இரண்டு நாட்டிய மாதர்களின் சிற்பங்களே என்ற முடிவிற்கு வந்தார்.

அவர் ஆணையராக இருந்த காலத்தில் குற்றாலத்தில் பெரிய அருவியின் பக்கத்திலுள்ள மண்டபத்தின் படித்துறை அருகே நான்கு கற்சிலைகள் குப்பிறப் போட்டு புதைந்த நிலையில் இருப்பதைக் கண்டார். அந்தச் சிலைகளை எடுத்துப் பார்த்ததில், அதில் ஒரு நடனமாதின் நாட்டியமாடும் சிலையும் மது ஜாடியைத் தோளில் வைத்துக் கொண்டு நடந்துவரும் ஒரு பணியாளின் சிலையும் வெகு அற்புதமாகச் செய்யப்பட்டிருப்பதைக் கண்டார். அவற்றை எடுத்துக்கொண்டு வந்து சித்திர சபையின் ""திண்ணை"யில் இருபக்கமும் வைத்திருப்பதை இப்போதும் நாம் பார்க்கலாம். கலை நேர்த்தியுடன் வெகு அற்புதமாக செய்யப்பட்ட அந்தக் கற்சிலைகள் பார்த்துப் பார்த்து அனுபவிக்கத் தக்கவை.

கவிதைகளில் ரசிகமணி செய்த திருத்தங்கள் பற்றிக் கருத்துக் கூற அடியேனுக்கு எந்தவிதத் தகுதியும் கிடையாது. தமிழ் அறிஞர் உலகம்தான் நடுநிலையோடு ஆய்ந்து பண்ணவேண்டிய ஒரு காரியம் அது.

அவர் காலத்தில் வாழ்ந்த பல தமிழ் அறிஞர்கள் -ரசிகமணியின் திருத்தங்களை மனசார ஏற்றுக் கொண்டவர்கள்- இதை இப்படி ஏற்றுக்கொண்டால் பின்னாளில் கண்டவர்களெல்லாம் வந்து கண்டபடிப் பாடல்களைத் திருத் துவது என்று ஆகிவிடுமே என்ற பயம் காரணமாகப் பகிரங்கமாக ஆதரிக்காமலும் நடுநிலையும் வகித்தார்கள் என்பது மெய்.

என்றாவது ஒருநாள் குறிப்பிட்ட ஒரு தமிழ் அறிஞன்- தமிழகத்திலோ வெளிநாட்டிலோ- தோன்றி ரசிகமணியின் திருத்தங்கள் பற்றி மிகச் சரியாக ஆராய்ச்சி செய்து நிறுவுவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

காவியத்தில் ஒரு பாத்திரம்

> ஒருசெம்பைக் கையில் எடுத்துக்கொண்டு அழும் குழந்தைக்குப் பால் வாங்கிவரப் போனார். பசு மாடுகள் இருக்கும் வீடுகளுக்குத்தான் போனார். கேட்டார். மன்றாடினார். கையை விரித்து விட்டார்கள்.
>
> "பாறருவாருண்டோ"
> "பாறருவாருண்டோ"
> என்றுதான் கேட்டார் (உசாவினார்). அவர்கள் தமிழ் மக்களாக இருந்தும் கூட அவர்களுக்குத் தமிழ் விளங்கவில்லை, பாவம்.

பேசும்போது, கவிஞனே அப்பாத்திரமாக மாறிவிடுகிறான். நாமெல்லாம் அந்தப் பாத்திரம் பேசுவதையும் இயங்குவதையும் அனுபவிப்போம். ரசிகமணியோ, அந்தப் பாத்திரத்துக்குள் புகுந்து அந்தக் கவிஞனாகவே மாறிவிடுகிறார். இந்தச் சித்தி ஞானிகளுக்கு மட்டுமே அமைந்தது. அந்தக் கவிஞனாகவே அவர் மாறிவிடுவதால்தான் அந்தப் பாடல்களில் 'தான் இயற்றாத' அடிகளைத் தள்ளவும், நேர்ந்த பிழைகளைத் திருத்தவும் முடிகிறது.

கம்பநாட்டாழ்வாருக்காக வேண்டி ஸ்ரீ ராமபிரான் மீண்டும் ஒரு முறை அவருக்குள் (கம்பருக்குள்) அவதரித்தான் என்று பெரியவர்கள் சொல்வார்கள். இப்போது இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து ஒரு ரசிகமணிக்காக கம்பநாட்டழ்வாரே அவருள் மீண்டும் ஒருமுறை அவதரித்தார் என்று மூதறிஞர் ராஜாஜி கூறியது இங்கே நினைவு கூரத்தக்கது.

முப்பதுகளில், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை "ஆனந்தவிகடன்" தீபாவளி மலருக்கு,

'கோவில் முழுதும்
கண்டேன்- உயர்
கோபுரம் ஏறிக்கண்டேன்
தேவாதி தேவனை யான்- தோழி
தேடியும் கண்டிலனே,

எனும்பாடலை அனுப்பியிருந்தார். பாடலைப் படித்துப் பார்த்த கல்கி கிருஷ்ணமூர்த்திக்குப் பிடித்துப் போய்விட்டது. பாடிப் பாடி அனுபவித்தார். என்றாலும், பாடலின் நிறைவடையாத ஒரு தோற்றத்தை அவரால் உணர முடிந்ததே தவிர அது என்னது என்று சொல்லத் தெரியவில்லை. இப்படி அவர் "மன்றாடி"க் கொண்டிருந்தபோது "கடவுள்போல" ரசிகமணி அங்கே வருகிறார்.

கவிமணியின் பாடல்கள் என்றால் ரசிகமணிக்கு உயிர். கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து அந்தப் பாடலை வாங்கிப் பார்த்து அனுபவித்துப் பாடிப் பாடிப் பார்த்தபோது, பாடல் பூர்த்தி அடையவில்லை; இன்னும் சொல்வதற்கு ஒன்று இருக்கிறது என்று உணர்ந்தார். பாடலை மாறி மாறிப் பாடினார். ரசிகமணி இப்போது கவிமணியாக மாறிவிட்டார். பாடலின் கடைசி இரண்டு அடிகள் உருவாயின.

"உள்ளத்தில் உள்ளானடி -
அது நீ
உணர வேண்டும் அடி
உள்ளத்தில் காண்பாய் எனில் -
கோயில்
உள்ளேயும் காண்பாய் அடி"

பூர்த்தியாகிவிட்டது பாடல்.

சில நாள்களுக்குப் பிறகு, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை திருக்குற்றாலத்துக்கு வருகிறார். ரசிகமணி அப்போது அந்தப் பாடல் முழுவதையும்- தனது திருத்தம் உள்பட- பாடுகிறார். கவிமணி மெய்மறந்து அனுபவித்தது மட்டுமல்ல, இப்பாடல் தோன்றக் காரணமாக இருந்த ஒரு சம்பவத்தை அங்கே விவரிக்கிறார்.

மாலைப் பொழுதில் ஒருநாள். கவிமணி உலாவச் சென்றபோது கோயிலுக்குப் போக நேர்கிறது. அங்கே, இரண்டு இளைஞர்கள்: நெருங்கிய நண்பர்கள். ஒருவன் இந்து மதத்தைச் சேர்ந்தவன். மற்றவன் வேற்று மதத்தைச் சேர்ந்தவன்; விக்கிரக பூசை, கோயில் இவற்றில் நம்பிக்கையில்லாதவன். என்றாலும் நண்பனுக்காக அவனுடன் கோயிலுக்கு வந்திருக்கிறான். முதலாமவன் விழுந்து விழுந்து கும்பிடுகிறான். மற்றவனோ அக்கோயிலை ஒரு பொருட்காட்சியைப் பார்ப்பதுபோலப் பார்த்துக் கொண்டு வருகிறான். கவிமணியின் பார்வையில் விழுந்த இவர்களை அவர் விசாரிக்கிறார். 'யார் எவர் என்ன?' என்று. உண்மை தெரிகிறது. அக்காட்சி அவர் மனதைவிட்டு அகலாமல் நிற்கிறது. அதையே அவர் பாடலாகப் புனைகிறார். "நாத்திக"னான நண்பனும் பக்தனும், ஒரு நாயகியாகவும் தோழியாகவும் மாறுகிறார்கள். (படைப்புலகின் காரியங்களே இப்படித்தான்!) பாடலின் முற்பகுதி நாயகியின் கூற்றாகவும் பாடலின் இறுதிப் பகுதி தோழியின் பதிலாகவும் அமைகிறது. அதிசயம் என்னவென்றால், பாடலின் இறுதிப் பகுதியைக் கவிமணி, தாம் பாடியதாகவே நினைத்தது மட்டுமல்ல, தான் பாடும்படியாக ஏற்பட்ட "நதிமூலத்"தையும் நிகழ்ந்ததை நிகழ்ந்தபடியே கூறுகிறார். அந்த மூலக்காட்சியை ரசிகமணி பார்த்தவரில்லை. ஆயினும் அவர் கவிமணியாக மாறியபோது அவருக்கும் அந்தக் காட்சி-வேறு எந்த வகையிலோ- கிடைத்திருக்கிறது!

படைப்பிலக்கிய உலகில் எத்தனையோ விந்தைகள் நடந்திருக்கின்றன. காலம் வரும்போது அவை வெளியே தெரிவது நல்லது என்பதைக் கருதியே இங்கே நான் குறிப்பிட நேர்ந்தது.

இவ்வாறு இது நடந்தது மெய்தானா என்று பல பேரிடம் நான் நேரிலும் கடிதம் மூலமும் தீர விசாரித்துக்கொண்டேயிருந்தேன். மெய்தான் என்பதை இப்போது, முன்பு ரசிகமணியிடம் தனிச்செயலராகப் பணிபுரிந்த எஸ்.வி.எஸ். எனக்கு எழுதிய நீண்ட கடிதத்தின் மூலம் உறுதி செய்து கொண்ட பிறகே இதைக் குறிப்பிடலானேன்.

-நன்றி:தினமணி

# குண்டு வெடிப்பில்

1ம் பக்கத் தொடர்ச்சி

பகுதிகள் மீது, விமானங்கள் குண்டுகள் வீசித்தாக்கியுள்ளன.சேதவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறுவதாகவும்,பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விபரங்கள் வெளியிடப்படாதென்றும், பிரதமர் டி.பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உங்கள் ராசிபலன் எப்படி?

## சோமசன்மா

இங்கு தரப்படும் பலன்கள் சந்திரலக்கின கோசார பலன்கள். கோசாரபலன் என்பது ஒருவர் பிறந்த சமயத்தில் சந்திரன் எந்த ராசியில் இருந்தாரோ அந்த ராசியை முதலாக வைத்து, இப்பொழுது மற்றைய கிரகங்கள் எந்தெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கணித்துப் பலன் சொல்வதாகும். உதாரணமாக, நீங்கள் பிறக்கும்போது அசுவினி நட்சத்திரம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் சந்திரன் மேட ராசியில் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கிரகமும் எத்தனையாவது வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து, அதன்படி பலன் சொல்ல வேண்டும்.

உங்களில் சிலருக்குச் சந்திர லக்கினம் தெரியாமலிருக்கலாம். நட்சத்திரம் மாத்திரம் தெரியலாம். அப்படியானால், உங்கள் நட்சத்திரத்துக்குரிய ராசியைப் பின்வரும் அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அசுவினி, பரணி,
கார்த்திகை முதல் கால்........................................மேடம்
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி,
மிருகசீரிடம் முன்னரை........................................இடபம்
மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம்
முன்முக்கால்........................................மிதுனம்
புனர்பூசத்து நாலாங்கால்,பூசம்,
ஆயிலியம்........................................கர்க்கடகம்
மகம், பூரம், உத்தரத்து
முதற்கால்........................................சிங்கம்
உத்தரத்து பின்முக்கால், அத்தம்,
சித்திரை
முன்னரை........................................கன்னி
சித்திரையின் பின்னரை, சுவாதி,
விசாகத்து முன்முக்கால்........................................துலாம்
விசாகம் நாலாங்கால்,
அனுஷம்,
கேட்டை........................................விருச்சிகம்
மூலம், பூராடம்,
உத்தராடத்து முதல்
கால்........................................தனு
உத்தராடத்து பின்முக்கால், திருவோணம்,
அவிட்டத்து முன்னரை........................................மகரம்
அவிட்டத்துப் பின்னரை, சதயம்,
பூரட்டாதி
முன்முக்கால்........................................கும்பம்
பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி,
ரேவதி........................................மீனம்

### மேடம்

வரவேண்டிய லாபங்களை இடைத்தரகர்கள் அடித்துக்கொண்டு போவதுமுண்டு. அப்படியிருந்தாலும் சில நண்பர்கள் கைகொடுத்து உதவுவதையும் காணலாம். குடும்பத்தில் தகராறு சிறு சலசலப்புத்தான். சிறுவர்கள் நலனைக் கவனிக்க வேண்டும்தானே. பிரயாணம் இப்போது அவசியம்தானா? பாதை எப்போதும் சீராயிருக்காது, வாழ்வுப் பாதையும்தான்.

அதிஷ்ட எண். 3

### இடபம்

எதிர்பாராத நலன்களும் வசதிகளும் வரும்போது தட்டுத் தடுமாறாமல் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் ஆலோசனை தருவார்கள். அப்படியான நிலை ஏற்படலாம். பொருளும் புகழும் பெரியோர் சகவாசமும் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் கிடைக்கிறது என்ற உண்மையை எத்தனை பேர் உணர்வார்கள்? புதிய வாகனம் இப்போது அவசியம் தானா?

அதிஷ்ட எண். 7

### மிதுனம்

புதிய வீடும் வாகனமும் வந்தாலும் சிரமங்களும் கூடவே தொடர்வது சகஜம்தான். பொறுமையோடு இருந்தால் லாபமுண்டு. தாயார் சகோதரிகள் துணையில் எத்தனையோ பொறுப்புக்கள் இலகுவாகின்றன. சீதனத்தைப்பற்றி இப்போஅவசரப் படவேண்டுமா? காலம் மாறிக் கொண்டு வர, ஆட்களும் மாறுவார் கள். வெளியூர் தொடர்பு லாபகரமாகும்.

அதிஷ்ட எண். 6

### கர்க்கடகம்

குழந்தைகளின் படிப்பு விஷயம் எல்லாருக்கும் கவலைதான். ஆனால் எதிர் பாராது அவர்கள் புதிய பாக்கியத்தைப் பெறுவதும் உண்டல்லவா? செலவுதான் அடிக்கடி ஏற்படுவதை யாரால் தவிர்க்க முடியும்? வீட்டுப்பிரச்னை எல்லாருக்கும் ஒரு மாதிரிதான். வாகனம் சில சமயங்களில் ஓடாமல் நிற்பதுண்டு. வாழ்க்கை வண்டியும் தகராறு காண்பிக்கலாம். உலகம் பலவிதம்.

அதிஷ்ட எண். 4

### சிங்கம்

பொருள் வருவாயும் குடும்பச் சிறப்பும் பேச்சில் நிதானமும் எல்லாருக்கும் கிடைக்கும் சம்பத்துக்களா? கிடைப்பதைக் காப்பாற்றத்தெரிய வேண்டுமே. அற்ப சுகமானாலும் ஆதரிக்கத் தெரிய வேண்டும். அயல்நாட்டு நண்பர்கள் உதவியும் ஆதரவும் எல்லாருக்கும் கிடைக்காது. விருந்தினர் வருகை லாபகரமான வருகையாக எப்போதும் இருப்பதில்லை. வாகனத்தை அதிகமாக உபயோகிப்பதும் சிலருக்கு ஒரு வழக்கம், என்ன செய்யலாம்?

அதிஷ்ட எண். 3

### கன்னி

உயர் பதவியும் வருமானமும் எதிர்பார்த்து ஒரு சிலர் ஏமாற்றமடைவது எப்போதும் கிடைக்குமா? சில நண்பர்கள் முகத்துளவுதான் என்பதையும் உணர்ந்துகொள்வது நல்லது. எதிர்பார்த்த பலன் கிடைக்காது. குழந்தைகள் விஷயத்தில் திடீரென சில மாறுதல்களை எதிர்நோக்குவதுமுண்டு.

அதிஷ்ட எண். 2

### துலாம்

மழைபோல் வரும் லாபங்கள் பனிப்போல் மறைவதை யாரால் தவிர்க்க முடியும். சிலருடைய வார்த்தைகளை நம்பி ஏமாறாமல் காத்துக்கொள்வது எல்லாருக்கும் முடிகிறதா? பிரயாணத்தில் தடங்கல் ஏற்படுவது பின் வரும் ஆபத்தைத் தடுப்பதற்காக என்பதை அறியலாம். குடும்பத்தில் புதிய வரவு எதிர் பார்த்த வரவுதான், குடும்பம் பெரிதாவதுபற்றிக் கவலை வேண்டாம். செலவுகளுக்கு சில இடங்களிலிருந்து துணை கிடைக் கலாம்.

அதிஷ்ட எண். 5

### விருச்சிகம்

லாபம் பாதி செலவு பாதி என்றால் யார்தான் வேண்டாமென்பார். அப்படி வாய்க்கப்பெற்றவர்கள் ஆயிரத்திலொருவர்தான். பெரியவர்கள் என்று சொல்லி லாபம் சம்பாதிக்க ஒருசிலர் வருவார்கள். அவர்கள் பின்னணியை ஆராய்வது நல்லது. புதிய தொடர்புகள் புதிய சங்கடங்களா கலாம். வெளிநாட்டு மோகம் சிலருக்குச் சங்கடத்தைத் தரலாம். சமநிலை அவசியம்.

அதிஷ்ட எண். 1

### தனு

வீடு மாறவேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்யும். அதற்காக அவதிப்பட வேண்டுமா? இப்போ திருக்கும் சந்தடியில் கொஞ்சம் தாமதிப்பது நல்லது. இடம்பட வீடெடேல் என்று ஔவைப் பிராட்டியார் சொன்னதை மறக்க வேண்டாம். மனைவி சொல் எப்போதும் சரியாக இருக்கும் என்று சொல்ல முடியுமா? சில சமயங்களில் அதீத ஆசையாயுமிருக்கலாம். எதற்கும் தீர ஆலோசித்து முடிவெடுப்பது புத்திசாலித்தனம்.

அதிஷ்ட எண். 3

### மகரம்

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் இந்தச் சமயத்தில் கடவுளின் தயவை நாட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கத்தான் செய்யும். அப்படிப்பட்ட நாட்கள் இவை. பெரியவர்கள் துணையும் தேவைதான். அறிவுரை சொல்வதற்கு ஒருவர் வருவார் என்றால் ஏதோ உந்து சக்தி இருக்கிறதுதான். பொருள் பண்டம் முக்கியமல்ல, பெரியாரைத் துணைக் கொளல் இதுசமயம் முக்கியம்.

அதிஷ்ட எண். 9

### கும்பம்

அட்டமத்தில் வியாழபகவான் நுழைவதைப்பற்றி சோதிடர் பலவிதமாகச் சொல்வார்கள். அவர் பெரியவர் என்பதால் கவலைப்படத் தேவையில்லை. மற்ற இருவர் துணை நிற்பதால் சில சௌகரியங்கள் ஏற்படலாம். தவ வலிமை என்றென்றும் கிடைக்கிறதென்று மற்றவர்கள் பெருமைப்படலாம். ஒரு பெரிய மனிதர் வீடு தேடி வரும் போது ஏதோ சம்பவம் காத்திருக்கிறது என்றுதான் எதிர்பார்க்க வேண்டும்.

அதிஷ்ட எண். 5

### மீனம்

குடும்பப் பிரச்னை என்று ஒன்று இருப்பதாக எண்ணும் சிலர் எதிர் பார்க்கும் நாட்கள் பறந்தோடி விட்டது. இப்போ ஒரு பெரியவர் சொன்னார். அதற்கு ஆதாரமாக சிலருக்கு சம்பவங்கள் காண்பிக்கின்றன. சகோதரர் வழியில் எல்லாருக்கும் இந்த உதவிகள் கிடைப்பதில்லை. தாயார் சேர்த்து வைத்தும் பண்பை ஒரு சிலர்தான் அனுபவிக்கிறார்கள். வெகு தூரத்திலிருந்து உறவினர் வருவது மகிழ்ச்சிதானே.

அதிஷ்ட எண். 7

# காவல்காரன்

12ம் பக்கத் தொடர்ச்சி

தான். தான் ஆளவேண்டு மென்றுதான். இதற்கு எத்தனைபேர் சாகிறார்கள்....!

இப்போது அவனை எறும்பு கடித்தே விட்டது.

மின்னல் மாதிரி ஆத்திரம் மனவெளியில் பரவிப் பாய்ந்தது.

ஒரு கையால் வேலைப் பிடித்துக்கொண்டு மறு கையால் சடாரென்று முதுகைச் சொறிந்து கொண்டான்.

குப்பனுக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. 'காவல் நேரத்தில் இவன் செய்வதைப் பார்....'

குப்பன் விழிப்பதைப் பார்த்துக் கொண்டு தான் சுப்பன் முதுகைச் சொறிந்துகொண்டான்.

குப்பனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சுப்பனை அதட்டினால் ராஜா எழும்பி விடுவார் என்கிற யோசனையில் குப்பனால் அதட்ட முடியவில்லை. தன் இடைவாளில் கை வைத்தான். இந்தக் கணத்தில் எறும்பு சுப்பனின் முதுகில் எட்டாத எட்டாத தூரத்தில் போய்விட்டது. சுப்பன், குப்பனின் கண்களையும் அவன் இடைவாளில் கை வைப்பதையும் பார்த்தான்.

கோடானுகோடித் தீ நாக்குகள் சுப்பனின் மனத்தைத் தாக்கியிருக்க வேண்டும். ஒரு கணந்தான்.

"அடே பழிகாரா...." என்று அலறியபடி தன் வேலைத் தூக்கி ஓங்கினான். ஓரிமைப் பொழுதில் குப்பன் பயங்கர அலறலுடன் நிலத்தில் சரிந்தான். தூரத்தில் நின்ற நாகனுக்கும் வேலனுக்கும் என்ன நடக்கிறது என்பது புரிய எடுத்த அந்தக் கொஞ்சநேர இடைவெளிக்குள், உள்ளேயிருந்த ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜ மகாராஜா தூக்கக் கலக்கத்துடன் வெளியே வந்தார். சுப்பன் ஆக்ரோஷத்துடன் குப்பனின் உடலிலிருந்து வேலைத் திரும்ப இழுத்து எடுக்கவுஞ் சரியாக இருந்தது. சுப்பனின் மனத்தில் தீ அணையவில்லை. என்ன செய்கிறோம் என்பதுந் தெரியவில்லை. ராஜா வருவதை அவன் எதிர் பார்த்திருக்க வேண்டும். வேலை ஓங்கி ராஜாவை நோக்கி வீச்சுடன் எறிந்தான். ராஜா ஒரு சுத்தவீரன். ஒரு சத்தமுமில்லை: நிலத்தில் உயிரற்றுச் சரிந்தான்.

இப்போது பல பக்கங்களிலுமிருந்து தட தடவென்று வீரர்கள் ஓடிவந்தார்கள். நாகனும் வேலனும் ஏதோ குழறினார்கள். கொஞ்ச நேரத்தில் சுப்பனின் அலறல் வானை எட்டியது. அரண்மனைக்குள் ஒரே கலவரம்.

அந்த, வெளியே கூடாரத்தில் இருந்த, மற்ற ராஜாதிராஜ ராஜ மார்த்தாண்ட ராஜ மகாராஜாவுக்கு இதைவிட வேறு சந்தர்ப்பம் கிடைக்குமா?, தன் படை பரிவாரங்களுடன் எளிதாகக் கோட்டைக்குள் புகுந்துகொண்டான்.

அடுத்த நாள் உள்ளே இந்த ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜ மகாராஜா சயனம். கந்தன் இந்தப் பக்கம். நந்தன் அந்தப் பக்கம். இடுப்பில் வாளுடன் கையில் வேலுடன். ஒரு தேவியுடனோ இல்லலையோ என்பது கந்தனுக்கும் நந்தனுக்குந் தெரியாது. இவர்கள் ராஜாவுக்கு காவலே தவிர அவன் செய்வது எல்லாவற்றிற்குமல்ல.

ஒரு பின் குறிப்பு:

கலாநிதி 1 எழுதிக்கொண்டிருக்கிறார். "...கல்வெட்டுச் சாசனங்களின்படி ராஜா 2 இடம் 7000 குதிரைகளும், 400 யானைகளும், 36,000 போர்வீரர்களும் இருந்தார்கள். ராஜா 1 இடம் 6500 குதிரைகளும், 350 யானைகளும், 35,000போர் வீரர்களும் இருந்தார்கள். ராஜா 2, 24 நாள் கடுஞ் சண்டைக்குப் பிறகு ராஜா 1ஐக் கொன்று... அரியாசனமேறினான் என்பது இப்போது தெரியவருகிறது.

"....ராஜா 2, ராஜா 1ஐ ஒரு மல்யுத்தத்தில் கொன்றான் என்பது இப்போது தெரியவருகிறது."

கலாநிதி 1 இந்தப்பக்கம். கலாநிதி 2 அந்தப்பக்கம். இடுப்பில் கையுடன் கையில் பேனையுடன். உள்ளே நிலத்தடியில் ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜ மகாராஜாக்கள் நிலத்துடன் 'நிலமே சயனம்.' இவர்கள் ராஜாக்களுக்குக் காவலே தவிர அவர்கள் செய்தது எல்லாவற்றிற்குமல்ல.

-நன்றி: அலை

# உலக அரங்கில்

## இமொ அரசியல் கண்ணோட்டம்

5ம் பக்கத் தொடர்ச்சி

கும் இடையில் பொருளாதார, அரசியல், நாணய ஐக்கியத்தை ஏற்படுத்துவது பற்றி மாஸ்ரிச்சில் செய்யப்பட்ட உடன்படிக்கையை உறுதிப்படுத்த டென்மார்க் பொது மக்கள் மறுத்தார்கள். அதேபோல பிரான்ஸ் நாட்டிலும் இது உறுதிப் படுத்தப்பட வேண்டுமா நிராகரிக் கப்படவேண்டுமா என்று மக்கள் மத்தியில் கருத்தறியும் வாக்கெடுப்பு எதிர்வரும் 20ம் தேதி நடத்தப்பட இருக்கிறது.

இந்த வாக்கெடுப்புக்கான பிரச்சாரங்களில் 76 வயதான பிரெஞ்சு அதிபர் மீற்றெரோங் அவர்கள் கலந்து பிரச்சாரம் செய் தார். கடந்த வியாழக்கிழமை பிரெஞ்சு ரெலிவிஷனில் நடத்தப் பட்ட நேர்முக விவாதம் ஒன்றிலும் கலந்து கொண்ட பிரெஞ்சு அதிபர் (மாஸ்ரிச் உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி பொது மக்களை கேட்டுக்கொண்டார்.) பிரச்சார முடிவில் மேற்கொள்ளப் பட்ட கணிப்புகளின்படி 55 சதவிகிதமான மக்கள் அதிபரையும் உடன்படிக்கையையும் ஆதரிப்பதாக தெரிகிறது.

இங்கு பிரிட்டனிலும் பிரதமர் மேஜர் மஸ்ரிச் உடன்படிக்கை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் அவரது கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் அவருக்கு எதிர்ப்பு பலமாக இருக் கிறது. செப்டம்பர் 20ம் தேதியின் பின் பிரிட்டனின் போக்கு உறுதி யாக தெரியவரும்.

# வீணைக் கச்சேரி

(நமது நிருபர்)

லண்டன் நர்த்தன கலாலயாவும், நாதவித்தியாலயாவும் இணைந்தளிக் கும் சங்கீத வித்துவான் திருமதி மாலினி தனபாலசிங்கத்தின் வீணைக்கச்சேரி இம்மாதம் 20ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கிங்ஸ்பரி பேகொன் லேன் கிங்ஸ்பரி ஹை அனெக்சில் நடைபெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொற்சதுரங்கம் 4

தொகுத்தவர்:- ஜனா

செப்டம்பர் 23ந் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு பரிசு 20 பவுண் (£ 20)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | | ■ | 3 | | 4 | |
| | ■ | ■ | 5 | ■ | | 6 | ■ | | ■ | | ■ |
| | 7 | 8 | ■ | ■ | ■ | ■ | 9 | | | | |
| ■ | | ■ | 10 | 11 | ■ | 12 | | | ■ | | 13 |
| 14 | | ■ | 15 | | 16 | | | | ■ | ■ | 17 |
| | | 18 | ■ | 19 | | ■ | | ■ | 20 | ■ | ■ |
| ■ | | 21 | ■ | | | 22 | ■ | 23 | | | |
| ■ | | | 24 | ■ | | | 25 | ■ | | ■ | |
| ■ | ■ | ■ | 26 | 27 | ■ | | | | 28 | ■ | |
| 29 | | | | | ■ | ■ | | ■ | | | 30 |
| ■ | ■ | | 31 | ■ | 32 | | | ■ | | ■ | ■ |
| 33 | | 34 | | ■ | | 35 | ■ | 36 | | | ■ |

**உங்கள் முகவரி**

பெயர் :.................................................

முகவரி :.................................................

.................................................

.................................................

.................................................

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

சொற்சதுரங்கம்-3

THAMIZHOSAI
253 WESTERN AVENUE
LONDON W3 0PP

## இடமிருந்து வலம்:

1. புலர்ந்தால் மாங்கல்யம் இழக்க நேரிடும் என்று புலராமல் பொழுதை நிறுத்திய பத்தினி.(4)
2. இந்த மகாராணாவின் ராணிக்காக விஷத்தை உட்கொண்டான் கண்ணன்.(2)
3. மும்மூர்த்திகளை குழந்தைகளாக்கிய கற்புக்கரசி.(4)
6. இனிமைக்கு மறுபெயர் இதுவோ?.(2) (தலைகீழ்)
8. கைவண்ணமும் கால்வண்ணமும் காட்டியவர் கம்பரால்.(3) (தலைகீழ்)
9. இதை மணந்து 4 மேலிருந்து கீழ் மணாளன் ஆனார்.(5)
10. இந்த இரு எழுத்துக்களையும் ஓதினால் விமோசனம் பெறலாம் என்பார் சைவர்.(2)
12. ஒரு வகை சைந்நியம் போரில்.(3)
13. இத்தகைய செயல் கூடாது கடினமானது.(2) (தலைகீழ்)
14. அவை என்றது மருவி இன்று இப்படி அழைக்கப்படுகிறது.(2)
15. லீலாவதியின் புதல்வன் கருவில் அரிநாமம் கேட்டவன்.(6)
18. தொன்று தொட்டு குடும்பங்களை பிரிப்பது.(3) (தலைகீழ்)
19. அவர்களுடைய.(2)
21. தாண்டினால் விரைந்து செயல் புரியலாம்.(2) (தலைகீழ்)
22. சிவனை இப்படியும் அழைப்பர் தமிழர்.(3) (தலைகீழ்)
23. ஆதியில் உருவானது.(4)
24. சவை நடுவே நீட்டோலை வாசிக்காமல் நின்றால் மரமாகலாம் இதுவுமாகலாம்.(3) (தலைகீழ்)
25. ரதியின் காதலனுக்கு இன்னொரு பெயர்.(3) (தலைகீழ்)
26. பாய்ந்தவருக்கு தெரியும் இது.(2)
28. இந்த பொடிக்கூறை வெண்பல்தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார் என்றார் சூடிக்கொடுத்த சுடர்கொடி.(4) (தலைகீழ்)
29. மதுரையை எரித்த கண்ணகிபோல், தன்னைக் காப்பாற்றியபின் நெருங்கிய வேடனை எரித்த பத்தினி.(5)
30. பெண்களின் விழிகளுக்கு ஒப்பிடுவர்.(3) (தலைகீழ்)
31. மடை இதில் ஒரு வகை.(2) (தலைகீழ்)
32. ஒருவர்/பொருள் நிலை நின்ற இடம்.(3)
33. ஓவியம், இயல், இசை, நாட்டியம் இந்தவகை.(4)
35. எல்லாவற்றிற்கும் இது உண்டு- தாயன்பு நீங்கலாக.(2) (தலைகீழ்)
36. நஞ்சுடைமை தானறிந்து கரந்துறைவது.(3)

# தவறு


பசியால் தவறு செய்பவன்
கைதி ஆகிறான்
பல ஆசைகளால் தவறு செய்பவன்
பதவி அடைகிறான்.

சிறு தவறு செய்பவன்
சிறையில் வாடுகிறான்
பெருந்தவறு செய்பவன்
பெரும் பதவியிலிருக்கிறான்.

பசியால் தவறு செய்பவனை
ஏளனமாக இவ்வுலகம் பார்க்கிறது
பதவிக்காக தவறு செய்பவனை
ஏக்கத்துடன் அதே உலகம் பார்க்கிறது.

என்று இவர்களை
இனம் காண்கிறதோ
அன்று தோன்றும்
ஒரு புதுஉலகம்.

-சுகு



## மேலிருந்து கீழ்:

1. கானகத்துக் காரிருளில் காரிகையை கைவிட்டுப் போன வேந்தன்.(3)
2. தசாவதாரத்தில் ஒரு அவதாரம்.(2)
3. இடமிருந்து வலம் 25க்கு இன்னொரு பெயர்.(5)
4. குந்திதேவி மூத்தவனை பெற்றது இவரால்.(4)
5. காகத்தை வாகனமாக்கிக் கொண்டவர் ஏற்றியும் வைப்பார் இறக்கியும் வைப்பார்.(2) (தலைகீழ்)
6. இருக்காது என்பவர் இருளை மறப்பாரோ?.(2) (தலைகீழ்)
7. திருநீலகண்டர் இறைவன் கொடுத்ததை தொலைத்தது இவ்வகையைச் சேர்ந்தது.(6)
9. மேலிருந்து கீழ் 24 பெற்ற மகன்.(4)
10. வேடன் கொண்டு வந்த புறாவிற்காக தன்னைக் கொடுத்த சக்கரவர்த்தி.(2)
11. நாராயணனின் நாமங்களில் ஒன்று.(4)
12. நீதிக்கும் ராசிக்கும் சொந்தமோ?.(2)
14. விநாயகருக்கு இது மின்னல்போல் ஒளி வீசுமாம் என்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.(2)
16. தேவகியை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தியவன்.(4)
17. கூற்றத்தை வெற்றி காணும் பேராற்றல் இதன் வலிமையினைக் கைக்கூடப்பெற்றவர்க்கு.(3) (தலைகீழ்)
18. இன்பமும் துன்பமும் மாறிவருவது இந்த யோகத்தால்.(3)
20. தான் முற்பிறப்பில் செய்த தவத்தின் அளவாகவே இருக்குமாம் இது.(3,4)
22. தன்னிடம் உள்ளதை தன்பால் இரந்தோர்க்கு உவப்புடன் கொடுத்தல் அல்லாது உயிர்க்கு ஊதியம் என்பது எதுவுமில்லை என்பது வள்ளுவர் வாக்கு.(3)
24. கணையாழியைக் கைவிட்டு கஷ்டப்பட்ட காவியத்து நாயகி.(5)
25. பன்னிரு ராசிகளில் ஒன்று.(4)
27. மறைந்தவரை நினைவூட்டுவது இதில்.(2)
30. இது எழுதியவாறே காண் என்பது தமிழ் மூதாட்டியின்வாக்கு.(4) (தலைகீழ்)
32. வாமனன் மூன்றாவது அடி வைத்தது இதில்.(2)
35. ஒப்பிடுவதற்கும் உபயோகமாகும் வைப்பதற்கும் உபயோகமாகும்.(2) (தலைகீழ்)

# சொற்சதுரங்கம் 3

## விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ரி | மு | க | ன் | ■ | அ | க | த் | தி | ய | ர் |
| வி | ■ | ய | ■ | மா | ■ | தி | ■ | ■ | ர | ■ | ய |
| தை | ய | ல் | ■ | ர | ■ | க | ற் | ற | வி | த் | தை |
| ■ | ■ | ■ | யி | சே | ■ | மா | ■ | ■ | ய | ■ | னி |
| ■ | அ | ■ | வா | ■ | அ | ன் | பு | ■ | ம் | ட | வ |
| வா | ன் | கு | ரு | வி | ■ | ■ | பா | ல் | ■ | ■ | ■ |
| ■ | ன | ■ | தி | ரு | மா | ல் | ■ | பு | ழு | தி | ■ |
| அ | ம் | பு | ■ | ந் | ■ | மா | டு | ■ | அ | ரு | மை |
| ■ | ■ | வி | த் | து | ■ | ■ | ட் | ■ | ■ | வோ | ■ |
| ■ | கு | ■ | ■ | ■ | அ | வ | ல | ட் | ச | ண | ம் |
| எ | ரு | மை | ■ | ரு | ■ | ர | ■ | ■ | பி | ம் | ந |
| ண் | ■ | இ | ந் | தி | ர | ன் | ■ | வை | ■ | ■ | ■ |

சொற்சதுரங்கம் 3க்கான சரியான விடையை அனுப்பி £60 பரிசைப் பெறும் அதிஷ்டசாலி வாசகர்

திருமதி நா.பாலசிங்கம்
549B High Road
Wembley
Middlesex
HA0 2DJ

## அபிவிருத்தி வேலைகள் தடை

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு புனர் வாழ்வளிக்கவும், அப்பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிப்பதற்கும், தேவையான நிதி உதவிகளை வழங்க நட்பு நாடுகள் தயாராகவுள்ளன. ஆனால் அப்பிரதேசங்களில் நிலவும் அமைதியற்ற சூழல், இதனை அமுல்படுத்த தடையாக உள்ளதென அம்பாறையில் கூட்டமொன்றில் ஜனாதிபதி பிரேமதாச கூறினார்.

தான் பதவிக்கு வந்து, வட-கிழக்கு பிரச்னையை பேச்சு மூலம் தீர்க்க எடுத்த முயற்சி பலனளிக்கவில்லையாயினும் தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் இவ்வருட இறுதிக்குள் வட-கிழக்கு மக்களுக்கு சுபீட்ச வாழ்வு கிடைக்கும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஐ.தே.க. வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பிரேமதாச மேலும் கூறுகையில்;

வட-கிழக்கு மக்கள் அகதி முகாம்களிலும், வேறிடங்களிலும் படும் துயரங்களை நன்கு அறிவேன். இதற்காகவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த தயாரத்னவை புனர்வாழ்வு அமைச்சராக நியமித்துள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகச் செய்திகள் சில வரிகளில்....

பழம்பெரும் தமிழ்த் திரைப்பட இயக்குநரும், எம்.ஜி,ஆரின் நெருங்கிய நண்பனாகவும் விளங்கிய ப.நீலகண்டன் சென்னையில் மாரடைப்பால் காலமானார்.

சென்னையில் செப்.5ம் தேதி 'ஆசிரியர் தினம்' கொண்டாடப்பட்டபோது 228 ஆசிரியர்களுக்கு ''நல்லாசிரியர்' விருதும், வெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டன. விழாவில் கலந்து கொள்வதாக இருந்த முதல்வர் ஜெயலலிதா உடல் நலக்குறைவால் வரமுடியாது போனதால் தமிழக நிதி அமைச்சர் இரா.நெடுஞ்செழியன் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

மாநகராட்சிப் பள்ளிக்கூடங்களின் கல்வி தரத்தை உயர்த்த இந்த ஆண்டு சென்னை மாநகராட்சி ஆறு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

## பிள்ளையார் சிலைகளின் ஊர்கோலம்

சென்னையில் ஆகஸ்டு 31ம் தேதி தொடங்கி ஏழு நாட்களுக்கு விநாயக சதுர்த்தி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் இறுதி நாளான செப்டம்பர் 6ஆம் தேதியன்று இரண்டாயிரம் பிள்ளையார் சிலைகளுடன் பிரமாண்டமான ஊர்வலம் நடைப்பெற்றது. இந்தச் சிலைகள் நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஆங்காங்கே விநாயக சதுர்த்திகென உருவாக்கப்பட்டு, பூஜை செய்யப்பட்டவை. முத்து விநாயகர், செல்வ விநாயகர், மாப்பிள்ளை விநாயகர், மாணிக்க விநாயகர்,கல்யாண விநாயகர் என்று வித விதமாக விநாயகரின் திருக்கோலங்கள் அமைந்த சிலைகளின் ஊர்வலம் பிற்பகல் ஒன்றரை மணிக்குத் தொடங்கி மாலை ஆறு மணியளவில் சென்னை மெரினாக் கடற்கரை சீரணி அரங்கத்தின் பின்புறம் முடிவடைந்தது. பிறகு இரவு ஒன்பது மணி வரை அச்சிலைகள் கடலில் கரைக்கப்பட்டன. ஊர்வலப்பாதையில் மசூதி ஒன்று இருக்கிறது. அதனால் அங்கே ஊர்வலம் போனபோது லேசான பதட்டநிலை உருவானது. ஆனால் காவல் துறையினரின் தலையீட்டால் நிலைமையை சீராக்கி ஊர்வலம் தொடர்ந்தது. லட்சக்கணக்கான பக்தர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மன்றத்தில் ஒலித்த...

11ம் பக்கத் தொடர்ச்சி

அதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பு- அதாவது 1972ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் தேதியை- மகாத்மா காந்தியடிகள் பிறந்த தினத்தை- காந்திய வழியில் எம்மை வழி நடத்திய எமது தலைவர் தெரிவு செய்து அந்தத் தினத்திலே தமது பதவியை ராஜினாமா செய்தார்.

ஆனால், அவர் எதைச் செய்ய வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டாரோ அதை அந்த அரசாங்கம் செய்தது மாத்திரமல்ல, இடைத் தேர்தலையும் இரண்டு வருடங்களாக நடத்தாமல் பிற்போட்டுக் கொண்டே வந்தார்கள். அந்த அரசியலமைப்பையொட்டி தமிழ் மக்கள் சனநாயக ரீதியாக தங்கள் கருத்தை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பளிக்க மறுத்தார்கள். இறுதியில் 1975ஆம் ஆண்டு தை மாதத்தில் அந்தத் தேர்தலில் அரசாங்கத்தின் முழுச் சக்தியும் எமக்கெதிராக உபயோகிக்கப்பட்டது.

75 வீதத்துக்கு மேலான வாக்காளர்கள் திருவாளர் செல்வநாயகம் அவர்களுக்கு வாக்களித்து அவரை அமோகமாக வெற்றிபெறச் செய்தார்கள். அப்படி வெற்றி பெற்ற நேரத்திலே திருவாளர் செல்வநாயகம் அவர்கள் 'தமக்குக் கிடைத்த இந்த வெற்றியைத் தமிழ் தேசிய இனம் தனது இறைமையை நிலை நாட்டித் தனது சொந்த ஆட்சியை ஏற்படுத்தத் தமக்களித்த கட்டளையாகும் என்று கூறினார்.

## வட்டுக்கோட்டை தீர்மானம்

இதைத்தொடர்ந்து, இந்தப் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் வரக்கூடிய விதத்தில், இலங்கையின் சுதந்திர தினமாகக் கருதப்பட்ட 1976ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் தேதி தமிழர் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கையெழுத்திட்டு 'சுதந்திர இறைமையுள்ள, மதசார்பற்ற சோசலிச தமிழீழ அரசை மீள அமைப்பதற்கான மக்களாணையாக இக்காங்கேசன்துறை இடைத்தேர்தலை இந்த அரசு தீர்மானிக்கிறது' என்ற ஒரு தீர்மானம் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால், வழக்கம் போல அந்தத் தீர்மானம் விவாதத்துக்கு வராமல் இருக்கும் வகையில் அரசாங்கம் தட்டிக்கழித்து வந்தது. தனியார்



பிரேரணை கொண்டு வரப்படுகின்ற தினங்களிலே பாராளுமன்றத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் எப்படி அன்று அமைந்தன என்று தங்களுக்குத் தெரியுமென நான் நினைக்கிறேன். அன்றைய ஆளும் கட்சி உறுப்பினரொருவரால் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தின் மீதான விவாதத்திலே உறுப்பினர்கள் தேவையற்ற பேச்சுக்களை நடத்தி அதற்கடுத்திருந்த எமது உறுப்பினர்களின் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாதவாறு தடுத்தார்கள். அந்த வருடம் முழுவதும் எமது தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தினார்கள்.

இந்தச் சூழ்நிலையிலேதான் 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநில மகாநாடு நான் பிறந்த இடமான வட்டுக்கோட்டைத் தொகுதியிலே நடைபெற்றது. அந்த மகாநாட்டிலே கடந்த 30 ஆண்டுகாலமாக இலங்கை அரசியலிலே நடந்தேறிய நிகழ்ச்சிகள் அத்தனையுமே மிக நுணுக்கமாக ஆராயப்பட்ட பின்பு தமிழ் தேசிய இனத்தின் மாற்றமுடியாத ஒரு முடிவாக நாம் ஒரு முடிவுக்கு வந்தோம்.

## ட்ரயல் அட் பார்

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே தமிழீழ அரசை அமைப்பது என்ற இந்த முடிவை ஒட்டி அன்றைய அரசாங்கம் ஒரு விசித்திரமான நடவடிக்கையை எடுத்தது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றே அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஓர் அரசாங்க வர்த்தமானி வெளியிடப்பட்டது இப்படியான தீர்மானம் நிறைவேற்றுவது சட்ட விரோதம் என்று. அதற்கு இருபது ஆண்டுகள் சிறைக்கு அனுப்பக் கூடிய தண்டனையை விதித்து ஓர் அவசர காலச் சட்ட விதியை அரசாங்கம் நிறைவேற்றியது. எங்கள் மகாநாடு வட்டுக்கோட்டையில் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் இந்தச் சட்ட விதிகள் அரசாங்க வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டன. அந்தச் சட்டவிதிகளின் கீழ் இந்தத் தீர்மானத்தை பத்திரிகைகள் பிரசுரிக்காது தடை செய்யப்பட்டது. அந்தத் தீர்மானத்தைப் பிரசுரிப்பதோ வெளியிடுவதோ தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டது. அதற்கு ஒரே ஒரு பதிலைத் தான் நாங்கள் கொடுக்க முடியும். அந்தப் பதிலை நாங்கள் கொடுத்தோம். எந்தத் தீர்மானத்தைப் பிரசுரிப்பது சட்டவிரோதம் என்று அரசாங்கம் அவசரகாலச் சட்டவிதிகளைக் கொண்டு வந்ததோ அந்தத் தீர்மானத்தை ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரமாக அச்சடித்து நாடு முழுவதும் நாமே முன்னின்று விநியோகித்தோம். 1976ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதி குடியரசு தினத்தன்று சட்டத்தை மீறி அந்தத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோமென்று எங்களில் சிலரைக் கைது செய்தார்கள். என்னையும், சாவகச்சேரிப் பிரதிநிதி (திரு வி.என்.நவரத்தினம்) ஊர்காவற்றுறைப் பிரதிநிதி (திரு கா.பொ. இரத்தினம்) பருத்தித்துறைப் பிரதிநிதி (திரு கே.துரைரத்தினம்) ஆகியோரையும் கைது செய்தார்கள். எங்கள் நான்கு பேரையும் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு வந்து பஜெட் றோட்டிலே அடைத்து வைத்தார்கள். பத்து நாட்கள் அவ்விடத்தில் எங்களை அடைத்து வைத்தார்கள். இந்த விடயத்தில் பிரதமர் அவர்கள் நேற்றுக் குறிப்பிட்ட அவர்களுடைய அனுபவத்திற்கும் எங்கள் அனுபவத்திற்கும் இடையில் கொஞ்சம் தொடர்பு இருப்பதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. பஜெட் றொட் சிறைச்சாலையில் தனித்தனி அறைகளில் பலர் அடைத்து வைக்கப்பட்ட அநியாயத்தைப் பற்றி நேற்றுப் பிரதமர் அவர்கள் இந்தப் பேரவையிலே எடுத்துச் சொன்னார்கள். எங்கள் நால்வரையும் கொண்டு வந்து ஒவ்வொரு மூலைக்கும் ஒவ்வொருவராக தனித்தனி அறைகளில் அடைத்தார்கள். அப்படி அவர்கள் அடைத்து வைத்த அந்தப் பத்து நாட்களும் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கவில்லை. காவலுக்கு நின்றவரைத் தவிர வேறு மனிதத் தொடர்பு எங்களுக்கு இல்லாத வகையில் எங்களை வைத்தார்கள்.


## நீதிபதிகள் தீர்ப்பு

இவ்வளவுக்கும் நாங்கள் செய்த குற்றம் என்ன? ஒரு துண்டுப் பிரசுரத்தைப் பொது மக்களுக்கு கொடுத்ததுதான். அதன் பின்னர் பிரசித்திபெற்ற "ற்றயல் அற் பார்" என்ற வழக்கில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் அந்த அவசரகாலச் சட்டத்தின்கீழ் எங்களைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். அதில் முதல் எதிரியாக நிற்கும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது. எங்களை அவ்விதம் நிறுத்தி எங்களுக்கு எதிராக மிகவும் பாரதூரமான குற்றச் சாட்டுக்களைக் கொண்டு வந்தார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களிலே நாம் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் இருபது வருடச் சிறைவாசம் எங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும். அதற்கும் மேலாக எங்களின் சொத்து முழுவதும் பறிமுதல் செய்யப்படும் என்றும் விதி இருந்தது. அந்த நேரத்தில் தான் இந்த நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞர்களாக இருந்த அறுபத்தேழு சட்டத்தரணிகள் எங்களுக்காக வாதாட ஆஜரானார்கள். திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில், திரு ஜி.ஜி.பொன்னம்பலம், திரு எம்.திருச்செல்வம், திரு ஆர்.ஆர்.குறொசெற் தம்பையா, திரு சாம் ஜே.கதிர்காமர், திரு நவரத்தினராசா ஆகிய இந்த ஆறு இராணி வழக்கறிஞர்களோடு முன்னாள் சொலிசிற்றர் ஜெனரலாக இருந்த திரு புள்ளே நாயகம் மற்றும் எனது நண்பர் இன்றைய நல்லூர் பிரதிநிதி திரு எம்.சிவசிதம்பரம் ஆகிய அறுபத்தேழு சட்டத்தரணிகள் இது உரிமையைப் பாதிக்கின்ற விடயம் என்ற அடிப்படையில் நீதிமன்றத்தில் தோன்றி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த வழக்கை நடத்தினார்கள்.

## வழக்கு வாபஸ்

இரண்டு அம்சங்களிலே நாங்கள் அந்த வழக்கைத் தாக்கினோம். என்மீது குற்றம் சாட்டப்பட்ட பொழுது நான் கூறினேன்; "இரண்டு காரணங்களுக்காக நான் இந்த நீதி மன்றத்தை அங்கீகரிக்கவில்லை. ஒன்று இந்த நீதி மன்றம் சட்டரீதியான ஒரு அரசியலமைப்பின் கீழ் அமைக்கப்படவில்லை. ஆனபடியால் என்னை விசாரிக்க அதற்கு அதிகாரமில்லை. இரண்டாவதாக இந்த நீதிமன்றம் சட்ட விரோதமான அவசரகால விதிகளின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனபடியால் இந்த நீதிமன்றத்துக்கு என்னை விசாரிக்க அதிகாரம் இல்லை. ஆனபடியால் நான் குற்றவாளியா சுற்றவாளியா என்று கூற மாட்டேன்" என்று அந்த வழக்கிலே நான் கூறினேன். அதைத் தொடர்ந்து எங்கள் சட்டத்தரணிகள் வாதித்தார்கள். பல நாட்கள் நடைபெற்ற பிரசித்தித்தி பெற்ற இந்த வழக்கில் அந்த மூன்று நீதிபதிகளும் தீர்ப்பு வழங்கினார்கள். 1971ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டை ஆண்டு வந்த அவசரகாலச் சட்டப் பிரகடனம் சட்ட விரோதமானது என அந்த நீதிபதிகள் தீர்ப்பு வழங்கி தமக்கு எங்கள் வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லை எனக் கூறி என்னை விடுதலை செய்தார்கள்.

அந்த நீதிமன்றத்திலே திரு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் எங்கள் சார்பில் அந்த அவசரகாலச் சட்ட விதிகளுக்கு எதிரான நியாயங்களை எடுத்துக் காட்டி வாதாடினார்கள். திரு திருச்செல்வம் அவர்கள் அந்த அரசியல் அமைப்புக்கு எதிரான- அரசியல் அமைப்பு என்று நான் இங்கு குறிப்பிடும் பொழுது எந்த அரசியல் அமைப்பின் இடத்தில் ஒரு புது அரசியல் அமைப்பைக் கொண்டு வருவதற்கு இன்று சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அரசியல் அமைப்பையே குறிப்பிடுகிறேன்- நியாயங்களை எடுத்துக்கூறி அந்த அரசியலமைப்பு செல்லுபடியாகாது என்ற வாதத்தை நடத்தினார்கள். அதனையொட்டி அந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. திரு திருச்செல்வம் அவர்கள் மூன்று முக்கியமான காரணங்களினால் அந்த அரசியல் அமைப்புச் செல்லாது என வாதாடினார்கள். மூன்று நீதிபதிகளும்



அளித்த அத்தீர்ப்பில் இது ஓர் அரசியற் பிரச்னை; சட்டப்பிரச்சனையல்ல; ஆனபடியால் தாம் இதுபற்றி எந்தத் தீர்ப்பும் வழங்கவில்லை என கூறினார்கள்.

## தேர்தல் விஞ்ஞாபனம்

அதன் பின்பு அரசாங்கம் இத்தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தது. ஆனால் என்ன காரணத்துக்காகவோ, உயர் நீதிமன்றத்திலே அந்தத் தீர்ப்பு மாற்றியடைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்த அந்த நேரத்திலே, நாட்டின் சட்டமா அதிபதி, "இந்த எதிரிகள் மீதான வழக்கை நாம் வாபஸ் பெறத் தீர்மானித்துவிட்டோம்" என்று உயர் நீதிமன்றத்திலே கூறும் சூழ் நிலை ஏற்பட்டது. ஏனென்றால், அரசாங்கத்தின் அவசரகாலச் சட்டம் அத்தனையும் செல்லாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலையிலே அரசாங்கம் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்திலே அவர்கள் எப்படியாவது அந்தத் தீர்ப்பை மாற்றியமைக்கச் செய்ய வேண்டுமென்ற காரணத்தால் இப்படிக்கூட நீதிமன்றத்திலே கூறப்பட்டது. நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை மாற்றினாலும் எமக்கெதிரான வழக்கு கைவிடப்பட்டது.

அதன் பின்பு 1977ஆம் ஆண்டு தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் முன்னிலையில் நாம் ஒரேயொரு கட்டளையை நாடிச் சென்றோம். எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து வாசிக்கின்றேன்.

"எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் இக்காட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஒரு சமதர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த் தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது"

## தமிழினத்தின் இறைமை

இது தான் தேர்தல் நேரத்திலே மக்களிடம் நாங்கள் கேட்ட கட்டளை. இக்கௌரவ சபையில் நேற்று உரையாற்றிய கௌரவ பிரதம அமைச்சரவர்கள் தமக்கு மக்கள் அளித்த கட்டளையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் புதிய அரசியலமைப்பொன்றை யாப்பதற்கு மக்களிடமிருந்து கட்டளையைப் பெற்றார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே சந்தேகத்திற்கிடமில்லாமல் அது இடம் பெற்றிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே இந்நாட்டின் தமிழ் மக்களுடைய பிரச்சனையைப்பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அதனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பின்னர் அதன் கொள்கை விளக்கவுரையிலும் தமிழ் மக்களின் நியாயங்களைக்களை நீக்கும் வகையில் சர்வகட்சி மாநாடொன்று கூட்டப்படுமென்று வாக்குறுதியை கூறினார்கள்.

இந்த அடிப்படையிலே ஒரு அரசியலமைப்பை யாக்கத் தொடங்குமுன் அதற்கு முன்னோடியாக இந்த நாட்டிலேயுள்ள இரு தேசிய இனங்களுக்குமிடையிலான ஆளும் உரிமைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலே வழிவகைகளைக் கண்டிருக்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் தவறிவிட்டது. அந்த வகையிலே நடவடிக்கை எடுக்காது வேறு காரணங்களுக்காக அவசரத்தில் இந்த அரசியலமைப்பு யாக்கப்பட்டிருக்கிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த அரசியலமைப்பு யாக்கப்பட்ட பின்னணியை எடுத்துக் கூறிக் கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இந்த அரசியலமைப்பு விவாதத்தை ஒட்டி எமது நிலையை எடுத்துக்கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் ஆரம்பத்தில் கூறியதுபோல இன்று நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தோம். அதை நிராகரித்தோம். அது எம்மைக் கட்டுப்படுத்தாது என்று கூறினோம். அதற்கு விரோதமாக மக்கள் தீர்ப்பைப் பெற்றோம். அதை நிராகரித்த காரணம் இறைமை உள்ள ஒரு தேசிய இனமாக தமிழ் தேசிய இனத்தின் சார்பிலே அவர்களின் சம்மதம் இன்றி ஓர் அரசியல் அமைப்பை யாக்கும் உரிமை இந்தச் சபைக்கு இல்லை என்பது எமது நிலை. அதைத் தெளிவாக இந்த இடத்தில் நான் கூறிவைக்க விரும்புகிறேன். ஓர் இனத்தின் இறைமையை மூன்று வகையில்தான் அழிக்க முடியும்.

ஒன்று, ஓரினம் தானாகச் சம்மதித்து அந்தச் சம்மதத்தின்பேரில் அதன் இறைமை இன்னொரு தேசிய இனத்தின் இறைமையோடு இணைந்து ஒன்றுபட்ட இறைமையாக அது அமைவது; அல்லது ஒரு தேசிய இனத்தின் இறைமை யுத்தக் களத்தில் அந்த இனம் வெற்றிகொள்ளப்பட்டு அடிமைப் படுத்தப்படுவதால் அதனுடைய இறைமை இல்லாதொழிவது; மூன்றாவதாக, அப்படியான சூழ்நிலையில் ஆக்கப்பட்ட அரசியல் அமைப்பின் கீழ் சட்டரீதியாக அந்த இறைமை இல்லை என்ற நிலை நிலைநாட்டப்படல்.

இன்றைக்கு இந்தத் தேசிய அரச பேரவை இயங்குகின்ற அரசியல் அமைப்பு இந்த மூன்று துறைகளிலும் தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்த அளவில் செல்லுபடியற்றது என்பது எமது நிலை. ஆனபடியால் இந்தத் தேசிய அரசுப் பேரவைக்கு தமிழ் தேசிய இனத்தின் சார்பில் ஓர் அரசியல் அமைப்பை யாக்க உரிமை இல்லை என்பதைத்தான் நாங்கள் கூறுகிறோம். அதனால்தான் முன்பு அரசியலமைப்புக்கு இரண்டாவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அந்த விவாதத்திற் கலந்துகொள்ள நாம் மறுத்தோம். அந்த விவாதத்தின்போது மங்களுக்கு ஞாபகம் இருக்கும் சபாநாயகர் அவர்களே, தங்களின் அனுமதியோடு இந்த சபையில் ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு நாங்கள் அந்த விவாதத்தில் கலந்துகொள்ளாமல் வெளியேறினோம்.

அடுத்த இதழில் தொடரும்

### மன்டலின் கச்சேரி



இளம் மேதை யு சிறினிவாஸின் மன்டலின் கச்சேரி நாளை சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஹென்சிங்டன் பாரதீய வித்திய பவன் மண்டபத்தில் நடைபெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழோசையின்



# மாபெரும் விளையாட்டுப் போட்டி

இடம்:

## வில்ஸ்டன் ஸ்போர்ட்ஸ் சென்ரர்

WILLESDEN SPORTS CENTRE, DONNINGTON ROAD, WILLESDEN, LONDON NW10

**காலம்: அக்டோபர் 4ம் திகதி காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை**

**5 வயது முதல் 80 வயது வரை அனைவரும் பங்கு பற்றலாம்**

* ஓட்டப் போட்டிகள்
  100 M, 200M, 400M, 800M, 1500M
* தடை ஓட்டம்
* அஞ்சல் ஓட்டம்
  4 x 100 M / 4 x 400M



கயிறடித்தோடல் *

நீளம் பாய்தல் *

பந்தெறிதல் *

கராத்தே *

* குண்டெறிதல்
* சங்கீதக் கதிரை
* மூன்று கால் ஓட்டம்
  (தம்பதிகளுக்கு மட்டும்)

சமநிலை ஓட்டம் *
(பெண்களுக்கு மட்டும்)

விநோத உடை *

கயிறிழுத்தல் போட்டி *
(11 பேர் கொண்ட குழுகளுக்கு மட்டும்)

* மிதிவண்டி மெதுவாக ஓட்டும் போட்டி *

* தலையணைச்சண்டை *

**மாலை 6 மணி முதல் 8 மணி வரை**
**பரிசளிப்பு விழா நடைபெறும்**

மதிய உணவு, சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், மதுபானம் ஆகியன பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது

பார்வையாளர் பிரவேசக் கட்டணம்
**£3**

விண்ணப்பப் பத்திரம் 14ம் பக்கத்தில் உள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்